Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

முரசு – 03 | திருவள்ளுவர் ஆண்டு 2044 வைகாசி 11 சனிக்கிழமை (25.05.2013) பக்கங்கள் 20 | ஓசை – 237

Tilko Jaffna City Hotel.
❖ Banguet Hall
❖ Conference Hall
❖ Restaurant ❖ Luxrious rooms
❖ Swimming Pool
❖ Gymnasium/Spa
70/6, K.K.S Road, Jaffna.
T.P - 0212225969
Hotline: 0212229497
E.Mail - tilkojaffna@gmail.com
Web - www.Cityhoteljaffna.com
(C/2486)

















# 13 ஆவது திருத்தத்தை வைத்து படம் காட்டுகிறது அரசு



## அரசை சாடுகிறது ஐ.தே.க.

(கொழும்பு)

13 ஆவது திருத்தச்சட்டம் குறித்து அரசு படம் காட்டுகிறது. சர்ச்சைக்கு முற்றுப்புள்ளி வைப்பதாகக் கூறி அது விடுக்கும் அறிவிப்புகள் அனைத்தும் பொய் நாடகமாகுமென ஐக்கிய தேசியக் கட்சியின் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

சர்வதேசத்தின் பிடியிலிருந்து தப்பிப்பதற்கும் இலங்கையிலுள்ள இனவாதிகளைத் தம்வசம் வைத்துக்கொள்வதற்கும்தான் அரசு இந்தக் காய்நகர்த்தலை மேற்கொள்கின்றது. எனவே, மூன்றிலிரண்டு பெரும்பான்மைப் பலமுடைய

19 ஆம் பக்கம் பார்க்க

## பிக்கு தீக்குளிப்பு

(கொழும்பு)

கண்டி தலதா மாளிகை பௌத்த விகாரைக்கு முன்பாக நேற்றைய தினம் பிக்கு ஒருவர் தீக்குளித்துள்ளார்.

ஆடு, மாடுகள் கொல்லப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே இந்தப் பிக்கு தன்மீது பெற்றோலை ஊற்றி எரித்துக் கொண்டுள்ளார்.

மோசமான எரிகாயங்களுக்கு உள்ளான அவரை அருகில் நின்றவர்கள் கண்டி மருத்துவமனையில் சேர்த்துள்ளனர்.

அவர் பின்னர் கொழும்பு தேசிய மருத்துமனைக்கு கொண்டுசெல்லப்பட்டுள்ளார்.

19 ஆம் பக்கம் பார்க்க

## வடக்கின் தேவைகள் குறித்து ஐ.நா. அதிகாரி - கூட்டமைப்பு பேச்சு

(லண்டன்)

இலங்கையில் யுத்தம் முடிவடைந்து நான்கு வருடங்கள் நிறைவடைந்த நிலையில் வட பகுதியின் மனிதாபிமான உதவிக்கான தேவைகள் குறித்து ஐ.நா.வின் முக்கிய அதிகாரி ஒருவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை நேற்றையதினம் கிளிநொச்சியில் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இரண்டு மணித்தியாலங்களுக்கு மேலாக இந்தச் சந்திப்பு நடைபெற்றிருக்கின்றது. ஐ.நா.வின் மனிதாபிமான விவகாரங்களுக்கான இணைப்பு அலுவலகத்தின் தலைமை அதிகாரியாகிய அக்னஸ் அசிக்கின் ஊனியு அம்மையாரும் அவருடனான அதிகாரிகளும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, சுரேஷ் பிரேமச்சந்திரன், எஸ்.சிறிதரன், சிவசக்தி ஆனந்தன், வினோ நோகராதலிங்கம் ஆகியோரும் இதில் கலந்து கொண்டிருந்தனர்.

மீள்குடியேற்றப் பகுதிகளின் நிலைமைகள் என்ன, எவ்வாறான உதவிகள் அங்கு தேவைப்படுகின்றன என்பதை நேரில் கண்டறிந்து மதிப்பிடுவதற்காக இந்த ஐ.நா. அதிகாரி வடபகுதிக்கு விஜயம் செய்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஏற்கனவே இவர் வட மாகாண மாவட்டங்களின் முக்கிய சிவில் அதிகாரிகள், இராணுவ அதிகாரிகள், மீள்குடியேறியுள்ள குடும்பங்கள், போரினால் பாதிக்கப்பட்ட பல்வேறு

19 ஆம் பக்கம் பார்க்க

# தேசிய ஒருமைப்பாட்டிற்கு மாகாண அதிகாரங்கள் ஆப்பு

## அரசை எச்சரிக்கிறார் கோத்தா

(கொழும்பு)

மாகாண சபைகளுக்கு இருக்கும் காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் நாட்டின் தேசிய ஒருமைப்பாட்டிற்கு அச்சுறுத்தலாக அமைவதற்கான சாத்தியக் கூறுகள் அதிகம் காணப்படுவதாக பாதுகாப்புச் செயலர் கோததாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பாதுகாப்புச் செயலர் என்ற வகையில், மாகாணசபைகளுக்கு காணி, பொலிஸ் அதிகாரங்களை வழங்குவது மோசமான தாக்கங்களை ஏற்படுத்தும் என்று அரசாங்கத்தை எச்சரிப்பது எனது பொறுப்பு என்றும், இன்னமும் பிரிவினைவாத நிகழ்ச்சி நிரல் தொடர்கின்ற சூழலில் அவர்களின் கைகளில் பொலிஸ் அதிகாரங்கள் கிடைப்பது தேசிய பாதுகாப்புக்கு கடுமையான அச்சுறுத்தலாக அமையும் எனவும் ஐலண்ட் பத்திரிகைக்கு அளித்த செவ்வியில் தெரிவித்துள்ளார். அதில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

அனைத்துலக, உள்நாட்டு அழுத்தங்களுக்கு அடிபணிந்து போகாமல் அரசாங்கம் 13

19 ஆம் பக்கம் பார்க்க

## யூன் முதல் அமுலாகிறது வடமாகாண புகை பரீட்சிப்பு

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்திலும் எதிர்வரும் முதலாம் திகதியில் இருந்து வாகனங்களின் புகை பரீட்சித்தல் திட்டம் நடைமுறைப் படுத்தப்படவுள்ளது. இலங்கையில் ஏனைய எட்டு மாகாணங்களிலும் வாகனங்களின் புகை பரீட்சித்தல் செயல்முறை நடைமுறை பின்பற்றப்பட்டு வருகின்ற

19 ஆம் பக்கம் பார்க்க

## அலட்சியப் போக்குடன் நடத்துகிறது அரசாங்கம்

### கிழக்கில் ஹக்கீம் அதிருப்தி

(கொழும்பு)

அரசாங்கம் தங்களை அலட்சியப் போக்குடன் நடத்துவதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் நீதியமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாணம் சாய்ந்தமருதில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நூலகத்திறப்பு விழா நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தனதுரையில் மேலும் தெரிவித்ததாவது,

கிழக்கு மாகாணத்தில் இன்று ஐந்து உள்ளூராட்சி மன்றங்களின் ஆட்சியை முஸ்லிம் காங்கிரஸ் கையில் வைத்துக்கொண்டிருக்கின்றது. ஆனால் அரசாங்கம் எங்களை அலட்சியப் போக்குடன் நடத்துகின்றது.

உண்மையான நண்பர்கள் யார் என்பதை இந்த அரசாங்கம் பிரித்தறிந்துகொள்ள வேண்டும். ஆனால் நாங்கள் தொடர்ந்தும் எங்களுக்கு அநியாயம் இடம் பெறும்போது பார்த்துக்கொண்டிருக்க முடியாது எனத் தெரிவித்தார்.

உள்ளே...

தரம் 5 புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள்

# வேப்பமரத்திலிருந்து பால் வடியும் அதிசயம்

## வற்றாப்பளையில் புதுமை



(முள்ளியவளை)

வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலய வளாகத்திலுள்ள சிறிய வேப்பமரமொன்றிலிருந்து பால் வடிந்துகொண்டிருக்கிறது.

ஆலயம் அமைந்துள்ள இடத்திலிருந்து ஈசான மூலையில் நந்திக்கடல் கரையோரமாக மஞ்சத்திற்கு பின்புறமாக உள்ள சிறிய வேப்பமரத்திலேயே இந்த பால் வடியும் அதிசயம் நிகழ்கிறது.

இந்தக் காட்சியைக் காண்பதற்காக பெருமளவு மக்கள் அப்பகுதியில் குவிந்த வண்ணமுள்ளனர். (12,40,125)



# யாழ்.நகர வர்த்தக ஊழியர்களின் ஒய்வுநாள் பறிபோகும் அபாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ். நகர்ப்பகுதியில் சில வணிக நிலையங்கள் ஞாயிற்றுக கிழமைகளில் தமது வணிக நிலையங்களைத் திறந்து வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுவதாகத் தெரிவிக்கப்படும். அதே வேளை ஏனைய வணிக நிலையங்களும் அவற்றைக் காரணம் காட்டி ஞாயிற்றுக்கிழமைகளில் தமது வணிக நிலையங்களையும் திறந்து வியாபார நடவடிக்கையில் ஈடுபடப் போவதாகத் தெரியவருவதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இவ்வாறு ஒருசில வணிக நிலைய உரிமையாளர்களின் நடவடிக்கை காரணமாக ஒட்டுமொத்த ஊழியர்களும் விடுமுறையின்றி பாதிக்கப்படும் நிலை தோன்றியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வழமையாக யாழ். நகரில் இயங்கும் வணிக நிலையங்களுக்கு சனிக்கிழமை அரை நேரத்துடன் மூடவும் ஞாயிற்றுக்கிழமைகளில் முழுநாள் மூடவும் யாழ். வணிகர் கழகத்தினால், தீர்மானிக்கப்பட்டிருக்கின்ற போதும் சனிக்கிழமை முழு நாளும வியாபார நடவடிக்கையில் ஈடுபடும் வணிக நிலையங்கள் ஞாயிற்றுக் கிழமைகளில் தமது ஊழியர்களுக்கு விடுமுறை வழங்குகின்றன.

இருந்தும் இந்த நடைமுறையைக் குழப்பும் விதத்தில் சில வணிக நிலையங்கள் செயற்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு செயற்படும் வணிக நிலையங்களிளை காரணம் காட்டி ஞாயிற்றுக் கிழமைகளில் தங்களது வணிக நிலையங்களைத் திறந்து வியாபார நடவடிக்கையில் ஈடுபடப்போவதாக சில உரிமையாளர்கள் தெரிவித்து வருகின்றனர்.

எனவே இவ்வாறு நிலைமை ஏற்படுமானால் விடுமுறையின்றி ஒட்டுமொத்த ஊழியர்களும் பாதிககப்படும் நிலை ஏற்படும். எனவே சம்பந்தப்பட்ட வணிக நிலையங்களை ஞாயிற்றுக்கிழமைகளில் முழுமையாக மூடி வணிகர் கழகத்தின் நடைமுறைக்குச் சம்பந்தப்பட்ட தரப்பினரால் ஆதரவு வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

ஏற்கனவே இவ்வாறான நடைமுறையைக் கண்காணிக்க யாழ். வணிகர் கழகம் முயற்சி செய்த போதும் எதுவும் கைகூடவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.(பா)

# நடமாடும் சேவை விரைவில் உடுவில் மக்களுக்கு வாய்ப்பு

(யாழ்ப்பாணம்)



உடுவில் பிரதேச செயலாளர் பிரிவில் நடமாடும் சேவையொன்றை நடத்துவதற்காக முன்னேற்பாட்டு நடவடிக்கைகள் பிரதேச செயலகத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கிராம அலுவலர்கள் தெரிவித்துள்ளனர்.

உடுவில் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்படட்டவர்களில் பிறப்புச் சான்றிதழ் இல்லாதவர்கள், திருமணப் பதிவுகளை மேற்கொள்ளதவர்கள் மற்றும் இறப்புக்களை பதிவு செய்யாதவர்கள் சம்பந்தமான விபரங்கள் கிராம அலுவலர்களினால் திரட்டப்பட்டு வருவதுடன் தேசிய அடையாள அட்டை பெறாதவர்களின் விபரங்களும் பெறப்பட்டு வருகின்றன.


பிறப்புச் பத்திரம் இல்லாதவர்கள் மற்றும் அவர்களுக்கு உரிய இடங்களில் பிறப்பு பதிவு செய்யப்பட்டுள்ளதா போன்ற விபரங்கள் பெறப்பட்ட பின்னர் பிறப்புகள் பதிவு செய்து சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தகைய செயற்பாடுகளுக்காக கிராம அலுவலர்களினால் படிவங்கள் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு வருவதாகவும் இதனை பொதுமக்கள் பெற்று பிறப்புச் சான்றிதழ்களைப் பெற முடியும் எனவும் கிராம அலுவலர்கள் தெரிவித்துள்ளனர்.

# அதிஷ்டசாலி தெரிவு

தேசிய அபிவிருத்தி வங்கியின் நெல்லியடிக் கிளையில் முதல்நாள் கணக்கைத் திறந்த இளைஞர் அதிஷ்டசாலியாகத் தெரிவுசெய்யப்பட்டு மூன்று இலட்சம் ரூபா பெறுமதியான மோட்டார் சைக்கிளைப் பரிசாகப் பெற்றுக்கொண்டார்.

அல்வாய் தெற்கைச் சேர்ந்த சிவராஜா ஆதவன் என்பவரே அதிஷ்டசாலியாகத் தெரிவாகி மோட்டார் சைக்கிளைப் பரிசாகப் பெற்றுக்கொண்டவராவார். இவர் வங்கித் திறப்புவிழாவின்போது ஆயிரம் ரூபாவைச் செலுத்தி கணக்கைத் திறந்திருந்தார். முதல நாள் கணக்குகள் குலுக்கல் மூலம் அதிஷ்டம் பார்க்கப்பட்ட போதே இவர் அதிஷ்டசாலியாகும் வாய்ப்புக் கிடைத்தது. (01)



கொட்டடி கிராம அபிவிருத்திச் சங்கத்தினால் அண்மையில் நடாத்தப்பட்ட புத்தாண்டு விழாவில் க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வில் ஜே/83 கிராம அலுவலர் சசிகலா, சொல்லின் செல்வர் செல்வவடிவேல் ஆகியோர் பரிசில்கள் வழங்குவதையும், சிறார்களின் நடன நிகழ்வையும் காணலாம். (01)


ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 958

திகதி 23.05.2013

வெற்றி எண்கள் ஆங்கில எழுத்து

02 43 47 65 M

ஜக்பொட் பரிசு ரூ. 12,331,060/= வெல்லப்படவில்லை

| பரிசு அமைப்பு | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 0 | 12,331,060/= | ரூ. - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 0 | 10,00,000/= | ரூ. - |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 6 | 50,000/= | ரூ. 300,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 289 | 1,000/= | ரூ. 289,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 522 | 1,000/= | ரூ. 522,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 11785 | 60/= | ரூ. 707,100/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 6171 | 40/= | ரூ. 246,840/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 154007 | 20/= | ரூ. 3,080,140/= |
| ஆங்கில எழுத்து | 22198 | 20/= | ரூ. 443,960/= |
| | | மொத்தம் ரூ. | 5,589,040/= |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 08 | 50,000/= | 400,000/= |

ரூபா.50,000 வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| கொழும்பு | 704212493-4-14 |
| கண்டி | 704208265-1-11 |
| பொலன்னறுவை | 704205856-8-48 |
| கொழும்பு | 704213263-9-49 |
| கம்பஹா | 704201668-7-27 |
| பதுளை | 704210394-2-12 |
| காலி | 704212324-9-29 |
| இரத்தினபுரி | 704203173-8-38 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 5,989,040/=

எதிர்வரும் வியாழக்கிழமை சுப்பர் ஜக்பொட் ரூபா. 1,26,32,400/=

செம்மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2013.05.27 ஆம் திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை

356, கலாநிதி கொல்வின் ஆர். டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02 தொலைபேசி: 2 333546/7

(C/2788)


# சீட்டுப்பிடிப்பதும் மீற்றர் வட்டிமுறையும் மீளமுடியாத நெருக்கடியை உருவாக்கும்

## விழிப்புடன் இருந்தால் தப்பித்துக்கொள்ளலாம்

(திருநெல்வேலி)

சீட்டும், மீற்றர் வட்டியும் பொதுமக்களில் பலரைப் பெரும் நெருக்கடிக்குள் தள்ளுவதனால் இவற்றைக் கையாளுபவர்கள் மீது மிகவும் அவதானமாக இருக்குமாறு பலராலும் அறிவுறுத்தல் விடுவிக்கப்பட்டுள்ளது.

சீட்டுப் பிடித்தவர்கள், கட்டியவர்கள் சிலரும், மீற்றர் வட்டிக்குப் பணம் பெற்றுக கொண்டவர்க்ள் சிலரும் ஊரைவிட்டுத் தலைமறைவாகிய பல சம்பவங்கள் அணமைக் காலமாக அதிகரித்துள்ளன. பல இலட்சக்கணக்கில் சீட்டுப்பிடித்தவர்கள் சிலர் அவர்களது வீட்டில் இருந்து இரகசியமாக வெளியேறியுள்ளார்கள். அதே மாதிரி சீட்டை இடையில் எடுத்துக் கொண்டு பல இலட்சக்கணக்கான பணததுடன் சிலரைக் காணவில்லை. மீற்றர் வட்டிக்குப் பணம் பெற்றுக்கொண்டவர்களும் பணத்துடன் திடீரென மறைந்துள்ளார்கள். இது திட்டமிட்டுச் செய்யப்படும் மோசடியா, அல்லது உண்மையிலேயே கடன்தொல்லையா என்பது தெரியவில்லை.

சிலர் கோடிக்கணக்கான ரூபாக்களுக்குக் கடனாளிகள் எனக் கூறப்படுகின்றது. வர்த்தகம் மற்றும் சில முதலீடுகளில் இவர்கள் பெரும் நட்டத்தை எதிர்நோக்கியதாகத் தெரிவிக்கப்படுகிறது. முன்னெச்சரிக்கை இல்லாமல் கண்டபடி சீட்டுப் பிடித்தும், கட்டியதும், மீற்றர் வட்டிக்குப் பணம் பெற்றுக்கொண்டமையும் இவர்கள் ஊரைவிட்டு ஓடும் நெருக்கடிக்குக் காரணம் எனக் கூறப்படுகின்றது.

பத்து வீதம், இருபது வீதம் என மீற்றர் வட்டிக்குச் சிலர் பணம் வழங்குகிறார்கள். வட்டி குட்டி போடும் என்பது போல் இலட்சக்கணக்கிலும், பல ஆயிரக் கணக்கிலும் வட்டிக்குப் பணம் பெற்றுக்கொண்டவர்கள் மீள அதனைச் செலுத்த முடியாமல் செய்வதறியாது திகைத்துப் போய் தற்கொலையும் செய்துகொண்டுள்ள சம்பவங்களும் உண்டு.

வடமராட்சியில் உள்ள ஒரு பகுதியில் சீட்டுப் பிடிப்பதும், மீற்றர் வட்டிக்குப் பணம் கொடுப்பதும் தடைசெய்யப்பட்டுள்ளது எனத் தெரியவந்துள்ளது. இது மற்றைய இடங்களிலும் அமுல்படுத்தப்படல் வேண்டும் என பல பொதுமக்களினால் கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீட்டுப் பிடிப்பதற்கும், வட்டிக்குப் பணம் கொடுப்பதற்கும் அனுமதி பெறப்படல் வேண்டும் என்னும் விதிமுறை இருககுமானால் அதனை நடைமுறைப்படுத்துவது அவசியம் என பலராலும் கோரிக்கை விடப்பட்டுள்ளது. (137)

# மலேரியாவை இல்லாதொழிக்க அனைவரது ஒத்துழைப்பும் அவசியம்

## வைத்திய கலாநிதி ஜெயக்குமரன்

(யாழ்ப்பாணம்)

மலேரியா நோயை இல்லாதொழிக்க பொதுமக்கள் அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என யாழ். பிராந்திய மலேரிய தடை இயக்க வைத்திய அதிகாரி, வைத்திய கலாநிதி அ.ஜெயக்குமரன் தெரிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பாக விடுத்துள்ள செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

இலங்கையில் மலேரியா நோயானது 1934, 1935 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் சுமார் 7 மாத காலத்தினுள்ளேயே 80 ஆயிரம் நோயாளிகளைப் பலி கொண்ட கொடிய ஆட்கொல்லி நோயாகும். 2000 ஆம் ஆண்டளவில் யாழ்ப்பாணத்தில் கூட 7242 இற்கும் மேற்பட்டவர்களைத் தாக்கிய இந்நோய் மலேரியா தடை இயக்கம், நோய் குணமாக்கும் பிரிவு, நோய் பரவாமல் தடுக்கும் பிரிவு ஆகியோரின் தன்னலமற்ற சேவையினாலும், பொது மக்களின் சிறப்பான விழிப்புணர்வாலும் இந்நோய் கட்டுப்பாட்டினுள் கொண்டு வரப்பட்டுள்ளது.

எனினும் கடந்த ஆண்டு (2012) யாழ். மாவட்டத்தில் மாத்திரம் 15 மலேரியா நோயாளிகள் இனம் காணப்பட்டனர். இதில் 10 நோயாளிகள் கொடிய மூளை மலேரியா நோயினால் பாதிக்கப்பட்டனர்.

இதில் பெரும்பான்மையானோர் ஐரோப்பிய நாடுகளுக்குச் செல்ல முற்பட்டு ஆபிரிக்க நாடுகளில் தங்கியிருந்து திரும்பிவந்தவர்களாகவும், இந்தியா போன்ற நாடுகளுக்குச் சென்று வந்தவர்களாக இருந்த போதிலும் இவர்கள் யாழ்ப்பாணத்திலேயே இனங்காணப்பட்டனர். எனினும் உள்நாட்டில் மலேரியா நோயை காவுகின்ற அனோபிலிஸ் பெண் நுளம்புகள் தாராளமாக இருப்பதனால் நோய் உள்நாட்டில் பெருகும் வாய்ப்புள்ளது. இதனால் நோய் பெருகுவதைத் தடுப்பதற்காக. நுளம்பு பெருகும் இடங்களை அழித்தலும்,

காய்ச்சல் ஏற்பட்டால் அது மலேரியாக் காய்ச்சலாக இருக்கலாமோ என்ற சந்தேகத்தில் இரத்தப்பரிசோதனையை மேற்கொள்வதும்.

மலேரியா தொற்றுக் குரிய நாடுகளுக்குச் செல்ல முன்னர் மலேரியா தொற்றைத் தடுக்கின்ற குளிகையை செல்வதற்கு ஒருவாரத்திற்கு முன் ஒரு தடவையும் அங்கிருக்கின்ற காலங்களில் வாராந்தம் ஒரு தடவையும் மீள இலங்கை வந்த பின்பு நான்கு வாரங்கள் வாரம் ஒரு முறையும் இக்குளிகைகளைப் பெற்றுக் கொள்வதற்காக அருகிலுள்ள சுகாதார வைதத்திய அதிகாரி பணிமனையிலோ பிராந்திய மலேரியா தடை இயக்க பணிமனையிலோ பெற்றுக்கொள்ள வேண்டியதும், மலேரியா தொற்றுள்ள நாடுகளிற்கு சென்று வந்தால் நோயத் தொற்றுள்ளதா என இரத்தப் பரிசோதனை செய்து கொள்வதும் இன்றியமையாதவை.

இவ்வாறு எங்களுடைய விழிபபுணர்வின் மூலம் 2014 ஆம் ஆணடுடன் உள்நாட்டில் தொற்றுகின்ற மலேரியாவை முற்றாக ஒழிப்போம்.



கரவெட்டி சமுர்த்தி மகா சங்கத்தினால் சமுர்த்தி சமூக அபிவிருத்தி மன்ற நிலையத்தினால் மாற்றுவலுவுடைய பயனாளிகளுக்கு உபகரணம் வழங்கும் நிகழ்வில் கரவெட்டிப் பிரதேச செயலர் எஸ்.சிவஸ்ரீ பயனாளி ஒருவருக்கு உபகரணம் வழங்குவதைக் காணலாம். (18)

# விண்ணப்பம்கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை பொலிஸ் திணைக்களத்தினால் விசேட அதிரடிப் படை பெண் பொலிஸ் கொஸ்தாபல் பதவிக்கு ஆட்சேர்ப்புக்காக விண்ணப்பம் கோரப்பட்டுள்ளன.

தேவையான அடிப்படைத் தகைமைகள், சம்பளம், ஆட்சேர்ப்பு முறை, சேவை நிபந்தனைகள், வைத்திய பரீட்சை, பினனணி விசாரணைகள் போன்ற விபரங்களை மே 23 ஆம் திகதி 2013 அரச வர்த்தக மானியில் பார்வையிடலாம் விண்ணப்பத்திற்கான இறுதித் திகதி 30.07.2013 ஆகும்.

◆◆◆

உணவு ஆணையாளர் திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ உதவி தொழில்நுட்ப உத்தியோகத்தர் (தானிய ஆய்வாளர் - தரம் III) பதவிக்கு ஆட்சேர்ப்பதற்குரிய போட்டிப் பரீட்சை 2012க்கு இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதற்கான சேவை நிபந்தனைகள், தகைமைகள், பரீட்சை முறைகள், விண்ணப்பிக்கும் முறை, பரீட்சைக்குத் தோற்றுதல் போன்ற விபரங்களை 23.05.2013 அரச வர்த்தக மானியில் பார்வையிடலாம். (105)

# கந்தப்பசேகரம் வீதியை புனரமைக்க யாழ். மாநகரசபை நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். வைத்தியசாலை வீதியில் உள்ள வணிக நிலையங்கள் தமது பொருட்களைப் பாரவூர்திகளில் இருந்து இறக்குவதற்கு 300 மீற்றர் நீளமான யாழ். நகர் கந்தப்பசேகரம் வீதியைப் புனரமைத்துக் கொடுக்க யாழ். மாநகரசபை நடவடிக்கை எடுத்துள்ளது.

யாழ். வைத்தியசாலை வீதியின் தெற்குப் புறமாகவுள்ள பலசரக்கு வியாபாரத்தில் ஈடுபடும் வணிக நிலையங்கள் யாழ். வைத்தியசாலை வீதியின் நடுவே தமது பாரவூர்திகளை நிறுத்தி வைத்து பொருட்களை இறக்கி வருகின்றன.

இதன் காரணமாக இவ்வீதியூடான பொது மக்களின் போக்குவரத்து பாதிக்கப்படுவதுடன், கனரக வாகனங்களையும் நிறுத்தி வைக்க முடியாத நிலை காணப்படுவதனை அடுத்து, இந்த வணிக நிலையங்களுக்கு பின்பாகவுள்ள அதாவது முனிஸ்வரன் வீதிக்கும் காங்கேசன்துறை வீதிக்கும் இடையேயுள்ள கந்தப்பசேகரம் வீதியை அகலமாக்கிப் புனரமைத்து, அங்கு வைத்து பாரவூர்திகளிலிருந்து பொருட்களை இறக்குவதற்கு யாழ். மாநகரசபையும், யாழ். வணிகர் கழகமும், குறித்த வணிக நிலைய உரிமையாளர்களும் கூடித் தீர்மானித்ததன் அடிப்படையில் முடிவு செய்யப்பட்டு, அவ்வீதி புனரமைக்கப்படவுள்ளது.

இந்த வீதிப்புனரமைப்பின் ஆரம்பகட்ட நடவடிக்கையாக வீதியை 30 அடி நீளமாகப் புனரமைக்க காணிகளை விட்டுக் கொடுக்கும் நடவடிக்கையில் வர்த்தகர்கள் ஈடுபட்டுள்ளனர்.

இதற்கு இணங்க க.கு.கந்தையாப்பிள்ளை ஸ்ரோர்ஸ் உரிமையாளர் க.சிவபாலன் கந்தப்ப வீதிக்கு காணியை விட்டுக் கொடுக்கும் நடவடிக்கையை நேற்று ஆரம்பித்து வைத்துள்ளார். இதனைத் தொடர்ந்து மேலும் சில வர்த்தகர்களும் வீதிக்குக் காணியை விட்டுக் கொடுத்துள்ளனர்.

தொடர்ந்து ஏனைய வர்த்தகர்களும் இவ்வாறு இந்த வீதியை அகலமாக்க காணியை விட்டுக்கொடுத்து உதவிட வேண்டும் என்று யாழ். வணிகர் கழகம் குறித்த வர்த்தகர்களைக் கேட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் இவ்வாறு கந்தப்ப வீதிக்குக் காணியை விடுக்கொடுக்கும் ஆரம்ப நிகழ்வில் யாழ். வணிகர் கழகத் தலைவர் ஆர்.ஜெயசேகரம், செயலாளர் ஜெயக்குமார், யாழ். மாநகர சபை முதல்வரின் செயலாளர் பற்குணராசா, வணிகர் க.சிவபாலன் மற்றும் யாழ். மாநகரசபையினர் கலந்து கொண்டனர். (பா)

# விதை வெங்காயம் இல்லை; அவதியுறும் விவசாயிகள்

(அச்சுவேலி)

அச்சுவேலி, வளலாய், தம்பாலை கதிரிப்பாய், பத்தமேனி போன்ற பிரதேசங்களில் கடந்த ஜனவரி மாதம் வெங்காயச் செய்கையானது முற்றுமுழுதாக அழிவடைந்ததால் வருகின்ற போக வெங்காயச் செய்கைக்கான விதை வெங்காயம் இல்லாத நிலையில் விவசாயிகள் கவலையடைகின்றனர்.

வழமையாக ஜனவரி வெங்காயச் செய்கையினை மேற்கொண்டு அதில் கிடைக்கும் வெங்காயத்தினை விற்று குறித்த ஒரு பகுதியை அடுத்த சிறுபோகச் செய்கைக்காக வைத்திருப்தே வழமை.

ஆனால் கடந்த ஜனவரி மாதம் விவசாயிகளால் செய்கை பண்ணப்பட்ட வெங்காயப் பயிரானது முற்று முழுதாக அழிவடைந்த நிலையில் அடுத்த போக வெங்காயச் செய்கைக்காக தமது விவசாய நிலத்தைப் பண்படுத்தி வரும் இவர்கள் விதை வெங்காயத்திற்கு என்ன செய்வதென்று தெரியாது மனம் வருந்துகின்றனர்.

விவசாய சம்மேளனங்களால் பயிர் அழிவு தொடர்பாக பதிவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தும் இதுவரை எந்த விதமான உதவிகளும் தமக்குக் கிடைக்கவில்லையென விவசாயிகள் தெரிவிக்கின்றனர். (85)



கொட்டடி கிராம அபிவிருத்திச் சங்கத்தினரால் நடாத்தப்பட்ட புத்தாண்டு விழாவில் சமுகசேவையாளர் மீராலெப்பை லாபீர் 'சமுக திலகம்' பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார். இவரை பேராசிரியர் சின்னத்தம்பி பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கும்போது அருகில் சங்கத் தலைவர் கலாநிதி தபேந்திரன் அருகில் நிற்பதையும் காணலாம்.

# சைவசமய அபிவிருத்திக் கழகத்தால் சம்பந்தர் குருபூசையும், பரிசளிப்பு விழாவும்

(அச்சுவேலி)

வண்ணை - சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் சைவசமய அபிவிருத்திக்கழகம் நடாத்தும் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் குருபூசையும், திருமுறை மனனப் போட்டி பரிசளிப்பு விழாவும் நாளை மறுதினம் திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

இவ் குருபூசை நிகழ்வில் அபிஷேகம், பூசையைத் தொடர்ந்து திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் குருபூசையை முன்னிட்டு நடாத்தப்பட்ட திருமுறை மன்னப்போட்டிப் பரிசளிப்பு விழாவும் இடம்பெறவுள்ளன.

இரா.செல்வவடிவேல் தலைமையில் இடம்பெறும் பரிசளிப்பு விழாவுக்கு சாரங்கா நகை மாட முதல்வர் ப.சிவபாஸ்கரன் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு திருமுறை மனனப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்களையும், சான்றிதழ்களையும் வழங்குவார்.

பாலர் பிரிவு

ம.மதுவந்தி (தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி), சி.நிரோசினி (யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை), ம.சாலினி (காரைநகர் கிழவன்காடு கலாமன்றம்).

கீழ்ப்பிரிவு

லி.ருஷிகா, வி.நித்திய ரூபசர்மா, சி.கானவர்ஷினி.

நீ பிறரின் குணாதிசயங்களைக் கணிக்கத் துவங்கினால் அவர் பால் அன்பு செலுத்த நேரம் இருக்காது. - பான்னி ப்ளேயர்

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## தொடர்ந்து கஷ்டப்படுமா புத்தியுள்ள சமூகம்?

மனிதன் நாகரிகமடைந்தான் என்பதும், விலங்குகளிலிருந்து தன்னை வேறுபடுத்திக் கொண்டான் என்பதும், அவனது அறிவு வளர்ந்ததால்தான். ஆனால் இன்றும் வன்முறை எழுத்துக்களால் பேச்சுக்களால் தூண்டப்பட்டுவிட்டால், தன்னையும் தன் சமூகத்தையும் அழித்துக்கொள்ளுமளவிற்கு புத்தியிழந்து ஆவேசம் கொள்கிறவனாகவே மனிதன் இருக்கிறான். இது மனிதனது தொடரும் அறிவீனம்தான்.

மனிதர்களை விஷயம் நிறைந்தவர்களாக்குவதற்குப் பதிலாக விஷம் நிறைந்தவர்களாக ஆக்குவதையே இன்றைய பத்திரிகைகள் ஊடகங்கள் செய்கின்றன. அத்தகைய பத்திரிகைத் தலைப்புகளையே மக்களும் விரும்பி நுகர்வதாக இன்றைய சூழல் ஆக்கப்பட்டிருக்கிறது. இது உண்மையா, நடக்குமா என்றெல்லாம் ஆராயாமல், படித்து விறுவிறுப்பை ஏற்றிக்கொள்ளும் சிலமணி நேர போதையே பலருக்கும் போதுமானதாக இருக்கிறது.

மனித ஜீவனது உன்னத குணங்கள் வெளிப்பட வேண்டும் என்பதே மானுடத்தின் கனவாக இருக்கிறது. இதற்குத் தடையான அறிவீனங்களைக் களைவதே நம் முதல் தேவையாக இருக்கிறது. இதற்குக் கல்வியறிவோடு சமூகம்சார் அறிவும் பெருக வேண்டியிருக்கிறது. வெறும் உணர்ச்சியலைகளில் மிதந்து அடிபட்டுப் போய்க்கொண்டிருப்பதை இனி நிறுத்த வேண்டும்.

அறிவு பாடப்புத்தகங்களுக்குள்ளிருந்து மட்டுமல்லாது, பலவேறு இடங்களிலிருந்தும் நமக்குக் கிடைக்கலாம். புத்திசாலிகள் பிறருடைய முட்டாள்த்தனங்களிலிருந்து கூட பூடங்கற்றுக் கொள்கிறார்கள் எனச் சொல்லப்படுவதுண்டு. எமது வாழ்தலுக்கு வேண்டிய அறிவை எங்கிருந்தும் பெற்றுக்கொள்வதற்கு வசதியாக நாம்தான் நமது மனதைத் திறந்து வைத்துக்கொண்டிருக்க வேண்டும். தன் பணிப்பெண்ணிடமிருந்து பாடங்கற்றுக்கொண்ட ஒரு அரசனின் கதை இது.

ஒரு வேலைக்காரச் சிறுமி. அவளுக்கு அரண்மனையிலே அரசருடைய மஞ்சத்தைத் தயார்ப்படுத்துவதுதான் வேலை. சாதாரண வேலையில்லை. ஹம்சதூளிகா மஞ்சம். அந்தப் படுக்கையைத் தயார் செய்ய கிட்டத்தட்ட நாலுமணி நேரம் ஆகும். ராஜா தூங்குவதென்றால் சும்மாவா? முதலில் ஒரு ஜமுக்காளத்தை விரிக்க வேண்டும். அதன் மேலே மெத்தை. பிறகு அதற்கு மேலே காம்பில்லாத மலர்களைத் தூவ வேண்டும்... இப்படி ஏழு அடுக்குகள் உண்டாக்கி அந்தப் படுக்கையை தயார் செய்ய வேண்டும்.

வழக்கம்போல சிறுமி மஞ்சத்தைத் தயார்ப்படுத்தினாள். வெளியே போயிருந்த ராஜாவும் ராணியும் இன்னும் திரும்பி வரவில்லை. திரும்பி வருவதற்குள் இந்தப் படுக்கையில் ஒரு தடவை படுத்துப் பார்த்தால் என்ன? என்று யோசித்தாள் சிறுமி. ஒரு அஞ்சு நிமிசம்தானே... என்று எண்ணிக்கொண்டு, அதிலே ஏறிப் படுத்தாள். ஆனால், பாவம்! படுத்ததும் சுகமான தூக்கம் வந்துவிட்டது.

ராஜாவும் ராணியும் வந்து பார்த்தனர். அழுக்கு உடைகளோடு சிறுமி அரச மஞ்சத்திலே உறங்கிக்கொண்டிருந்தாள். ராஜாவுக்குக் கோபம் வந்துவிட்டது. காவலாளிகளைக் கூப்பிட்டு, சிறுமியை ஒரு தூணிலே கட்டிவைத்துச் சாட்டையாலே அடிக்கும்படி உத்தரவு போட்டார். சாட்டையடி விழ விழ, அந்தச் சிறுமி சிரிக்க ஆரம்பித்தாள்.

அடி வாங்கிக்கொண்டு, அழாமல் சிரிக்கும் அந்தப் பெண்ணைப் பார்த்து ராஜாவுக்கு ஆச்சரியம். "அழாமல் ஏன் சிரிக்கிறாய்?" என்று கேட்டார். "மகாராஜா உங்கள் படுக்கையில் நாலு மணி நேரம் படுத்ததுக்கே எனக்கு இத்தனை சவுக்கடி கிடைக்குதே! வாழ்நாள் முழுக்க அந்தப் படுக்கையிலே படுத்த உங்களுக்கு எத்தனை சவுக்கடி கிடைக்கப்போகுதோ என்று நினைச்சேன்... அதுதான் சிரிப்பு வந்துவிட்டது" என்றாளாம். அதன்பிறகே அந்த ராஜாவுக்குப் புத்தி வந்ததாகக் கதை. - ஆசிரியர்

# இன ஐக்கியத்துக்கு வலுச்சேர்க்கும் புதிய அரசியல் யாப்பை வரைவோம்

## அமைச்சர் வாசு அறைகூவல்

(கொழும்பு)

தேசத்தின் ஐக்கியத்தை நோக்கமாக கொண்ட புதிய அரசியல் அமைப்பு வகுக்கப்பட வேண்டுமென அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற வைபவமொன்றில் உரையாற்றியபோதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

ஜனநாயகம் மற்றும் தேசிய ஒற்றுமையை வலுப்படுத்துவதற்காக புதிய அரசியலமைப்பை உருவாக்குவோம் என்ற தொனிப்பொருளில் சோசலிச மக்கள் முன்னணி நேற்று முன்தினம் குடியரசு தினத்தைக் கொண்டாடியது. 1972 ஆம் ஆண்டில் குடியரசு அரசியல் அமைப்பை வகுப்பதில் முன்னின்று செயற்பட்ட கலாநிதி என்.எம்.பெரேராவும் இதன்போது நினைவு கூரப்பட்டார்.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய லங்கா சமசமாஜக் கட்சியின் செயலாளரும் சிரேஷ்ட அமைச்சருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண 13 ஆவது திருத்தத்தை வலுப்படுத்தி முன்னோக்கி இட்டுச்செல்ல வேண்டும் என குறிப்பிட்டார்.

வடக்கில் தேர்தலை நடத்த வேண்டும் என சிலர் கூறிவரும் நிலையில் உறுதியளிக்கப்பட்டவாறு செப்ரெம்பர் மாதம் வடமாகாண சபைக்கான தேர்தல் நடத்தப்பட வேண்டும் என சிரேஷ்ட அமைச்சர் வலியுறுத்தியுள்ளார்.

அமைச்சர் வாசுதேவ நாணயக்கார அங்கு உரையாற்றுகையில், தேசத்தில் ஐக்கியமின்றி நாட்டின் இறைமையைப் பாதுகாக்க முடியாது என சுட்டிக்காட்டினார்.

ஒற்றுமையின்மையால் இலங்கையின் ஒரு தரப்பினர் 30 வருடங்களாகப் பிரிந்து இருந்ததாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

# புகைத்தல் எதிர்ப்பு தின சமுர்த்தி கொடிவாரம்

(கொழும்பு)

உலக புகைத்தல் எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு நடத்தப்படும் புகைத்தல் எதிர்ப்புக்கான சமுர்த்தி கொடி வாரம் ஆரம்பித்து வைக்கப்பட்டதுடன், முதலாவது கொடி நேற்று முன்தினம் ஜனாதிபதிக்கு அணிவிக்கப்பட்டது. இந்த நிகழ்வு நேற்று முன்தினம் முற்பகல் அலரி மாளிகையில் நடைபெற்றது.

1996 ஆம் ஆண்டிலிருந்து உலக புகைத்தல் எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு இந்தக் கொடி விநியோகத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

இந்த கொடி விநியோகத் திட்டம் 18 ஆவது தடவையாக இம்முறை முன்னெடுக்கப்படுகின்றது.

திவிநெகும அபிவிருத்தித் திட்டத்திற்கு மேலும் வலுச்சேர்க்கும் வகையில் மே மாதம் 31 ஆம் திகதியிலிருந்து ஜூன் மாதம் 10 ஆம் திகதி வரை இந்தத் திட்டம் நாடு முழுவதும் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

கொடி விற்பனை மூலம் கிடைக்கின்ற வருமானத்தை இராணுவ வீரர்களுக்கான வீடுகளை நிர்மாணித்தல், அங்கவீனர்களுக்குத் தேவையான உபகரணங்களை வழங்குதல், குறைந்த வருமானம் பெறுகின்ற குடும்பங்களின் பிள்ளைகளுக்கு புலமைப்பரிசில் வழங்குதல் ஆகிய சமூக சேவை விடயங்களுக்காக பயன்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

# நான்கு வழக்குகளை மீளப்பெற்றது இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு

(கொழும்பு)

மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க உள்ளிட்ட நால்வருக்கு எதிராக இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவினால் தொடுக்கப்பட்டிருந்த நான்கு வழக்குகள் அந்த ஆணைக்குழுவினால் மீளப்பெறப்பட்டுள்ளன.

புறக்கோட்டை நீதவான் நீதிமன்றில் இவ்வழக்குகள் மீளப்பெறப்பட்டுள்ளன.

2008ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 27ஆம் திகதி தொடக்கம் ஆகஸ்ட் மாதம் 17ஆம் திகதி வரையான காலப்பகுதியில் லீலானந்த வித்தியாலயத்தில் முதலாம் ஆண்டில் மாணவர்களை இணைத்துக் கொள்வதற்காக அவ்வித்தியாலயத்தின் அதிபருக்கு அழுத்தம் கொடுத்தமை தொடர்பில் இவர்களுக்கு எதிராக முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த வழக்கு மீதான விசாரணை நேற்று முன்தினம் விவாதத்திற்கு வந்தபோது, இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு சார்பில் ஆஜராகியிருந்த சட்டத்தரணி குறித்த வழக்கை மீளப் பெறுவதாக புறக்கோட்டை நீதவானிடம் கோரிக்கை வைத்தார்.

# இலங்கைக்குரிய தாவர உயிரினங்களை பாதுகாப்பதற்கு புதிய சட்டம் அமுல்

(கொழும்பு)

இலங்கைக்கு உரித்தான தாவரங்கள் மற்றும் உயிரினங்களை கடத்தல்காரர்களிடமிருந்து பாதுகாப்பதற்கான புதிய சட்டங்களை அறிமுகப்படுத்த வனஜீவராசிகள் பாதுகாப்பு அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதற்கமைய புதிய சட்டங்களை வகுக்கும் பணிகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் விஜித் விஜயமுனி டி சொய்சா குறிப்பிடடுள்ளார். இலங்கைக்கே உரித்தான உயிரினங்கள் மற்றும் தாவரங்களை வெளிநாடுகளுக்கு எடுத்துச் செல்வதற்கு முயற்சித்த பலர் அண்மைக் காலமாக கைது செய்யப்பட்டிருந்தனர்.

ஒரு சிலர் வனஜீவராசிகள் பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் ஒத்துழைப்புடனும் இத்தகைய சட்டவிரோத நடவடிக்கையில் ஈடுபட்டுவந்தமை தெரியவந்துள்ளது. இலங்கையின் உயிர் பல்வகைமை பாதுகாக்கப்பட வேண்டியதன் முக்கியதுவத்தை கருத்திற்கொண்டு விரைவில் புதிய சட்டங்களை அறிமுகப்படுத்தவுள்ளதாக வனஜீவராசிகள் பாதுகாப்பு அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இதைத் தவிர தற்போது நடைமுறையில் உள்ள சட்டங்களில் காணப்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் செயற்றிட்டமொன்றும் முன்னெடுக்கப்படுவதாக அமைச்சர் விஜித் விஜயமுனி டி சொய்சா மேலும் கூறியுள்ளார்.

# கொழும்பு துறைமுகத்தின் களஞ்சியசாலையில் தீ

(கொழும்பு)

கொழும்பு துறைமுகத்திலுள்ள களஞ்சியசாலை ஒன்றில் நேற்று அதிகாலை தீ விபத்து ஏற்பட்டுள்ளதாக துறைமுக மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சர் ரோகித்த அபேகுணவர்தன தெரிவித்துள்ளார்.

அதிகாலை ஒரு மணியளவில் இவ்தீ விபத்து ஏற்பட்டது. துறைமுக தீயணைப்பு பிரிவினர், கடற்படை, கொழும்பு நகர சபை மற்றும் இராணுவத்தினர் இணைந்து தீயினை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரும் முயற்சியில் ஈடுபட்டனர். அத்துடன் தீ விபத்து ஏற்பட்டமைக்கான காரணத்தை கண்டறியும் நோக்கில் துரித விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. தீ விபத்து ஏற்பட்ட சரக்கு களஞ்சிய பகுதியில் வைக்கப்பட்டிருந்த பொருட்கள் தொடர்பிலான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக துறைமுக அதிகாரசபை தலைவர் பியந் பந்துவிக்ரம தெரிவித்துள்ளார்.

# விடுதலைப்புலிகளை அழித்த ஊடகங்கள் 41

வே.அர்ச்சுனன்

கடற்புலிகளின் கடற் சண்டைகளும் வெற்றிகளும் ஆரம்பத்தில் வெற்றி அளித்துக் கொண்டு வந்த போதிலும் பின்னைய நாட்களில் புலிகளின் போர் உத்திகள், மற்றும் நுணுக்கங்கள் என்பன தொடர்பில் படையினர் மறு மதிப்பீடு ஒன்றை மேற்கொண்டு அதற்கு ஏற்றவகையில் படையினர் தங்களுக்குரிய நவீன போரியல் உபகரணங்களை கொள்வனவு செய்திருந்தனர். இதனால் போரியல் ரீதியில் கடற் சண்டைகளில் கடற்புலிகளால் நினைத்த அளவிற்கு பெரிய அளவில் வெற்றிகளை குவிக்க முடியாத சூழலே காணப்பட்டது. குறிப்பாக கடற்புலிகளின் நீரடி நீச்சற் பிரிவுக் கரும்புலிகள் வெற்றிகரமாக தாக்குதல்களை மேற்கொண்டு வந்தபோதிலும் இந்தத் தாக்குதலின் மர்மம் தொடர்பில் படையினர் விரைவாகவே கண்டுபிடித்து அதாவது கடலுக்கு அடியின் ஊடாக ஊடுருவும் கடற்புலிகள் அணியினரை கண்டுபிடிக்கக் கூடிய நவீன ராடர்க் கருவிகளை அரசாங்கம் சீனாவிடம் இருந்து கொள்வனவு செய்து இலங்கைக் கடற்படைக்கு வழங்கியிருந்தது. இதனால் கடற்புலிகளின், நீரடி நீச்சற் கரும்புலிகள் பிரிவின் தாக்குதல் நடவடிக்கைகள் கேள்விக் குறியாகின.

அங்கயற்கண்ணி என்ற பெண் கடற்கரும்புலி மேற்கொண்ட தாக்குதல் நடவடிக்கையின் பின் கடற்படையினர் கடற் கரும்புலிகளின் உத்திகளை நுணுக்கங்களை கண்டறிவதற்காக பல்வேறு படையியல் ஆய்வுகளையும், புலிகளின் போர்த் தந்திரங்கள் பற்றிய ஆய்வுகளையும் உள்ளகத்தே மேற்கொண்டு மீள் கட்டமைப்பு ஒன்றை ஏற்படுத்தி கடற்கரும் புலிகளின் தாக்குதல்களை எதிர்கொள்ளத் தயாராகினர். இருந்த போதிலும் கடற்கரும் புலிகள் பல்வேறு நெருக்கடிகளைச் சந்தித்தவாறு தமது தாக்குதல் நடவடிக்கைகளை தொடர்ந்தும் மேற்கொண்டு வந்தனர்.

நீரடிநீச்சற் பிரிவு கரும்புலிகள் அணி என்பது கடற் கரும் புலிகள் அணியிலே கூடுதலான பயிற்சிகளில் ஈடுபடுகின்ற ஒரு அணியாகும். அதாவது ஒரு குறித்த இலக்கை அடைவதற்காக நீண்ட தூரம் கடலுக்கு அடியில் பயணம் செய்து அந்த இலக்கை கடலுக்கு அடியின் ஊடாகவே அடைந்து குறித்த கப்பல் மீது தாக்குதல் நடத்துவதே இதன் பணியாகும். திருகோணமலை, காங்கேசன்துறை போன்ற கடற்படைத் துறைமுகங்களில் தரித்து நின்ற கப்பல்கள் மீது கடற்கரும்புலிகளின் நீரடி நீச்சற் பிரிவினர் கடலுக்கு அடியின் ஊடாக ஊடுருவி கப்பல்களை தகர்த்து சாதனை படைத்து வந்தனர். அதாவது ஒரு குறிப்பிட்ட அளவு தூரம் கடற்படையினரின் துறைமுக பாதுகாப்பிற்கு அண்மித்த சில கிலோ மீற்றர்கள் தூரத்தில் இந்தக் கரும்புலிகளை படகுகளில் கொண்டுபோய் இறக்கி விடுவார்கள். இவர்கள் கடலுக்கு அடியின் ஊடாகச் சென்று தாங்கள் எடுத்துச் செல்கின்ற வெடி பொருளை அந்தக் கப்பல் மீது ஒட்டி(ஸ்ரிக்கர்) விட்டு திரும்பும் வழியில் தாக்குதலை நடத்துவதே திட்டமாக இருக்கும். ஆனால் இவ்வாறு தாக்குதலை நடத்தச் செல்லுவோர் ஸ்ரிக்கர் வெடிமருந்தை ஒட்டி விட்டு திரும்புவதென்பது முடியாத காரியமாகவே இருந்து வந்தது. இதனால் இந்தத் தாக்குதலுக்குச் செல்லுகின்ற கரும் புலிகள் கூடுதலாக தாங்களும் வெடித்துச் சிதறியே வந்தனர்.

இருந்த போதிலும் ஒரு சில கரும் புலிகள் இவ்வாறான தாக்குதல்களை நடத்தி விட்டுத் தப்பி வந்த வரலாறுகளும் இருக்கிறது. ஆனால் ஒரு தாக்குதலுக்குச் செல்கின்ற கரும்புலி அந்தத் தாக்குதலை வெற்றிகரமாக நடத்தாமல் திரும்பிவந்தால் கடற் புலிகளின் தளபதி சூசையின் பணிஸ்மன்ற் கூடுதலாக இருந்து வந்தது. இதனால் தாக்குதலுக்குச் செல்கின்ற கரும்புலிகள் தாக்குதல் வெற்றி அளிக்கிறதோ இல்லையோ ஒரு குறித்த இலக்கை அடைந்தவுடன் தாங்களும் வெடித்துச் சிதறிவிடுவார்கள்.

இவ்வாறு கடற்கரும்புலிகளின் நடவடிக்கைகளும், தாக்குதல்களும் இருந்து வந்த போதிலும் இலங்கைக் கடற்படையினருக்கு கடற்கரும்புலிகள் இறுதி யுத்தம் வரைக்கும் ஒரு வேப்பங்காய் போன்று கசந்தே வந்தனர். எந்த மூலையில் எந்தத் திசையில், எந்த வடிவில் கடற்கரும்புலிகள் வருவார்கள் என்ற அச்சம் கடற்படையினரிடம் தொடர்ந்து நீடித்து வந்தது. கடற்படைக் கப்பல்கள் மற்றும் ரோந்துக் கப்பல்கள் மீது நேரடிக் கரும்புலித் தாக்குதல்களை நடத்தி வந்ததுடன் இந்தத் தாக்குதல்களை கடற்படையினர் எதிர்கொள்ளத் தயாராகிய பொழுது மாற்று வடிவங்களையும் கையாளத் தொடங்கினர். அதாவது வெடி மருந்துகளை படகில் நிரப்பிவிட்டு அந்தப் படகை நடுக்கடலில் கொண்டு போய்க் கட்டி விட்டு வந்துவிடுவார்கள். கரைக்கு வந்து தமது ராடர் கருவிமூலம் கண்காணித்துக் கொண்டு அந்தப் படகை கடற்படை ரோந்துக் கப்பல் நெருங்கி சோதனை இடுகின்ற பொழுது அதை வெடிக்க வைப்பதே கடற்புலிகளின் செற்றப்பாக இருந்தது. இவ்வாறு கடற்படைக் கப்பல் கடலில் தரித்துநின்ற வெறும் படகை சோதனை இட்ட பொழுது அது வெடித்து கடற்படை ரோந்துக் கப்பலும் மூழ்கி இருந்தது.

இதனை அடுத்து கடற்படையினர் மறுஉத்தியைக் கையாளத் தொடங்கினர். அதாவது கடற்பகுதியில் படகுகள் காணப்பட்டால் 800 மீற்றருக்கு அப்பால் நின்று தாக்குதலை நடத்தி கடலில் மர்மமாக காணப்படும் படகுகளை மூழ்கடிக்குமாறு கடற்படைத் தலைமையகம் கடற்படைக்கு கண்டிப்பான உத்தரவை வழங்கியிருந்தது. இதன்பின் சந்தேகத்திற்கு இடமான எந்தப் படகுகளை கடலில் கண்டாலும் 1000மீற்றருக்கு அப்பால் நின்றே தாக்குதல் நடத்தி அந்தப் படகை கடற்படையினர் மூழ்கடித்து வந்தனர். இதனால் கடற்புலிகளின் இந்தத் தாக்குதல் வழிமுறை வெற்றி அளிக்கத் தவறி இருந்தது. இதனை அடுத்து மேலும் ஒரு உத்தியை கடற்புலிகள் கையாளத்தொடங்கினர். அதாவது மீனவக் கட்டுமரங்கள் போன்று கடலில் மீன்பிடித்துக் கொண்டு கடற்படைப் படகுகளிற்கு அண்மையில் சென்று மீன்பிடித்தவாறு திடீரென கடற்படை கப்பலை நெருங்கி தாக்குதலை நடத்துவதே இந்தத் திட்டமாகும். இத் திட்டத்தை கடற்புலிகளின் விசேட தளபதி சூசை நேரடியாக வழிப்படுத்தினார்.

ஒருசமயம் வடமராட்சி பருத்தித்துறையில் தரித்து நின்ற கடற்படைக்கு சொந்தமான கப்பல் ஒன்றை தாக்க சூசை திட்டமிட்டார். சுண்டிக்குளம், சாலையில் இருந்து கடற்புலிகளின் ரோந்துப் படகு ஒன்றில் ஒரு கட்டு மரத்தையும், 10 வலைகளையும் 25குதிரை வலுவுடைய எஞ்சினையும் ஏற்றி கடற்கரும்புலிகளை சுமந்தவாறு பருத்தித்துறைக்கு அப்பால் உள்ள மணற்காடு கடற் பிரதேசத்தை அடைந்து, அங்கு கட்டுமரத்தையும் கரும்புலியையும் கடலில் இறக்கி விட்டனர். மீன்பிடித்துக் கொண்டு நின்றுவிட்டு திடீரெனச் சென்று தாக்குதல் நடத்துமாறு கரும்புலிக்கு சூசையால் கட்டளை பிறப்பிக்கப் பட்டிருந்தது. இதன்படி மணற்காடு கடற்பிராந்தியத்தில் எஞ்சினை உருமறைப்புச் செய்துவிட்டு கடற் கரும்புலி மீன்பிடித்துக் கொண்டிருந்தார். அதாவது தனக்குரிய நேரம் நெருங்கிக் கொண்டிருந்தபொழுது தாக்குதலுக்கு தயாராகி செல்லத் தொடங்கினார். இதனை கடற்படையினரோ அல்லது வேறு எவருமோ பொருட்படுத்தவில்லை. ஆனால் இப்பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்த மணற்காட்டைச் சேர்ந்த ஒருவர் கண்டுவிட்டு உடனடியாக கரையில் இருந்த படையினருக்கு தகவல் பரிமாறிவிட்டார். மணற்காடு கரையில் இருந்த 524ஆவது படைத் தலைமையகத்திற்கு இந்தத் தகவல் கிடைத்தவுடன் உடனடியாகவே அவர்கள் உசார் அடைந்து காங்கேசன் துறை கடற்படை கட்டளைப் பீடத்திற்கு தகவலை அனுப்பி வைத்தனர். இத்தாக்குதல் திட்டத்தை அறிந்து கொண்ட காங்கேசன் துறை கடற்படை கட்டளைப் பீடம் என்ன செய்தது?' என்பதை தமிழ் ஊடகங்கள் அறிந்து கொண்டனவா? அல்லது அறிந்தும் அறியாதது போன்று நடந்துகொண்டு விடுதலைப் புலிகளை தொடர்ந்தும் அழித்தனவா என்பதைத் தொடர்ந்து பார்ப்போம்.


(தொடரும்)

❝ கடற்படையினரின் துறைமுக பாதுகாப்பிற்கு அண்மித்த சில கிலோ மீற்றர்கள் தூரத்தில் இந்தக் கரும்புலிகளை படகுகளில் கொண்டுபோய் இறக்கி விடுவார்கள். இவர்கள் கடலுக்கு அடியின் ஊடாகச் சென்று தாங்கள் எடுத்துச் செல்கின்ற வெடி பொருளை அந்தக் கப்பல் மீது ஒட்டி(ஸ்ரிக்கர்) விட்டு திரும்பும் வழியில் தாக்குதலை நடத்துவதே திட்டமாக இருக்கும். ஆனால் இவ்வாறு தாக்குதலை நடத்தச் செல்லுவோர் ஸ்ரிக்கர் வெடிமருந்தை ஒட்டி விட்டு திரும்புவதென்பது முடியாத காரியமாகவே இருந்து வந்தது. இதனால் இந்தத் தாக்குதலுக்குச் செல்லுகின்ற கரும்புலிகள் கூடுதலாக தாங்களும் வெடித்துச் சிதறியே வந்தனர்.



# சமாதானமான நாட்டை கட்டியெழுப்ப நடவடிக்கை

## வெசாக் வாழ்த்துச் செய்தியில் ஜனாதிபதி



பௌத்தக் கொள்கைகளின் படி இயங்கும் அரசாங்கத்தின் ஊடாக, சமாதானமான நாட்டைக் கட்டியெழுப்ப தாம் நடவடிக்கை எடுப்பதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார் வெசாக் பூரணை தினத்தை முன்னிட்டு அவர் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் இதனைத் தெரிவித்துள்ளார்.

நாட்டின் நல்லாட்சிக்கு, பௌத்த கொள்கைகள் உறுதுணை புரிகின்றன.அனைத்து இனங்கள் மற்றும் மதங்களுக்கு இடையில் சமத்துவத்தை ஏற்படுத்த வெசாக் பூரணை தினம் சந்தர்ப்பத்தை ஏற்படுத்துவதாகவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்

இதேவேளை, இலங்கையில் மக்கள் சிக்கலான சூழ்நிலையை அனுபவித்து வருகின்ற நிலையில், இந்த ஆண்டு வெசாக் போயா தினம் வந்திருப்பதாக எதிர்கட்சித்தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.அவர் விடுத்துள்ள விசேட அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.தற்போதைய அரசாங்கத்தினால் மக்கள் அதிக நெருக்கடி நிலையை அனுபவிக்கின்றனர்.வெசாக் போயா தினத்திலேனும், அரசாங்கம் கௌதம புத்தரின் போதனைகளை நன்கு கேட்டால், நாட்டு மக்களுக்கு நிவாரணம் வழங்கும் என்றும் ரணில் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை,இன்றைய வெசாக போயாதினத்துக்கு ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் பான் கீ மூன் வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார்.இது தொடர்பில் அவர் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில், புத்தரின் போதனை அடிப்படையில் வன்முறையற்ற சமூக கட்டமைப்பு, முன்னெப்போதும் இல்லாதவாறு, தற்போது அவசியப்படுவதாக சுட்டிக்காட்டியுள்ளார்.

# ஆஸி. சென்ற இலங்கையர் 31 பேர் நாடு கடத்தல்

(கொழும்பு)

சட்டவிரோதமாக படகுகளில் அவுஸ்ரேலியாவிற்கு சென்றிருந்த இலங்கை புகலிடக் கோரிக்கையாளர்கள் 31 பேர் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

கிறிஸ்மஸ் தீவில் வைக்கப்பட்டிருந்த இவர்கள் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்டதாக அவுஸ்ரேலிய குடிவரவு மற்றும் பிரஜாவுரிமை விவகார அமைச்சர் பிரெண்டன் ஓ கோணர் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, இதுவரை 1161 இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளர்கள் அவுஸ்ரேலியாவிலிருந்து திருப்பிய்னுப்பப்பட்டுள்ளனர். சட்டவிரோதமாக அவுஸ்ரேலியாவிற்குள் பிரவேசிப்பதற்காக ஆட்கடத்தலில் ஈடுபடுவோருக்கு பணம் வழங்குவதன் மூலம் பணத்திற்கும் உயிருக்கும் ஆபத்து ஏற்படுவதாக அமைச்சர் பிரெண்டன் ஓ கோணர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சட்டவிரோதமாக அவுஸ்ரேலியாவிற்கு வரும் அனைவரையும் அங்கிருந்து திருப்பி அனுப்புவதற்கோ அல்லது நவுரு மற்றும் மெனூஸ் தீவுகளிற்கு அனுப்பிவைக்கவோ நடவடிக்கை எடுக்கப்படும் என அந்த அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், ஆட்கடத்தலில் ஈடுபடுவோரின் வலையமைப்பை முடக்குவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என அவுஸ்திரேலிய குடிவரவு மற்றும் பிரஜாவுரிமை விவகார அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# இலங்கையர்கள் கைது

டொமினிக் குடியரசை தளமாக கொண்டு, இலங்கை உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்தவர்களை வெவ்வேறு நாடுகளுக்கு ஆட்கடத்தல் செயற்பாடுகளுக்கு உட்படுத்திய வலையமைப்பு ஒன்று கைது செய்யப்பட்டுள்ளது.

டொமினிக் குடியரசின் தேசிய காவற்துறையினர் இந்தக் குழுவை கைது செய்துள்ளனர்.கனடாவில் வசிக்கும் இலங்கையர் ஒருவரின் தலைமையில் இந்தக் குழு செயற்பட்டு வந்ததாகவும், கடந்தஇரண்டு மாதங்களாக இந்தக் குழு டொமினிக் குடியரசில் பதுங்கி இருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.தொடர்ந்து அவர்கள் கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட்டதன் பின்னர் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நாட்டில் ஜனநாயகத்தை நிலைநாட்ட சவாலை எதிர்நோக்கத் தயார்



நாட்டில் ஜனநாயகத்தை நிலைநாட்ட எந்தவொரு சவாலையும் எதிர்நோக்கத் தயார் என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ருவான் விஜேவர்தன தெரிவித்துள்ளார்.

அழுத்தங்கள், அச்சுறுத்தல்கள் போன்ற அடக்குமுறைகளுக்கு அஞ்சி நாட்டின் ஜனநாயகத்தை நிலைநாட்டும் முயற்சிகள் கைவிடப்படமாட்டாது. தேர்தல் தொடர்பில் ஜேர்மன் அரச சார்பற்ற நிறுவனமொன்று நடத்திய கருத்தரங்கில் கலந்து கொண்ட கட்சி உறுப்பினர்களுக்கு எதிராக சேறு பூசும் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அரச ஊடகங்களும் சில தனியார் ஊடகங்களும் இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக தேசத்துரோக முத்திரை குத்த முயற்சிக்கின்றன.அரசாங்கத்தை கவிழ்ப்பதற்கு ஜேர்மனியிடம் பணம் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது, வெளிநாட்டவர்கள் இலங்கையில் கருத்தரங்கு ஒன்றை நடாத்துவதனால் அரசாங்கத்தை கவிழ்க்க முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# ஜனாதிபதி முறையை அகற்ற எதிர்க்கட்சிகளுக்கு டியூ.அழைப்பு

(கொழும்பு)

நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை அகற்றுவதற்கு எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஒருங்கிணைந்து செயற்பட வேண்டும்

நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை இரத்துசெய்ய வேண்டும் என்ற தீர்மானத்தை ஐக்கிய தேசியக் கட்சியும் எட்டியிருப்பதாக சிறிலங்கா கம்மியூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் டியு குணசேகர தெரிவித்துள்ளார். சோசலிச மக்கள் முன்னணியினால் நேற்று முன்தினம் கொழும்பில் நடாத்தப்பட்ட குடியரசு தின நிகழ்விில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இந்தக் கருத்தை தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய லங்கா சமசமாஜ கட்சியின் பொதுச்செயலாளர் திஸ்ஸ வித்தாரண, அரசாங்கத்தினால் இணங்கப்பட்ட வகையில் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் வடக்கில் தேர்தல் நடத்தப்படவேண்டும் என்று வலியுறுத்தினார்.



குடியரசு தின நிகழ்வில் பங்கேற்றிருந்த ஜனநாயக இடதுசாரி கட்சியின் பொதுச்செயலாளரான அமைச்சர் வாசுதேவ நாயக்கார கருத்துத்தெரிவிக்கையில், 18 ஆவது அரசியலமைப்பு காரணமாக பொதுமக்களின் நலன்புரி சேவைகள் இல்லாதொழிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

# மின்கட்டண அதிகரிப்புக்கு எதிராக பேரணி



மின்கட்டண அதிகரிப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து மக்கள் விடுதலை முன்னணி நேற்று முன்தினம் பேரணி ஒன்றை முன்னெடுத்தது.

பொரளையில் ஆரம்பமான இந்த எதிர்ப்புப் பேரணி கொழும்பு கோட்டை வரை சென்றது.கட்சியின் பிரதம செயலாளர் ரில்வின் சில்வா, கட்சியின் அரசியல் குழு உறுப்பினர் அனுரகுமார திஸாநாயக்க உள்ளிட்ட கட்சியின் ஆதரவாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# தனியார் பாடசாலைகளை கண்காணிக்க பொறிமுறை

(கொழும்பு)


அரசாங்கத்தின் அனுசரணையில் இயங்கும் 78 தனியார் பாடசாலைகளின் செயற்பாடுகள் மீதான கண்காணிப்பை அதிகரிப்பதற்கான பொறி முறையை அரசாங்கம் விரைவில் அறிமுகம் செய்யும் என கல்வியமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

இவ்வாறான பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கு சம்பளத்தை வழங்குவதற்காக அரசாங்கம் ஒரு பில்லியன் ரூபா வரையிலும் செலவளிக்கின்றது. இதனைவிடவும் பெருமளவில் இலவச புத்தகங்களையும் வழங்குகின்றது. ஆயினும் இவர்களை கண்காணிப்பதற்கான ஏற்பாடுகள் எதுவும் இல்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்தப் பாடசாலைகளில் ஒரு தவணைக் கட்டணமாக 30 ஆயிரம் ரூபா முதல் 40 ஆயிரம் ரூபா வரையிலும் அறவிடப்படுகின்றன என்றும் அவர் தெரிவித்தார்.

இவ்வாறான பாடசாலைகளில் 1,25,000 மாணவர்கள் இருக்கின்றனர். நாங்கள் ஆசிரியர்களுக்கு சம்பளம் கொடுக்கின்றோம். இலவச புத்தகங்களையும் கொடுக்கின்றோம். இருப்பினும் பெற்றோர் அளவுக்கு அதிகமான கட்டணத்தை செலுத்த வேண்டியுள்ளது. இவைகள் தொடர்பில் யாரும் பேசுவதில்லை. எதிர்க்கட்சியினர் அரசாங்க பாடசாலைகளை மட்டும் விமர்சிக்கின்றனர் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்தப் பாடசாலைகளை பற்றி அமைச்சர் தினேஷ் குணவர்தன தலைமையிலான குழு அறிக்கையொன்றை தயாரித்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.





இம்முறை சிரச வெசாக் வலயத்தில் இலங்கையின் வரலாற்றில் முதல் முறையாக டிஜிட்டல் நேரடி ரெலி அலங்காரப் பந்தல் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.மூன்று வரலாற்றுக் கதைகளைப் பிரதிபலிக்கும் இந்த அலங்காரப் பந்தலில் 100 ஓவியங்களுக்கு மேல் பொருத்தப்படவுள்ளமை விசேட அம்சமாகும்.

48 அடி உயரத்தையும் 82 அடி நீளத்தையும் கொண்டதாக இந்த டிஜிட்டல் நேரடி ரெலி அலங்காரப் பந்தல் நிர்மாணிக்கப்பட்டது.190 பிரம்மாண்ட திரைகளைக் கொண்ட இந்த அலங்காரப் பந்தலின் நிர்மாணப் பணிகள் தற்போது MTV/MBC அலுவலக வளாகத்தில் இடம்பெற்று வருகின்றது. செரியுத் - முகலன் புராணக் கதை, அங்குலிமால புராணக் கதை மற்றும் தேவதத்த புராணக் கதை ஆகியவற்றை மையமாகக் கொண்டு இந்த அலங்காரப் பந்தல் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

# தீவக வலயப் பாடசாலைகளின் தேவைகள்

## படிப்படியாக பூர்த்தி செய்யப்படும்



(யாழ்ப்பாணம்)

தீவகப்பகுதி பாடசாலைகளில் காணப்படுகின்ற அனைத்து தேவைகளினையும் பூர்த்தி செய்வதனூடாக இப்பகுதி மாணவர்களின் கல்வியினை வளர்த்தெடுக்க முடியுமென ஈ.பி.டி.பி யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்திரி அலன்ரின் தெரிவித்தார்.

அனலைதீவு சதாசிவம் மகா வித்தியாலயத்திற்கான 45 இலட்சம் ரூபா நிதியில் ஆயிரம் பாடசாலைத் திட்டத்தின் கீழ் அமையப் பெறுகின்ற வகுப்பறைக் கட்டடத் தொகுதிக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் அவர் உரையாற்றுகையில்,

பாடசாலை மாணவர்களிற்கு தேவையான பௌதிகத் தேவைகள் மற்றும் கல்விகற்பதற்கேற்ற சூழலை ஏற்படுத்திக் கொடுப்பதனூடாக அவர்களின் கல்வித் தரத்தினை உயர்த்த முடியும் எனவே அபிவிருத்தி நோக்கோடு மேற்கொள்ளப்படும் பாடசாலைக்கான பௌதிக வளர்ச்சியுடன் மாணவர்களிற்கு பெற்றோரிடம் இருந்து தேவையான ஊக்குவிப்புக்களும் ஒத்துழைப்புக்களும் வழங்கப்பட வேண்டும்.

மாணவர்கள் தமது குடும்ப வறுமையினை சிந்தித்து கல்வியில் பின்னடைவு ஏற்படாத வகையில் அவர்களிற்கு தமது குடும்ப வறுமைகளை எடுத்துக் காட்டாது பூரணமான கல்வியினை கற்கக்கூடிய நிலைமையினை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும்.

அத்துடன் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக தம்மால் முடிந்த அனைத்துச் செயற்பாடுகளினையும் தீவக வலயக்கல்விப் பணிப்பாளர் ஆற்றிவருகின்றார்., அதற்கு மேலாக பௌதிக தேவைகள் மற்றும் கிராமத்தின் உட்கட்டமைப்பு வசதிகள் என்பன அனைத்து பிரதேசங்களிலும் அரசினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது தொடர்ந்தும் மேற்கொள்வோம். எனத்தெரிவித்தார். இந்நிகழ்வில் தீவக வலயக் கல்விப் பணிப்பபாளர் ஜோன் குயின்டேஸ், ஊர்காவற்றுறை பிரதேச சபை தவிசாளரும் ஈ.பி.டி.பி.யின் அமைப்பாளருமான ஜெயகாந்தன், வலி கிழக்கு பிரதேச சபை எதிர்கட்சித் தலைவரும் வலி. கிழக்கு ஈ.பி.டி.பி அமைப்பாளருமான ஐங்கரன் மற்றும் வலயக் கல்வி அதிகாரிகள் பொது அமைப்பு பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

# ஆலய புனருத்தாரணம் அடிக்கல் நாட்டல்


(மண்டைதீவு)

மண்டைதீவு கிழக்கு வேப்பந்திடல் அருள்மிகு கற்பக விநாயகர் ஆலயத்தின் புனருத்தாரண வேலைகளை ஆரம்பிப்பதற்கான அடிக்கல் நடும் விழா எதிர்வரும் 29ஆம் திகதி புதன்கிழமை வைபவரீதியாக நடைபெறுமென புனருத்தாரண சபையினர் அறிவித்துள்ளனர்.

அன்றைய தினம் முற்பகல் 11.24 - 11.48 மணிக்கிடையிலான உத்தராட நட்சத்திரமும் சிங்க லக்கினமும் சித்தயோகமும் கூடிய சுபமுகூர்த்தத்தில் இந்த புனிதமான நிகழ்வு இடம்பெறும்.

விநாயகக் கடவுளின் அருளை வேண்டும் பக்தர்கள் மற்றும் சைவ ஆசார் சிலர்கள் விழாவில் பங்கு கொண்டு நலன் பெறுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (23)

# மாவட்ட நிலையில் வெற்றி



(சாவகச்சேரி)

மாற்றுக் கொள்கைக்கான நிலையம் மாணவர்களுக்காக நடாத்திய “மொழியும் மனித நேயமும்” என்னும் தலைப்பிலான கட்டுரைப் போட்டியில் மாவட்ட நிலையில் யா/எழுதுமட்டுவாழ் ஸ்ரீ கணேச வித்தியாலய மாணவி செல்வி.டிலக்சனா பரமானந்த சோதி மூன்றாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

இவருக்கு சான்றிதழும் அன்பளிப்பு புத்தகங்களும் ஐயாயிரம் ரூபாய் பணப்பரிசும் வழங்கப்பட்டுள்ளது. (11)

# பெற்றோரை இழந்த பிள்ளைகளுக்கு நிதியுதவி

(யாழ்ப்பாணம்)

சிவன் அருள் இல்லம் (இங்கிலாந்து) நிதி உதவியுடன் யாழ்.மாவட்டத்தில் போரினால் பெற்றோரை இழந்த மாணவர்களிற்கான வங்கிக்கணக்கு ஆரம்பித்து வைப்புப்புத்தகம் கையளிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் அரியாலை அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் இடம்பெற்றது.


பாடசாலை அதிபர் அகிலன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் சிறுவர் மற்றும் இளைஞர்களுக்கான வலுவூட்டல் நிறுவனத்தின் திட்ட உத்தியோகத்தர் ரஞ்சித் சைலேந்திரகுமார் கலந்து கொண்டு சிறப்பித்தார். மேற்படி நிறுவனம் போரினால் பெற்றோரை இழந்த பிள்ளைகளிற்கு மாதாந்தம் 2000 ரூபா, 3000 ரூபா, 5000 ரூபா வீதம் வழங்கிருகின்றது. இத்தொகை கல்வித்தரங்களிற்கேற்ப பிரிக்கப்படுகின்றது. கோப்பாய்ப்பிரிவில் 23 பிள்ளைகளிற்கும், நல்லூர்ப்பிரிவில் 7 பிள்ளைகளிற்கும், சண்டிலிப்பாய்ப்பரிவில் 2 பிள்ளைகளிற்கும் மொத்தம் 32 பிள்ளைகளிற்கு இந்நிதியுதவி வழங்கப்பட்டு வருவதாக திட்ட உத்தியோகத்தர் மேலும் தெரிவித்தார். (33)

# விழிப்புணர்வு

(கரணவாய்)

கரணவாய் ஜே/350 கிராம அலுவலர் பிரிவில் நெல்லியடி பொலிஸ் உத்தியோகத்தர்கள் டெங்கு, மலேரியா போன்ற நோய்களை இல்லாதொழிக்கும் வகையில் விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அந்தவகையில் குறித்த பிரிவிலுள்ள மக்களின் வீடுகளுக்கு சென்று சுற்றுப்புறச் சூழல் தொடர்பாக மக்களுக்கு விளக்கமளித்து வருகின்றனர். (180)



**யாழ்.முஸ்லீம் கல்லூரி வீதியில் சந்தைத்தொகுதி கட்டடம் நிர்மாணிக்கப்பட்டு ஒன்றரை வருடங்களாகியும் திறக்கப்படாமல் காணப்படுகின்றது. மக்கள் பாவனையற்ற நிலையில் கலாசார சீர்கேடுகளும், மிருகங்கள் தஞ்சமடையும் இடமாகவுள்ளதாக மக்கள் கூறுகின்றனர். அத்துடன் கட்டடத்தின் உட்பகுதி சேதமடைந்துள்ளதாகவும் கூறுகின்றனர். (105)**

# தொடர்புகொள்ளவும்

(கரணவாய்)

கரவெட்டி பிரதேச செயலக பிரிவில் இவ்வருடம் க.பொ.த சாதாரண, உயர்தரத்தில் கல்வி பயிலும் மாற்று வலுவுள்ள வறுமைக்கோட்டிற்கு உட்பட்ட பிள்ளைகளை உடனடியாக கரவெட்டிப் பிரதேச செயலக பிரிவுடன் தொடர்புகொள்ளுமாறு பிரதேச செயலர் எஸ். சிவஸ்ரீகேட்டுள்ளார். (18)

# கடும்காற்றால் சேதங்கள்

(ஆனைக்கோட்டை)

தற்போது நிலவும் சீரற்ற காலநிலையால் ஆனைக்கோட்டை நவாலி மற்றும் பகுதிகளில் மாங்காய்கள், பலாக்காய்கள், தேங்காய் குரும்பைகள் முறிந்து விழுந்துள்ளன.

இதனால் வீட்டு உரிமையாளர்கள் பல கஷ்டங்களை எதிர்நோக்குவதாக கவலை தெரிவிக்கின்றனர். (104)

# முரசின் இன்றைய பலன்

**(25.05.2013 – சனிக்கிழமை)**

**விஜய வருஷம் வைகாசி மாதம் 11 ஆம் திகதி.**
**நட்சத்திரம் அனுசம் முன்னிரவு 9.32 வரை. திதி - பூரணை முற்பகல் 10.28 வரை. இராகுகாலம் 08.52 - 10.22 வரை.**
**சுபநேரம் 02.52 - 04.22 வரை. சித்தம்.**

**சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.**


| | |
|---|---|
| **மேடம்** | எண்ணத்திலும், செயலிலும் உற்சாகம். கூட உள்ளவர்களுக்கு, தாராளமாய் உதவுவீர்கள். தொழிலில். அபிவிருத்தி வேலை நிறைவேறும். ஆதாய பணவரவு. உத்தியோகத்தர்க்கு வெகுமதி. குடும்பத்தினர் அன்பில் மகிழ்வீர்கள். |
| **ரிஷபம்** | வேலைகள் அதிகமாகி தொந்தரவை உணர்வீர்கள். தோல்வியை மறக்கும் உற்சாகத்தை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். தொழில், சராசரி அளவில். வரவை விட குடும்பச் செலவு கூடும். பாதுகாப்பு விஷயத்தில் கவனம். |
| **மிதுனம்** | திட்டமிட்டவை வெற்றியாய் முடியும். குடும்பத்தினர். அன்பில் மகிழ்வீர்கள். தொழில், அபிவிருத்திப் பணி. உபரிவருமானம் கிடைக்கும். உத்தியோகத்தர்க்கு விரும்பிய பதவி அனுகூலம். வெளியூரிலிருந்து நல்ல செய்தி. |
| **கடகம்** | பலருக்கும் உதவி பாராட்டுப் பெறுவீர்கள். புதியவர்கள் அறிமுகமாவர். வேலைப்பளு இருக்கும். எல்லாவற்றையும் மனமுவந்து நிறைவேற்றுவீர்கள். தொழில், அபரிமித வளர்ச்சி. தாராள பணவரவு. வீட்டு உபயோகப்பொருள் வாங்குவீர்கள். |
| **சிம்மம்** | வசீகரமாக பேசுவீர்கள். எதிர்த்தவரும் உங்களை விரும்பும் நிலை உண்டாகும். சமூக அந்தஸ்து உயரும். தொழில், வியத்தகு முன்னேற்றம் பெறும். பணவரவு திருப்திகரம். விரும்பிய உணவுண்டு மகிழ்வீர்கள். தம்பதியர் அன்யோன்யம். |
| **கன்னி** | நண்பரிடம் உதவி கிடைக்கும். முக்கியஸ்தர்களின் பாராட்டு கிடைக்கும். தொழில் வளர்ச்சி பெற அதிக கவனமெடுப்பீர்கள். பணவரவு திருப்திகரமாகும். முக்கிய வீட்டுப்பொருள் வாங்குவீர்கள். இல்லறத் துணை ஆதரவில் மகிழ்வு. |
| **துலாம்** | இடையூறு செய்பவரை இனங்காண்பீர்கள். பேச்சில் நிதானமும் தெளிவும் காண்பித்து, வரும் சிரமத்தை தவிர்ப்பீர்கள். தொழில், கடின உழைப்பு. மிதமான பணவரவு. ப்கட்டுக்காக பயனற்ற பொருள் வாங்கவேண்டாம். பிள்ளைகளால் பெருமை. |
| **விருச்சிகம்** | சுயலாபத்திற்காக அணுகுபவர்களை அடையாளம் காண்பீர்கள். கடன் பெறுவதை தவிர்க்கவும். தொழில், அதிக உழைப்பு தேவை. வரவு சுமார். உடல் நலத்திற்கு உணவில் கவனம். வெளியூர் பயணம் பயன் அறிந்து மேற்கொள்க. |
| **தனுசு** | வேலைப்பளு சஞ்சலப்படுத்தும். குடும்பத்தில் வாக்குவாதம் பெருப்பிக்க வேண்டாம். தொழிலில் புது முயற்சிக்குப் பலன். கடன் பெற நேரும். பழகிப் பிரிந்தவர் சேருவர். பக்தியில் மனம் செல்லும். மாணவர் தேர்ச்சி பெறுவர். |
| **மகரம்** | மனதில் நல்ல எண்ணங்கள் வளரும். குடும்ப விஷயங்களை, பிறரிடம் பகிர வேண்டாம். தொழிலில் வளர்ச்சி தாமதம். சேமிப்பு செலவுக்கு பயன்படும். புத்திரரின் நற்செயல் மகிழ்ச்சி தரும். நண்பர் உதவியுடன் எதிர்காலத் திட்டமிடல். |
| **கும்பம்** | நண்பருடன் பழைய நினைவுகள் பகிர்வீர்கள். முன்னர் செய்தவற்றுக்கு, நற்பலன் தேடி வரும். தொழில் வளர்ச்சி காணும். தாராள பணவரவு. பெண்கள் ஆடை, ஆபரணம் வாங்குவர். எதிர்பாராத இடத்திலிருந்து ஒரு உதவி வரும். |
| **மீனம்** | எதிர்பார்ப்பு நிறைவேறுவதில் தடங்கல். உங்களால் பயன் பெற்றவர்கள் வாழ்த்துவர். தொழில், அதிக உழைப்பால் சீரடையும். அளவான பணவரவு. எதுவும் இரவல் கொடுக்க, வாங்க வேண்டாம். வாகன பயணத்தில் அவதானம். |

## சூடு பிடிக்கும் ஐ.பி.எல். கிரிக்கெட் சூதாட்டம்

# சிக்கினார் பாகிஸ்தான் நடுவர்

## ஐ.சி.சி.யும் அதிரடி நடவடிக்கை

வேலியே பயிரை மேய்ந்த கதை போல, பிரிமியர் கிரிக்கெட் தொடரில் நடந்த சூதாட்டத்தில் பாகிஸ்தான் நடுவர் அசத் ரௌப் சிக்கியுள்ளார். இதனையடுத்து இவரை, அடுத்த மாதம் இங்கிலாந்தில் இடம்பெறவுள்ள சம்பியன்ஸ் கிண்ண ஒருநாள் தொடருக்கான நடுவர் பட்டியலில் இருந்து, ஐ.சி.சி., அதிரடியாக நீக்கி நடவடிக்கை எடுத்துள்ளது. பாகிஸ்தானை சேர்ந்த சர்ச்சைக்குரிய நடுவர் அசத் ரௌப் (வயது–57). கடந்த ஆண்டு நடந்த ஐந்தாவது பிரிமியர் கிரிக்கெட் தொடரின் போது, மும்பையை சேர்ந்த மொடல் அழகி லீனா கபூர், (வயது–22). இவர் மீது பாலியல் புகார் கொடுத்தார். தன்னைத் திருமணம் செய்து கொள்வதாக கூறி ஏமாற்றியது உள்ளிட்ட பல்வேறு புகார்களை தெரிவித்து, இருவரும் இணைந்து எடுத்த போட்டோவை வெளியிட்டார். இம்முறை ஆறாவது பிரிமியர் கிரிக்கெட் தொடரில் சூதாட்டப் புகாரில் சிக்கியுள்ளார். மும்பை பொலிஸ் அதிகாரி ஒருவர் கூறுகையில், வின்டுவை விசாரித்ததில், தனக்கும், சூதாட்டம் நடந்ததாக கூறப்படும் போட்டியில் நடுவராக இருந்த பாகிஸ்தானின் அசத் ரௌப்புக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதாக தெரிவித்தார். சூதாட்டத்தில் ஈடுபட்டதற்காக பரிசு பொருட்கள் வழங்கியதாகவும் தெரிவித்தார் என்றார்.இதனையடுத்து சூதாட்ட வலையில் சிக்கியுள்ள அசாத் ராப்பை, மும்பை பொலிஸார் விரைவில் விசாரணை மேற்கொள்ள உள்ளனர். இதற்காக இவருக்கு சம்மன் அனுப்பி உள்ளனர். இதனையடுத்து அடுத்த மாதம் இங்கிலாந்தில் நடக்கவுள்ள சம்பியன்ஸ் கிண்ண ஒரு நாள் தொடருக்கான நடுவர் பட்டியலில் இருந்து அசாத் ரௌப்பை அதிரடியாக நீக்கி சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி.,) நடவடிக்கை எடுத்துள்ளது. இதுகுறித்து ஐ.சி.சி., சார்பில் வெளியிட்ட அறிக்கையில், ஊடகங்களில் வெளியான செய்தியை தொடர்ந்து பாகிஸ்தான் நடுவர் அசத் ரௌப்பை சம்பியன்ஸ் கிண்ண ஒரு நாள் தொடருக்கான நடுவர் பட்டியலில் இருந்து நீக்கினோம் எனத் தெரிவிக்கப்பட்டது. பாகிஸ்தான் கிரிக்கெட் சபைத் (பி.சி.பி.,) தலைவர் அக்ஷ்ரப் கூறுகையில், அசத் ரௌப் உள்ளிட்ட பாகிஸ்தான் நடுவர்கள் மற்றும் போட்டி நடுவர்கள் பி.சி.பி., ஒப்பந்தத்தில் இல்லை. இவர் நீக்கப்பட்டது குறித்து எவ்வித தகவல்களும் கிடைக்கவில்லை. எங்களது அனுமதியுடன் இவர், பிரிமியர் கிரிக்கெட் தொடரில் பங்கேற்க இந்தியாவுக்கு செல்லவில்லை. விரைவில் பாகிஸ்தான் நடுவர்கள் குறித்து புதிய விதிமுறைகள் உருவாக்கப்படும் என்றார்.



## வீரர்கள் சிக்கியது இறப்பு போன்ற இழப்பு

கிரிக்கெட் சூதாட்டத்தில் ராஜஸ்தான் றோயல்ஸ் வீரர்கள் சிக்கியது இறப்பு போன்ற இழப்பு என ராஜஸ்தான் றோயல்ஸ் அணிக் கப்டன் ராகுல் ராவிட் தெரிவித்தார். உண்மையை சொல்லப்போனால் எங்களுக்கு இது கடினமான காலகட்டமாகும். எங்கள் அணிக்கு இது பெரும் பின்னடைவாகும். இது போன்ற அனுபவத்தை நான் ஒருபோதும் சந்தித்தது கிடையாது. சில வகையில் இந்த சம்பவம் இறப்பு போன்ற இழப்பாகும். கிரிக்கெட் சூதாட்டத்தால் கோபம், சோகம், ஏமாற்றம் ஆகியவற்றை நாங்கள் ஒருசேர அனுபவித்தோம். இதனால் நாங்கள் மும்பை இந்தியன்ஸ் மற்றும் ஹைதராபாத் சன் ரைசர்ஸ் அணிக்கு எதிரான லீக் ஆட்டங்களில் குழப்பத்துடன் இருந்தோம். அது எங்கள் எல்லோருக்கும் கடினமான வாரமாகும். அதன் பின்னர் ஜெய்ப்பூரில் நாங்கள் 2 நாட்கள் தங்கினோம். இது எங்களுக்கு சிறப்பாக அமைந்தது. வீரர்கள் ஒருவருக்கொருவரும், பயிற்சியாளருடனும் திறந்த மனதுடன் பேசி தங்கள் உணர்ச்சிகளை பகிர்ந்து கொண்டனர். இதன் மூலம் வீரர்கள் உணர்ச்சி வசத்தில் இருந்து நன்றாக விடுபட்டனர் எனவும் அவர் தெரிவித்தார்.



# ஹோலி, ஹர்பஜன்சிங்கிற்கு

## என்னுடன் நெருங்கிய தொடர்பு

(புதுடில்லி)



ஐ.பி.எல்.சூதாட்ட வழக்கில் கைதானவர்களில் இந்தி நடிகர் விண்டு தாராசிங்கும் ஒருவராவார்.

சூதாட்ட தரகர்களுடன் இவருக்குத் தொடர்பு இருந்தது. நடிகர் விண்டுவிடம் பொலிஸார் நடத்திய விசாரணையில் பல அதிர்ச்சிகரமானதகவல்கள் வெளியாகி வருகின்றன.

அவர் ஐ.பி.எல்.லில் சூதாட்டத்தில் மட்டும் ஈடுபடவில்லை. சூதாட்டத்திற்காக மொடல் அழகிகளை அனுப்பியதும் தெரிய வந்தது.

சூதாட்ட இரகசியங்களைப் பெறுவதற்காக சூதாட்ட தரகர்களுக்கு 2 மொடல் அழகிகளை அவர் அனுப்பியதாக பொலிஸார் தெரிவித்தனர். அந்த 2 அழகிகளிடம் விசாரணை நடத்தப்படுகிறது. இந்த நிலையில் வீராட் ஹோலி, ஹர்பஜன்சிங், மன்பிரித் கோனி ஆகிய வீரர்களுடன், விண்டு தாராசிங்குக்கு நெருங்கிய தொடர்பு இருந்துள்ளது. இந்த 3 பேருடன் தான் மிகவும் நெருக்கமாக இருந்ததாக விண்டு பொலிஸாரிடம் வாக்குமூலம் அளித்துள்ளார்.

வீராட் ஹோலி பெங்களூர் அணிக் கப்டனாக உள்ளார். ஹர்பஜன் மும்பை அணியிலும், மன்பிரீத் கோனி பஞ்சாப் அணியிலும் விளையாடுகிறார்கள். இந்த 3 வீரர்களுக்கும் ஐ.பி.எல். சூதாட்டத்தி[ல்] தொடர்பு உள்ளதா என்பது பற்றி எங்களுக்கு இன்னும் முழுமையாக எதுவும் தெரியவில்லை என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேபோல ஐ.பி.எல். சூதாட்டத்தில் ஈடுபட்ட பொலிவுட் நடிகர்களின் பெயர் விவரங்களையும் விண்டு தெரிவித்துள்ளார். மேலும் ஐ.பி.எல். அணியின் உரிமையாளர் இந்த ஆண்டு நடந்த சூதாட்டத்தில் ரூ.1 கோடியை இழந்ததாகவும் அவர் தெரிவித்ததாக பொலிஸார் கூறியுள்ளனர்.

# வோர்னர் வருத்தம்



(சிட்னி)


ஊடகவியலாளர்களுடன் ஏற்பட்ட கருத்து மோதல் குறித்து வருத்தமடைவதாக அவுஸ்ரேலிய அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் டேவிட் வோர்னர் தெரிவித்துள்ளார்.

வலைத்தளத்தில் அவுஸ்ரேலிய ஊடகவியலாளர்கள் மீது டேவிட் வோர்னர் அண்மையில் ஆக்ரோஷமான வார்த்தைப் பிரயோகங்களை மேற்கொண்டிருந்தார். சில பயன்படுத்தக் கூடாத வார்த்தைகளைப் பயன்படுத்தியதன் மூலம் அவர் விமர்சனங்களுக்கு உள்ளாகியிருந்தார்.

இவ்விடயம் தொடர்பாக விசாரணை நடாத்திய அவுஸ்ரேலியக் கிரிக்கெட் சபை, அவருக்கு 5,750 அவுஸ்ரேலிய டொலர்களை அபராதமாக விதித்திருந்தது.

ஐ.பி.எல் இல் காணப்படும் சூதாட்டம் சம்பந்தமான ஆக்கமொன்றை வெளியிட்ட அவுஸ்ரேலிய ஊடகமொன்று, அதற்குரிய விளக்கப்படமாக டேவிட் வோனர் ஐ.பி.எல் போட்டி

யில் விளையாடும் புகைப்படத்தைப் பயன்படுத்தியமையே தனது கோபத்திற்கான காரணம் என டேவிட் வோர்னர் தெரிவித்தார். தனது புகைப்படம் பயன்படுத்தப்பட்டமை மிகவும் எரிச்சலை ஏற்படுத்தியது. அதன் காரணமாகவே நான் கோபத்தை வெளிப்படுத்தினேன். இந்த விடயத்தை நான் சிறந்த முறையில் கையாண்டிருக்கவில்லை என்பதை ஏற்றுக் கொள்கிறேன் எனவும் அவர் தெரிவித்தார்.



# சமநிலையில் முதல் ஆட்டம்

அயர்லாந்து, பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான முதலாவது ஒரு நாள் போட்டி சமநிலையில் நிறைவுற்றது.

அயர்லாந்துக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் அணிக்கும், அயர்லாந்து அணிக்குமிடையிலான 2 போட்டிகள் கொண்ட ஒருநாள் போட்டித் தொடரின் முதலாவது போட்டி டப்ளினில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் அணி முதலில் ஆடியது. இதன்போது மூன்று தடவைகள் மழை குறுக்கிட்டதால் ஆட்டம் 47 ஓவர்களாக மட்டுப்படுத்தப்பட்டது. இதன்படி பாகிஸ்தான் அணி 47 ஓவர்களில் ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 266 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

இதில் மொஹமட் ஹபீஸ் 113 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 122, அசத் சபீக் 89 பந்துகளில் 84 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் அலெக்ஸ் கியூசக், கெவின் ஓ பிரையன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

47 ஓவர்களில் 276 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய அயர்லாந்து அணி, 47 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 275 ஓட்டங்களைப் பெற்றுப் போட்டியை சமநிலை செய்தது. இதில் போல் ஸ்ரேர்லிங் 107 பந்துகளில் 103, கெவின் ஓ பிரையன் 47 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 84, எட் ஜொய்ஸ் 59 பந்துகளில் 32 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் மொஹமட் ஹபீஸ், ஜூனைட் கான் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களை கைப்பற்றினர். இப்போட்டியின் நாயகனாக கெவின் ஓ பிரையன் தெரிவானார்.

# ஆஷஸ் தொடர் எமக்கே

## உறுதி கொள்கிறார் கிளார்க்

(சிட்னி)

இங்கிலாந்துக்கு எதிரான ஆஷஸ் போட்டித் தொடரை வெல்வோம் என அவுஸ்ரேலிய அணிக் கப்டன் மைக்கல் கிளார்க் தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்து அணியில் அனுப[வம்] வாய்ந்த வீரர்கள் உள்ளனர். பல வீரர்கள் ஆஷஸ் தொடரில் விளையாடியவர்கள். தற்போது இங்கிலாந்து அணி சிறப்பாக விளையாடி வருகிறது. இந்திய தொடரில் இங்கிலாந்து அணி வெற்றி கண்டது. சமீபத்தில் நடந்த எங்களது இந்திய சுற்றுப்பயணம் நாங்கள் நினைத்தபடி சிறப்பாக அமையவில்லை. எனவே எங்கள் அணியை குறைத்து மதிப்பிடுவதை நான் ஏற்றுக் கொள்கிறேன். அதேநேரத்தில் வெற்றிக்குத் தேவையான முழுப் பலத்தையும் நாங்கள் வெளிப்படுத்துவோம்.


ஆஷஸ் தொடரை வெல்வது தான் எங்கள் இலக்கு. இது கடினமான விடயம் என்பது எங்களுக்குத் தெரியும். இருப்பினும் ஆஷஸ் தொடரைவெல்ல நாங்கள் தீவிர முயற்சி மேற்கொள்வோம். அவுஸ்ரேலிய மக்களுக்காக ஆஷஸ் தொடரை வெல்வோம் என்ற நம்பிக்கை இருக்கிறது.

அவுஸ்ரேலிய துடுப்பாட்ட வீரர்கள் தேவைக்கு ஏற்ப சிறப்பாக விளையாடவில்லை என்பது அவர்களுக்குத் தெரியும். துடுப்பாட்ட வீரர்கள் பொறுப்பை உணர்ந்து விளையாட வேண்டும். துடுப்பாட்டத்தில் நாங்கள் சிறப்பாக செயற்பட்டால், எங்களது இளம் பந்து வீச்சாளர்கள் வாய்ப்பை பயன்படுத்தி 20 விக்கெட்டுகளையும் வீழ்த்துவார்கள். சமூக வலைத்தளத்தில் வீரர்கள், இரசிகர்களுடன் கருத்தைப் பரிமாறிக் கொள்வதில் தவறு இல்லை. டேவிட் வோர்னர் சிறந்த வீரர். எதிர்காலத்தில் கப்டன் பதவிக்கு வரக்கூடிய திறமை அவருக்கு இல்லை என்று சொல்ல முடியாது. வேகப்பந்து வீச்சாளர் ரையான் ஹாரிஸ் காயத்தில் இருந்து நன்கு மீண்டு வருகிறார். எனது உடல்தகுதியும் தற்போது நல்ல நிலையில் உள்ளது. நான் சிறப்பாக செயற்படுவேன் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# தங்கக் காலணி விருது

இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்து தொடரின் இவ்வருடத்திற்கான தங்க காலணி விருதை மான்செஸ்டர் யுனைட்டட் அணியின் ரொபின் வான் பெர்சி பெற்றுள்ளார். இதன் மூலம் இவ்விருதை அவர் இரண்டாவது முறையாகப் பெற்றுள்ளார்.

கடந்த வருடத்தில் ஆர்சனல் சார்பாகப் போட்டிகளில் பங்குபற்றிய ரொபின் வான் பெர்சி 38 போட்டிகளில் 30 கோல்களைப் பெற்று இந்த விருதை வென்றிருந்தார். இம்முறை மான்செஸ்டர் யுனைட்டட் சார்பாக 38 போட்டிகளில் அவர் 26 கோல்களைப் பெற்றிருந்தார்.



வட-கிழக்கு வீரர்களை இனங்காணும்

# 2 நாள் பயிற்சி முகாம் சென். பற்றிக்ஸில் நாளை

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கு மாகாண கிரிக்கெட் வீரர்களை இனங்காணும் இரண்டு நாள் பயிற்சி முகாம் நாளை சென். பற்றிக்ஸ் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

வடக்கு-கிழக்கு மாகாணத்திலுள்ள 21 வயதிற்குட்பட்ட வீரர்களை இனங்காணும் வகையில் இலங்கை கிரிக்கெட் சபையின் தெரிவுக் குழுவினால் இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதில் ஏற்கனவே, மாகாண அணிகளிலுள்ள வீரர்களுக் கிடையிலேயே தெரிவுகள் இடம்பெறவுள்ளதாகவும், இதன்போது இரண்டு ஒரு நாள் போட்டிகள் நடாத்தப்பட்ட வீரர்கள் தெரிவு செய்யப்படுவார்கள் எனவும் போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

வடக்கு மாகாண கிரிக்கெட் பயிற்றுநர் புஸ்பகுமாரவின் ஒழுங்குபடுத்தலில் மேற்கொள்ளப்பட்டுள்ள இப்பயிற்சி முகாம் நிறைவின் போது, இலங்கை கிரிக்கெட் தெரிவுக் குழுவின் முக்கிய அதிகாரிகள், முன்னாள் இலங்கை அணியின் நட்சத்திர வீரர்கள் உட்பட பலர் கலந்துகொள்ள வுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதில் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மற்றும் மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்ட வீரர்கள் பங்கு கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எஸ்.பி.)

# தேசிய மட்ட கரப்பந்து காலிறுதியுடன் யாழ். மாவட்டம் அவுட்

(பதுளை)

தேசிய இளைஞர் சேவை மன்றத்தினால் நடாத்தப்பட்ட தேசிய மட்ட கரப்பந்தாட்டத் தொடரில் யாழ். மாவட்ட அணிகள் காலிறுதி யுடன் வெளியேறியுள்ளன.

தேசிய இளைஞர் சேவை மன்றத்தினால் நடாத்தப்பட்டு வரும் தேசிய மட்ட கரப்பந் தாட்டத் தொடர் கடந்த 19ஆம் திகதி பதுளை நகர பொதுவிளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

இதில் ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் ஆண், பெண் என தலா ஒவ்வொரு அணிகள் பங்குபற்றின.

ஆண்கள் பிரிவில் யாழ். மாவட்ட அணி முதல் போட்டியில் கண்டி மாவட்ட அணியுடன் மோதியது. இதில் யாழ். மாவட்ட அணி 2-0 என்ற நேர் செட் கணக்கில் வெற்றிபெற்று இரண்டாவது சுற்றுக்குத் தகுதிபெற்றது.

இரண்டாவது போட்டியில் நுவரேலியா மாவட்ட அணியும் யாழ். மாவட்ட அணியும் மோதின. மூன்று செட்களைக் கொண்ட இப் போட்டியில் இரு அணிகளும் ஒவ்வொரு வெற்றியைப்பதிவாக்கி தமது திறமைகளை வெளிப்படுத்தின. இறுதியில் வெற்றியைத் தீர்மானிக்கும் இறுதிச் செட்டில் யாழ். மாவட்ட அணி 25-21 என்ற கணக்கில் வெற்றிபெற்று காலிறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றது.

காலிறுதிப் போட்டியில் கொழும்பு மாவட்ட அணியும், யாழ். மாவட்ட அணியும் மோதின. இதில் கொழும்பு மாவட்ட அணி 25-20, 25-20 என்ற கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றது.

இறுதி வரை போராடிய யாழ். மாவட்ட அணி காலிறுதியுடன் வெளியேற்றப்பட்டது.

இதேவேளை, பெண்களுக்கான போட்டியில் யாழ். மாவட்ட அணியும் அனுராதபுரம் மாட்ட அணியும் மோதின. இதில் யாழ். மாவட்ட அணி 2-0 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியது.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது சுற்றில் யாழ். மாவட்ட அணியும் காலி மாவட்ட அணியும் மோதின. இதில் யாழ். மாவட்ட அணி 2-1 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று காலிறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றது.

காலிறுதிப் போட்டியில் கேகாலை மாவட்ட அணியும், யாழ். மாவட்ட அணியும் மோதின. யாழ். மாவட்ட அணி 0-2 என்ற செட் கணக்கில் தோல்வியுற்று தொடரிலிருந்து வெளியேறியது. (93)


விளையாட்டுச் செய்திகள்

# பொம்மர்ஸ், டயமன்ஸ் நாளை பலப்பரீட்சை

அல்வாய் வடக்கு நக்கீரன் விளையாட்டுக்கழகம் பருத்தித்துறை கால்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் நடாத்திவந்த கால்பந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டியில் நாளை வதிரி பொம்மர்ஸ், டயமன்ஸ் அணிகள் மோதவுள்ளன. அல்வாய் நக்கீரன் விளையாட்டுக்கழக மைதானத்தில் அண்மையில் அரையிறுதிப் போட்டிகள் நடைபெற்றன. முதலாவது அரையிறுதிப்போட்டியில் வதிரி பொம்மர்ஸ் அணியினை எதிர்த்து அல்வாய் மனோகரா அணி மோதியது. இதில் வதிரி பொம்மர்ஸ் அணி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றது. தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது அரையிறுதிப் போட்டி டயமன்ஸ் அணிக்கும் நவிண்டில் கலைமதி அணிக்கு இடையில் நடைபெற்றது. இதில் டயமன்ஸ் அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றது. நாளை நடைபெறவுள்ள இறுதிப்போட்டியில் டயமன்ஸ், பொம்மர்ஸ் அணிகள் மோதவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பல்கலைக்கழகங்களுக்கிடையிலான மினி ஒலிம்பிக் அசத்திய யாழ். பல்கலை வீர,வீராங்கனைகள்


ஜெயருபன்


அபிகரன்

(யாழ்ப்பாணம்)

11ஆவது இலங்கை பல்கலைக்கழகங் களுக்கிடையிலான தடகள விளையாட்டுப் போட்டியில் யாழ். பல்கலைக்கழக வீர,வீராங் கனைகள் ஒரு தங்கம் உட்பட எட்டு பதக்கங் களை வென்று கலக்கியுள்ளனர்.

இலங்கை பல்கலைக்கழகங்களுக்கிடை யிலான இந்த ஆண்டுக்கான தடகளப் போட்டி கடந்த 12,13ஆம் திகதிகளில்மகிந்த ராஜபக்ஷ சர்வதேச விளையாட்டு அரங்கில் இடம்பெற்றது.

இப்போட்டியில் யாழ்.பல்கலைக்கழக வீர, வீராங்கனைகள் தமது திறமைகளை வெளிக்காட்டி பதக்கங்களை வென்றுள்ளனர்.

இதில் ஆண்களுக்கான உயரம் பாய் தலில் ஜெயரூபன் தங்கப் பதக்கம் வென் றுள்ளார். ஆண்களுக்கான 110 மீற்றர் மற் றும் 400 மீற்றர் தடை தண்டல் போட்டியில் ஐங்கரன் வெள்ளிப் பதக்கத்தை வென் றுள்ளார்.

ஆண்களுக்கான தட்டெறிதற் போட்டி யில் நிசாந் வெண்கலப்பதக்கதையும், ஆண் களுக்கான உயரம் பாய்தலில் அபிகரன் வெண்கலப்பதக்கத்தையும்,பெண்களுக்கான ஈட்டி எறிதலில்தாரணி வெண்கலப்பதக் கத்தை யும், பெண்களுக்கான தண்டடெறிதலில் ரி. அபிராமி வெண்கலப்பதக்கத்தையும், பெண் களுக்கான 800 மீற்றர் ஓட்டப் போட்டியில் துஷ்யந்தினி வெண்கலப்பதக்கத்தையும் வென்று கலக்கியுள்ளனர்.


ஐங்கரன்


தாரணி


நிசாந்


துஷ்யந்தினி


அபிராமி

# வென்றது கிறாஸ் கோப்பர்ஸ்

(தெல்லிப்பளை)

வட்டுக்கோட்டை ஓல்ட்கோல்ஸ் அணிக்கெதி ரான ஒரு நாள் போட்டியில் கிறாஸ் கோப் பர்ஸ் அணி ஆறு விக்கெட்டுக்களால் அபார வெற்றிபெற்றது.

இலங்கை கிரிக்கெட் சபையினால் நடாத் தப்படும் பிரிவு மூன்றுக்கான லீக் ஆட்டமொன்று கடந்த சனிக்கிழமை தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இதில் முதலில் ஆடிய வட்டுக்கோட்டை ஒல்ஸ்கோல்ஸ் அணி ராஜகாந்தனின் பந்து 'வீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாமல் மளமள வென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இருப்பினும் நிரோஜன், திலீபன் ஆகி-யோர் நிதானமாக ஆடி அணியின் ஓட்ட எண்ணிக்கையை அதிகரித்தனர். இறுதியில் ஓல்ட்கோல்ஸ் அணி 34.3 ஓவர்கள் நிறை வில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 263 ஓட்டங்களைப் பெற்றது. இதில் நிரோஜன் 54, திலீபன் 43, அபிராஜ் 39, சீராளன் 29 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ராஜகாந்தன் 41 ஓட்டங்களைக் கொடுத்து ஏழு விக்கெட்டுக்களைச் சாய்த்தார்.

பதிலுக்கு 264 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய கிறாஸ் கோப்பர்ஸ் அணி கோகுலன், டிலோஜன் ஆகியோரின் பொறுப்பான ஆட்டத்தின் மூலம் இலகுவாக வெற்றிபெற்றது.

இறுதியில் கிறாஸ் கோப்பர்ஸ் அணி 36.2 ஓவர்கள் நிறைவில் நான்கு விக்கெட்டுக்களை இழந்து 266 ஓட்டங்களைப் பெற்று வெற்றியிலக்கை அடைந்தது.

இதில் கோகுலன் 74, டிலோஜன் 63, காந்தசீலன் 44 ஓட்டங்களைப் பெற்று அணி யின் வெற்றியை இலகுபடுத்தினர். பந்து வீச்சில் திலீபன் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

இப்போட்டிகள் யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கத்தினால் நடாத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (எஸ்.பி.)

# கூட்டமைப்பு முகம் கொடுக்கும் நெருக்கடி

**- டி.பி.எஸ்.ஜெயராஜ் கட்டுரையிலிருந்து.**

ரி.என்.ஏ உடைந்துபோய் விடும் என்று அதிகமான ஊகங்கள் உலா வருகின்றன. தற்போது என்ன நடக்கிறது என்றால், ஈ.பி.ஆர்.எல்.எப், ரெலோ, புளொட் என்பன ரி.யு.எல்.எப் உடன் இணைந்து ரி.என்.ஏ யினை ஒரு தனிக் கட்சியாக பதிவு செய்யும்படி இலங்கை தமிழரசுக் கட்சியினை வற்புறுத்தி வருகின்றன. ஜனாதிபதி ராஜபக்ஸ வட மாகாணசபைக்கான தேர்தல்கள் செப்ரெம்பரில் நடக்கும் என வெளியிட்ட அறிவிப்பு இந்த வேண்டுகோளுக்கு ஒரு அவசர சக்தியை தூண்டிவிட்டுள்ளது. ரி.என்.ஏ யினை ஒரு அரசியல் கட்சியாக பதிவு செய்வது வட மாகாணசபை தேர்தல்களுக்கு முன்பாக நடத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்படுகிறது. அதில் மேலும் ஊகிக்கப்படுவது என்னவென்றால் இலங்கை தமிழரசுக் கட்சி, ரி.என்.ஏ யினை பதிவு செய்வதை தொடர்ந்து மறுத்து வருமாயின் ஏனைய நான்கு கட்சிகளும் ரி.என்.ஏயினை தனியான கட்சியாக பதிவு செய்வதற்கு ஏற்ற வழிகளை அமைத்துக் கொள்வதுடன் இலங்கை தமிழரசுக் கட்சியின் சின்னமான வீட்டுக்குப் பதிலாக ரி.யு.எல்.எப் பின் தேர்தல் சின்னமான சூரியனை பயன்படுத்தும் என்று. எனினும் இந்த அச்சுறுத்தலை சிலர் வெகு தீவிரமாக எடுத்துக் கொள்ளாததுடன் அது ஒருவகை அரசியல் மிரட்டல் என்று கருதுகிறார்கள்.

இன்றுள்ள யதார்த்தம் என்னவென்றால் இந்த நான்கு கட்சிகளும் ஒன்றுசேர்ந்தாலும் அவை இலங்கை தமிழரசுக் கட்சிக்கு இணையாகாது. தவிரவும் எந்தக் கட்சியோ அல்லது கட்சிகளோ பிரிந்து சென்று தனியான ஒரு அமைப்பை உருவாக்கினால் அது தமிழரின் ஒற்றுமையை சீர்குலைப்பதை நோக்கமாகக் கொண்ட அரசாங்கத்தின் அடியாட்களின் தன்மையை போலவே கருதப்படும்.

உடனடியாக ரி.என்.ஏ.யினை ஒரு அரசியல் கட்சியாக பதிவு செய்வதில் சில சட்டச் சிக்கல்களும் உள்ளன. புதிய தேர்தல் விதிகள், ஒரு புதிய கட்சியை வருடத்தின் நடுப்பகுதியில் பதிவு செய்வதற்கு தடையாக உள்ளன. ஒவ்வொரு வருடமும் ஜனவரி மாதத்தில் தேர்தல் ஆணை யாளர் கட்சிகளை பதிவு செய்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்படும்போது மட்டுமே புதிய கட்சியை பதிவு செய்யலாம்.



இந்த சட்ட நிலைப்பாட்டை தெளிவு படுத்திக் கொள்ளும் ஒரு சிறு முயற்சியாக, சட்டத்தரணியும் ரி.என்.ஏ நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் அவர்களுக்கு மின்னஞ்சல் மூலம் ஒரு கேள்வியை அனுப்பியிருந்தேன்.

எனது மின்னஞ்சல் கேள்விக்கு திரு.சுமந்திரன் அளித்திருந்த பதில் இதுதான் - "புதிய தேர்தல் சட்ட விதிகளின்படி, ஒவ்வொரு வருடமும் ஜனவரி மாதத்தில் தேர்தல் ஆணையாளர் புதிய கட்சிகளை பதிவு செய்வதற்காக விண்ணப்பங்கள் கோரப்படும்போதுதான் ஒரு புதிய கட்சி பதிவு செய்வதற்காக விண்ணப்பிக்க முடியும். ஆனால் ஒரு தேர்தல் அறிவிக்கப்பட்டிருக்குமானால் அவரால் அப்படியான விண்ணப்பங்களை கோரமுடியாது. வட மாகாணசபைத் தேர்தல்கள் செப்ரம்பர் 2013இல் நடைபெறுமானால் அதற்கு முன்னதாக ரி.என்.ஏ யினை ஒரு தனிக்கட்சியாக பதிவு செய்வதற்கு ஒரு வழியுமில்லை".

ஒரு புதிய கட்சியை பதிவு செய்வதில் உள்ள சரியான சட்ட நிலைப்பாடு இதுதான், ரி.என்.ஏயினை உடனடியாக பதிவு செய்யவேண்டும் என மேற்கொள்ளப்படும் கடுமையான அழுத்தங்களில் இருந்து இலங்கை தமிழரசுக் கட்சி இதன்மூலம் ஒருவகையில் நிம்மதி பெருமூச்சு விட முடியும். நெருக்கடி தீர்ந்து விட்டது என்பது இதன் கருத்தாகாது. அது எப்போதும் அங்கு இருந்துகொண்டேயிருக்கும், மற்றும் உகந்த நேரத்தில் இலங்கை தமிழரசுக் கட்சிக்கு அழுத்தம் கொடுப்பதற்காக அது புத்துயிர் பெறும்.

அதேவேளை சுரேஸ் பிரேமச்சந்திரன் ரி.என்.ஏக்குள் இருந்துகொண்டே இலங்கை தமிழரசுக் கட்சி மீது மேற்கொள்ளப்படும் தாக்குதல்களை முன்னின்று நடத்துவது தனது சொந்த நோக்கங்களுக்காகவே, தமிழ் சிவில் அமைப்பு என அழைக்கப்படும் இயக்கம் மதிநுட்பத்துடன் வெளியில் இருந்து ஒரு பிரசாரத்தை முடுக்கிவிடுவதும் தங்கள் சொந்த நோக்கங்களுக்காகவே. இந்த சிவில் சமூக இயக்கத்துக்கும் மற்றும் தமிழ் தேசிய மக்கள் முன்னணி - தமிழ் காங்கிரஸ் அமைப்புகளுக்கும் இடையே இலங்கை தமிழரசுக் கட்சியின் முக்கியத்துவத்தை இல்லாதொழித்து அதன் அரசியல் செல்வாக்கை ஆண்மையில்லாத தன்மைக்கு குறைத்துவிடுவதற்கான ஒரு நுட்பமான இணக்கப்பாடு ஏற்பட்டுள்ளது.

சுரேஸ் பிரேமச்சந்திரன் மற்றொரு தனியான திட்டத்தை வைத்துள்ளார். அவரது நோக்கம் ரி.என்.ஏ.இற்குள் இருக்கும் ஏனைய அமைப்புகளுடன் சேர்ந்து இலங்கை தமிழரசுக் கட்சியை ரி.என்.ஏ.இற்குள் ஓரம் கட்டுவது போலத் தெரிகிறது. எப்போதாவது ரி.என்.ஏ ஒரு தனிக்கட்சி கட்டமைப்பாக உறுதி செய்யப்பட்டால், அதற்குள் ஒரு உள்ளக பிரசாரத்தை மேற்கொள்வது மிகவும் இலகுவாக இருக்கும். சம்பந்தனுக்கு எதிராக ஒரு கடுமையான பிரசாரத்தை நடத்துவதன் மூலம் ரி.என்.ஏ யின் தலைமைத்துவத்தை கைப்பற்றுவதே சுரேஸ் பிரேமச்சந்திரனது நோக்கம். மாவையின் அரசியல் மூப்பையும் கருதாது, சேனாதிராஜா ஒரு சுமையாக இருப்பார் என்றே பிரேமச்சந்திரன் கருதுகிறார். பிரேமச்சந்திரனது குறுகிய கால நோக்கமாக இருப்பது ஒன்றின் வடக்கின் முதலமைச்சர் பதவிக்கு போட்டியிடுவது அல்லது அவரது சகோதரரை ரி.என்.ஏ யின் வடக்கிற்கான முதலமைச்சர் வேட்பாளராக நிறுத்த வைப்பது.

அதேபோல கஜேந்திரன் - கஜேந்திரகுமார் இரட்டையர்கள் மற்றும் சிவில் சமூக அமைப்பின் பிரிவினர்கள் நடத்தும் அரசியல் பற்றி அநேகர் கேள்வி கேட்க ஆரம்பித்துள்ளார்கள்.

# பிழையின்றித் தமிழ் 21

**- ஞானச்செல்வன் -**

**நுட்பச் செய்திகள்:**

சபா, சபை என்று வடசொற்களால் குறித்தவற்றை இந்நாளில் நாம் மன்றம், அரங்கம் என்று சொல்லி வருகிறோம். மன்றம் என்பது ஓர் அமைப்பையும், அரங்கம் என்பது விழா நடைபெறும் கூடத்தையும் பொதுவாகக் குறிக்கும். மாமன்றம், பெருமன்றம், பேரவை, முற்றம் என்னும் சொற்களும் நல்ல தமிழில் இன்று வழக்கத்தில் உள்ளன.

பழைய நாட்களில் மரத்தடியையும், தொழுவத்தையும் கூட மன்றம் என்றனர். அப்போதெல்லாம் மரத்தின் அடியில் (நிழலில்) பலர் கூடிப் பேசியிருந்தமையால் மன்றம் எனும் சொல்லின் பொருள் பொருத்தமடைகிறது. ஆனால் தொழுவம் என்பது மாடுகளைக் கட்டும் இடம். மாட்டுத் தொழுவம் என்ற பொருள் இந்நாளின் மன்றத்தோடு பொருந்தவில்லை.



அரங்கம் என்பது சிலம்ப விளையாட்டு நிகழும் இடத்தைக் குறித்தது. சிலம்ப விளையாட்டைத் திறந்த வெளியிலோ ஒரு பெரிய கூடத்திலோ இன்றும் நிகழ்த்தக் காண்கிறோம். அரங்கம், பெரிய கூடத்தை உணர்த்தும் சொல்லாகப் பொருந்துகிறது. ஆனால் அதற்குச் சுடுகாடு என்ற பொருளும் உண்டு என்று அறியும் போது நமக்கு அச்சம் ஏற்படுமன்றோ?

ஆகியோர், முதலியோர் எனும் இரண்டு சொற்களை இடவேறுபாடு கருதாமல் பொருத்தம் இல்லாமல் இந்நாளில் பலர் எழுதி வருகிறார்கள். திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகிய மூவரும் தேவாரம் பாடியவர்கள் ஆவர். ஆகிய என்ற சொல்லை வரையறுத்த எண் முற்றிலும் குறிக்கப்படும் இடங்களில்தான் பயன்படுத்த வேண்டும்.

கண்ணப்பநாயனார், சிறுத்தொண்ட நாயனார், அப்பூதியடிகளார் முதலிய நாயன்மார்களைப் பற்றிப் பெரிய புராணம் பேசுகிறது. கண்ணப்பர், சிறுத்தொண்டர், அப்பூதியோடு முடியவில்லை. இன்னும் பலர் (அறுபத்து மூவர்) இருப்பதால் முதலிய எனும் சொல் பயன்படுத்தப்பட்டது. இவற்றை மாற்றிப் பயன்படுத்துதல் பிழை. ஆகிய, ஆகியோர் என்று சொல்லும்போது அத்தொகுப்பில் உள்ளவர் அனைவர் பெயரும் இடம்பெற வேண்டும். ஒரு தொகுப்பில் உள்ள சிலவற்றைச் சொல்லி, பிற சொல்லாமல் விடும்போது முதலிய (முதலாகவுடைய) என்னும் சொல்லைப் பயன்படுத்த வேண்டும். நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப் பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு ஆகிய எட்டு நூல்களும் எட்டுத் தொகை எனப்படும். திருமுருகாற்றுப் படை, பொருநராற்றுப் படை முதலிய பத்து நூல்கள் பத்துப் பாட்டு எனப்படும். எட்டுத் தொகையில் எட்டு நூல்களும் சொல்லப்பட்டனவாதலின் ஆகிய எனும் சொல் பயன்பட்டது. பத்துப்பாட்டில் இரண்டு மட்டுமே குறித்ததால் முதலிய எனும் சொல் பயன்படுத்தப்பட்டது.

இப்போதெல்லாம் தொலைக்காட்சியில் தீப ஒளித் திருநாள் என்ற சொல்லாட்சி கண்டு, கேட்டு வருகிறோம். தீபாவளி எனும் சொல் பிழையான சொல்லா? தீபம் + ஆவளி = தீபங்களின் வரிசை என்பது இதன் பொருள். வடபுலத்தில் தீபங்களை (விளக்குகளை) வரிசையாக நிரம்ப ஏற்றி வழிபடும் பழக்கத்தால் வந்த சொல் இது. நாமும் கூட, திருக்கார்த்திகை நாளில் தீபங்களை நிரம்ப ஏற்றுகிறோம் அல்லவா? தீப ஒளியென்பதற்கு "விளக்கின் வெளிச்சம்" என்பது பொருள். விளக்கில் வெளிச்சம் வருவது இயல்புதானே? இதில் என்ன சிறப்பு இருக்கிறது?

உண்மையில் பட்டாசுகளின் இரைச்சலும் வெளிச்சமும்தான் காணுகின்றோம். ஆதலின் தீபாவளியைத் தீப ஒளி ஆக்குதல் வேண்டுமா?

செருக்கு, தருக்கு என இரு சொற்கள் ஒன்றுபோல் இருப்பவை. ஆனால் நுட்பமான பொருள்வேறுபாடு உண்டு. ஒருவர்க்குத் தாம் கற்ற கல்வியால் செருக்கு இருக்கலாம். இருக்கவேண்டும். ஞானச் செருக்கு என்பான் பாரதி. ஆனால் நிரம்பக் கற்றுவிட்டோம் என்று தருக்கித் திரிதல் தகாது. செருக்கு ஒரு பெருமிதம். அது கல்வியாலோ, கொடையாலோ, வீரத்தாலோ உண்டாகலாம். ஆனால் எதனாலும் மனிதர்க்கு தருக்கு உண்டாதல் தகாதாம். தன்னை விஞ்சியவர் எவருமிலர் என்னும் தருக்கு அழிவைத்தரும்.

# புத்தகங்களின் உடைவு

அச்சுப் புத்தகங்கள் நிறைய விற்கின்றன. இன்னமும் விற்கின்றன என்பது அதிசயம்தான் என நிறைய மேற்குலக கருத்தாளர்கள் அடிக்கடி சொல்கிறார்கள். அதே நேரம் முன்னெப்போதையும் விட ஏராளமான எழுத்தாளர்கள் இப்போது புத்தகங்களையும், கட்டுரைகளையும், கவிதைகளையும் எழுதித் தள்ளுகிறார்கள். நிறைய முழு நேர எழுத்தாளர்கள் இப்போதெல்லாம் புத்தகங்கள் எழுதித் தொழில் நடத்த முடியவில்லை, வேறு வேலைகள் செய்தபடி அவ்வப்போது ஒரு புத்தகம் எழுதலாம், அது ஏதோ சில ஆயிரம் பிரதி விற்றால் அதிகம். அதையும் பெரும் பிரசுரகர்த்தர்களிடம் கொடுத்தால் நமக்கு ஏதும் கிட்டுவதில்லை என்கிறார்கள். அதனால் நிறைய எழுத்தாளர்கள் புத்தகங்களைத் தாமே பிரசுரிக்கத் தலைப்பட்டிருக்கிறார்கள்.

அதிக பக்கங்கள் கொண்ட பெரும் புத்தகங்களை எழுதி விற்றுக் கொண்டிருந்த புகழ் பெற்ற எழுத்தாளர்கள் கூட இப்போது யோசிக்கிறார்கள். ஒரு உத்தி இப்போது மேலோங்கி வருகிறது. ஒரு தடிப் புத்தகத்தின் பகுதிகளைச் சிறு புத்தகங்களாகப் பிரித்து வேறு தலைப்பில் தனித்தனியே குறைந்த விலைக்கு விற்கிறார்கள். நீல் ஸ்டீ.பன்ஸனின் “பரோக்” வரிசை நாவல்களில் இரண்டாவது மூன்றாவது புத்தகங்கள் இப்போது இப்படிப் பிரித்து ஒவ்வொன்றும் மூன்று புத்தகங்களாக விற்கப்படுகின்றன. அதாவது ஆறு புத்தகங்களாக.

இதைத் தவிர பல எழுத்தாளர்கள் தம் புத்தகத்தின் முதல் ஒரு அத்தியாயம் அல்லது இரண்டை மட்டும் ஒரு குட்டிப் புத்தகம் போல, முன்னோட்டமாக, ஒரு டொலருக்கோ, இரண்டு டொலருக்கோ கொடுக்கிறார்கள். இவற்றைச் சமீப காலம் வரை அமேஸான் நிறுவனம் கிண்டில் என்கிற ஈ-ரீடர் எனப்படும் எலெக்ட்ரோனிக் புத்தக







வாசிப்பு சாதனத்தில் கோப்புகளாக விற்றுக் கொண்டிருந்தது. கிண்டில், நூக், ஐபோட், நெக்ஸஸ் என்பன தவிர பல வேறு எலெக்ட்ரோனிக் புத்தக சாதனங்கள் சந்தையில் இருக்கின்றன. இவை ஒவ்வொன்றும் வெவ்வேறு விதமான கோப்புகளாகப் புத்தகங்களை விற்கின்றன. சாதாரணமாக இவை முழு அச்சுப் புத்தகத்தின் விலையில் பகுதி விலைக்குக் கிட்டுகின்றன.

இந்த முன்னோட்டப் புத்தகங்களைப் போலவே, சில பத்திரிகைகளும் தம் சமீபத்து இதழில் பகுதிகளை மட்டும் தனியே விற்கின்றன. இவையும் உடனடியாக வலை மூலம் உங்கள் சாதனத்துக்குத் தரவிறக்கும் வகையில் கிட்டும். கட்டணம் ஒவ்வொரு கட்டுரை/கதைக்கும் ஒரு டொலர் போல இருக்கும்.

சமீபத்தில் அமேஸான் இந்த வகை விற்பனைகளுக்கு ஒரு ஆப்பு வைத்திருக்கிறதாம். 2500 வார்த்தைகளுக்குக் கீழே உள்ள எல்லா பதிப்புகளையும் தன் கிண்டில் விற்பனைப் பட்டியலில் இருந்து நீக்கப் போவதாக அமேஸான் அறிவித்திருக்கிறது.

# முயற்சி



வீட்டில் தொந்தரவு கொடுத்த பூனை ஒன்றை அறையில் போட்டு அடைத்தான் வீட்டுச் சொந்தக்காரன்.

“பூனையே கேள். இப்போது இந்த அறைக்குள் அதிக வெப்பமுள்ள காற்றை உள்ளே விடப் போகிறேன். இந்த அறையின் சுவரில் இரண்டு மூடப்பட்ட ஓட்டைகள் இருக்கின்றன. நீ அந்த ஓட்டைகளைக் கண்டு பிடித்து, அதை உடைத்துவிட்டு வெளியே வந்தால் பிழைத்துக் கொள்வாய்” என்று சொல்லிவிட்டு, கதவை அடைத்துவிட்டுச் சென்றுவிட்டான் வீட்டுக்காரன்.

அடுத்த சில நிமிடங்களில் வெப்பக் காற்று அறைக்குள் வரத் தொடங்கியது. பூனை அறையில் நிலை கொள்ளாமல் தவித்தது. ஓட்டைகள் எங்கே என்று அங்குமிங்கும் தேடத் தொடங்கியது. வெப்பம் அதிகமாக அதிக மாக பூனையால் தாங்க முடியவில்லை. மூடப்பட்ட ஓர் ஓட்டை கண்ணில் பட்டது. பூனை தனது கால்களாலும், தலையாலும், உடலாலும் அந்த ஓட்டையை உடைக்க முயற்சித்தது. முடியவில்லை. சோர்ந்து போன பூனையின் கண்களில் இன்னொரு மூடப்பட்ட ஓட்டை தென்பட்டது. பூனை நம்பிக்கையுடன் அந்த ஓட்டையையும் தகர்க்க முயற்சித்தது. மோதி மோதிச் சோர்ந்து இனி அவ்வளவுதான் என்று பூனை நினைக்கும்போது, திடீரென அறையில் வெளிச்சம். மூன்றாவதாக ஓர் ஓட்டை தானே திறந்து கொண்டது. பூனை ஒரே தாவாகத் தாவி அறையை விட்டு வெளியேறியது. வெளியில் வீட்டுச் சொந்தக்காரன் நின்று கொண்டிருந்தான்.

“இரண்டு ஓட்டைகளை தகர்க்க முடியாமல் உறுதியாக வைத்த நீங்கள், தானாகவே மூன்றாம் ஓட்டையைத் திறந்துவிட்டது ஏன்?” - பூனை கேட்டது.

வீட்டுக்காரன் சொன்னான்: “இரண்டு ஓட்டைகளைத் தகர்க்க நீ முயற்சி செய்தாயே... அதனால்தான்”

# உதவி!



இங்கிலாந்தில் பிளெமிங் என்ற விவசாயி ஒருநாள் காட்டு வழியே நடந்து போய்க்கொண்டிருந்தார். வழியில் ஒரு பணக்காரச் சிறுவன் புதைகுழியில் சிக்கி உயிருக்குப் போராடிக்கொண்டிருந்தான். உடனே பிளெமிங் தனது உயிரைப் பற்றிக் கவலைப்படாமல் மிகவும் சிரமப்பட்டு அந்தச் சிறுவனைக் காப்பாற்றினார்.

இதனை அறிந்த சிறுவனின் தந்தை பிளெமிங்கிடம், “எவ்வளவு பணம் வேண்டுமானாலும் வாங்கிக் கொள்ளுங்கள்” என்று கூறினார். பணத்தை வாங்க மறுத்த அந்த விவசாயி, தனது மகனைப் படிக்கவைக்க உதவி செய்யுமாறு வேண்டினார்.

அந்தப் பணக்காரரின் உதவியால் படித்துப் பின்னாளில் பென்சிலின் என்ற அரிய மருந்தைக் கண்டுபிடித்தார் அந்த விவசாயி யின் மகன் அலெக்ஸாண்டர் பிளெமிங்.

சில ஆண்டுகளுக்குப் பின்னர் அவரது தந்தையால் காப்பாற்றப்பட்ட அந்தச் சிறுவன் நிமோனியா நோயினால் பாதிக்கப்பட்டார். அப்போது பென்சிலின் மருந்துதான் அவரது உயிரைக் காப்பாற்றியது. பிளெமிங் குடும்பத்தால் இரண்டு முறை காப்பாற்றப்பட்ட அந்தச் சிறுவன்தான் பின்னாளில் இங்கிலாந்தின் பிரதமரான வின்ஸ்டன் சேர்ச்சில்.

# அற்றைத் திங்கள் அவ்வெண்ணிலவில்...

முன்னர் ஒரு காலம்! இற்றைக்கு 35,40 வருடங்களாவது இருக்கும்!!

அது ஒரு கொண்டாட்ட காலம்! போர் மூளாக் காலம்!!

யாழ்ப்பாணத்தில் ஊர் கோயில் திருவிழாக் கொண்டாட்டங்களின் போது என் தாயாரின் தாய் தந்தையரின் வீட்டுக்கு மற்றும் தந்தையாரின் தாய் தந்தையர் வீட்டுக்கு போவது வழமை. திருமணமாகி வெளியூர்களில் வாழ்ந்து கொண்டிருந்த அவர்களின் சகோதர சகோதரிகளின் குடும்பம் ஒன்றுகூடும் காலமும் அது தான்.

பலாப்பழம், வெத்திலைத் தட்டம், பாக்குரல், மூக்குப் பேணி, சிவப்பு சீமேந்துத் தரை, பனையோலை, முள்முருக்கு, கட்டித் தொங்கவிடப் பட்டிருக்கும் வாழைக்குலை, மற்றும் வெங்காயம், மாட்டுக் கொட்டில், மாதுளங்கன்று, கிளி கோதிய மாம்பழம், விழுந்து கிடக்கும் விளாம்பழம், புலவு என்று அழைக்கப் படும் தோட்டம், கற்தறை, அதற்குள்ளும் செழித்து வளர்ந்திருக்கும் புகையிலைத் தோட்டங்கள், செம்மண், கிணறு, துலா, நெசவுசாலை, காங்கேசன் துறை சீமேந்துக் கூட்டுத் தாபனத்து விசில் ஓசை, எண்ணை வைத்து வாரி இரட்டைப் பின்னலோடு திருநீறும் கறுப்புப் பொட்டும் போட்டு வெள்ளைச் சீருடையில் சைக்கிள் ஓடும் மாணவி கள் மற்றும் மாணவர்கள், இரவு 8.30க்கு காங்கேசன் துறையில் வந்து நிற்கும் யாழ்தேவி, திருவிழாக்காலங்கள், வாழையிலைச் சாப்பாடு, தண்ணீர்ப் பந்தல், காப்புகள், அம்மம்மா குழல்.... என்று அங்கொன்றும் இங்கொன்றுமாய் சில நினைவுகள்!

அற்றைத் திங்களை நினைவுபடுத்தும் பொருட்களின் வரிசையில் இன்று - கொக்கத் தடியும், காம்புச் சத்தகமும்.



- மணிமேகலா -

**கொக்கத் தடி என அழைக்கப் படுவது. கிட்டத்தட்ட அரிவி வெட்டி போல இரும்பினாலான வளைந்த கத்தி நீண்ட தடியின் ஒரு முனையில் துளையிட்டு சொருகிக் கயிற்றால் கட்டப்பட்டிருக்கும். உயர இருக்கும் பழங்கள், கெத்துகளை கைக்குக் கொண்டுவந்து தருவது இது தான். உயரம் குறை வான தென்னைகளில் தேங்காயைக் கூட இழுத்து விழுத்தலாம்.**



**காம்புச் சத்தகம்! இது வால்புறம் கூராக இருக்கும். பெட்டி இழைக்கப் பயன்படுவது. ஓலை வார, மற்றும் இழைக்கப் பட்ட பெட்டிக்குள் ஓலையை செலுத்த ஓலையை பக்கவாட்டுக்கு கூராக வெட்டவும் அது சமயத்துக்குப் பயன்படும். மேலும் கூரான பகுதி துளையிட்டு ஈர்க்கில் சொருகப் பயன்படும்.**

## மாற்றம் வேண்டும் இது மக்கள் முரசு

# குழாய்க் கிணறுகளின் அதிகரிப்பால் ஏற்படும் நன்நீர்ப் பிரச்சினைகள்



மிக ஆபத்தான கட்டத்தை நாம் புவிவியல் ரீதியாக நெருங்கி விட்டோம். சில ஆண்டுகளில் கடல் நீரின் உவர்த்தன்மை பெரும்பாலான இடங்கிளில் பரவும் அபாயம் நெருங்கி வருகினறது. இதனைவிட இயற்கைச் சமநிலை குலைந்துபோய் வேளான்மை உட்பட பல உற்பத்திகள் பாதிக்கப்படப் போகின்றது. இது தொடர்பாக நாம் இம்மியளவும் சிந்தனையற்றுச் செயற்படுகின்றோம். சட்டரீதியாக பல நடைமுறைகள் முன்வைக்கப்பட்டாலும் அமுலாக்கங்களில் பல குறைபாடுகள் நிலவி வருகின்றது. இது தொடர்பான விழிப்புணர்வு இன்றைய கட்டாய தேவைகளில் ஒன்றாக மிளிர்கின்றது.

**புவியியல் விளக்கம்**

சாதாரண வெட்டுக்கிணறுகள் அடிமண் பாறைகளில் இருந்து பெறப்படும் உற்றுப் பரம்பலின் மூலம் நீரைத் தருகின்றது. ஊற்றுக்கள் தேவைக்கேற்ப நீரை வழங்கி விட்டு நீர்மட்ட அமுக்கம் காரணமாக தேவைக்கு அப்பால் ஊறுவது தடைப்படுகின்றது. இதனால் மேல்மண் ஊற்று நீர்ப்பயன்படுத்தப்படுகின்றது. நீரிழப்பு பாதுகாக்கப்படுகின்றது. மழைநீர்ச் சுற்றுவட்டவிகிதாசாரம் தேவைக்கேற்ப சமப்படுத்தப்படுகின்றது. ஆனால் குழாய்க்கிணறுகள் அவ்வாறல்ல. 50 அடி அல்லது 60 அடி ஆழத்திற்கு இயந்திரங்கள் மூலம் துளையிடப்படும்போது அது நிலத்திற்கடியில் ஓடிக் கொண்டிருக்கும். ஆறுகளில் தொடுகின்றது. அந்த ஆற்று நீரை வெளியில் எடுக்கப்படும் போது அதன் கீழ் உள்ள எரிகுழம்புகளின் தாக்கம் மேலெழ ஆரம்பிக்கின்றது.

இதனால் வேளாண்மை பாதிப்படையத் தொடங்குவது ஒரு புறமிருக்க வெற்றிடத்தை நிரப்ப கடல்நீர் உட்புக ஆரம்பிக்கும். இதனால் உவர்நீர்ப் பாதிப்பு ஏற்படும்.

**நடைமுறையில் உள்ள சட்டங்கள்**

இப்பின்னணிகளைப் புரிந்துகொண்ட மாநகரசபை மற்றும் பிரதேச சபைகள் குழாய்க் கிணறுகளுக்கான அனுமதியினை மட்டுப்படுத்தியுள்ளார்கள். வழங்கப்படும் அனுமதிகளிலும் பல நிபந்தனைகளை உருவாக்கி உள்ளார்கள். 15 அடிக்கு மேல் துணையிடமுடியாது, மின் மோட்டார் அல்லது நீர்ப்பம்பி பயன்படுத்த முடியாது. கைப்பம்பிமூலமே நீர்ப்பாவனை இடம்பெற வேண்டும் எனக் கூறப்பட்டாலும் நடைமுறையில் மக்கள் அதனைக் கடைப்பிடிப்பதில்லை. அனுமதியைப் பெற்றவுடன் அனைத்தையும் நிராகரிப்பது ஒருபுறமிருக்க அனுமதியே பெறாது இரவோடு இரவாகவும், ஓய்வு நாட்களிலும் (ஞாயிறு) இயந்திரங்கள் மூலம் துளையிடுகின்றார்கள். துளையிடுபவர்களும் அகப்படும்போது தண்டப்பணங்களைச் செலுத்தியும்கூட மேலும் மேலும் சட்டத்தை மீறுகின்றார்கள். இதற்கொரு தீர்வே கிடையாதா? யார் இதற்குப் பதில் சொல்வது? எனும் பிரச்சினை தற்போது மேலோங்கி உள்ளது.

**தீர்வுக்கு என்ன வழி**



''திருடனாகப் பார்த்து திருந்தாவிட்டால் திருட்டை ஒழிக்க முடியாது'' என பார்கள். மக்கள் எதிர்கால சிந்தனையற்ற நிகழ்கால சுய நலத்தை மாத்திரம் கருத்திற்கொண்டு செயற்படும் வரை இப் பிரச்சினைக்குத் த்வு காண முடியாது.

பிரதேச சபைகள் மாநகர சபைகள் பல முயற்சி எடுத்தும்கூட இச்சட்டப்பாதகமான செயற்பாட்டைக் குறைக்க முடியவில்லை. நிர்வாக எல்லைக்குள் இருந்து குறைந்த ஆளணிவளத்துடன் மேற்பார்வைகளை மேலும் விரிவுபடுத்த முடியாத இக்கட்டுக்கள் எல்லாம் அவர்களுக்கு உள்ளது. இருப்பினும் இதனைத் தடுக்க வேண்டிய கட்டாய தேவை இருப்பதனால் இது தொடர்பாப மாநகர சபை, பிரதேச சபைகள் வேறுதிசைகளில் சிந்தித்து முயற்சி எடுக்க வேண்டும். பெலிஸ் பிரிவுடன் இணைந்து கிராமசேவையாளர்களின் கண்காணிப்பில் அனுமதிப் பத்திரம் அற்று துளையிடும் கிணறுகள் சீல்வைக்கப்பட வேண்டும். துளையிட முன் தடுக்க வேண் டும். இல்லையேல் மக்கள் வாழமுடியாத மண்பூமியாக இது மாறுவது திண்ணம்.

வெண்கட்டியன்

---




# புதிர்ப்போட்டி 45

**அதிக புள்ளிகளைப் பெற்ற திறமைசாலிகள் மூவருக்கு பெறுமதியான பரிசில்கள் காத்திருக்கின்றன. உங்களுக்கான பரிசில்கள் விபரம் பத்திரிகையில் வெளியாகும். மூன்று மாத இறுதியில் தினமுரசு காரியாலயத்தில் வைத்து வழங்கிக் கௌரவிக்கப்படும்.**

**புதிர்ப்போட்டி 45 இற்குரிய விடைகள் அனுப்பவேண்டிய இறுதித் திகதி 08.06.2013**

### 1

1) பின்வரும் உருவப்படம் நகரங்கள் சிலவற்றை இணைக்கும் வீதிகளின் ஒரு தொகுதியைத் தருகிறது. நகரங்கள் ஆங்கில எழுத்துக்களால் குறிக்கப்பட்டுள்ளது.




01) D யிலிருந்து E யை நோக்கிச் செல்லும் வீதி எத்தனை கிலோ மீற்றர் நீளமாகும்.

02) A யிற்கும் B யிற்கும் இடையிலான தூரமும் E க்கும் C க்கும் இடையிலான தூரமும் சமனானவையா?

03) அஜித் A யிலிருந்து B வழியாக E யிற்கு பிரயாணம் செய்கிறான். சரத் A யிலிருந்து D வழியாக E யிற்கு பிரயாணம் செய்கிறான். கூடிய தூரம் பிரயாணம் செய்ய வேண்டி இருப்பவர் யார்?

04) ஒருவர் A யிலிருந்து புறப்பட்டு முறையே D, C, B நகரங்களினூடாக E யை வந்து அடைவாராயின் அவர் பிரயாணம் செய்த மொத்தத் தூரம் எத்தனை கிலோ மீற்றர் ஆகும்.

### 2

பிரதான பாதை ஒன்றில் குறித்த 3 மணத்தியாலங்களில் பயணம் செய்த வாகனங்களின் எண்ணிக்கை கீழே தரப்பட்டுள்ளது.

| காலம் | லொறி | பஸ் | கார் | சைக்கிள் |
|---|---|---|---|---|
| 1வது மணித்தியாலம் | 14 | 13 | 18 | 27 |
| 2வது மணித்தியாலம் | 12 | 14 | 17 | 31 |
| 3 வது மணித்தியாலம் | 11 | 17 | 13 | 24 |

1) 2 வது மணத்தியாலத்தில் பயணம் செய்த வாகனங்களின் மொத்த எண்ணிக்கை யாது?
2) குறிப்பிட்ட 3 மணித்தியாலங்களிலும் ப்யணம் செய்த சைக்கிளின் மொத்த எண்ணிக்கை யாது?
3) குறிப்பிட்ட 3 மணித்தியாலங்களிலும் மிகக் குறைவாகப் பயணம் செய்த வாகன வகை எது?
4) இரண்டாவது மணித்தியாலத்தில் ஆகக் கூடுதலாக பயணம் செய்த வாகனம் யாது?
5) முதலாவது மணித்தியாலத்தில் ஆகக்குறைவாக பயணம் செய்த வாகன வகை எது?

## புதிர்ப்போட்டி 43 இல் சரியான விடை எழுதி பாராட்டுப்பெறுபவர்கள் விபரம்

பெயர் :- ம.வினோலியா
தரம் :- 11 - பாடசாலை:- யா/ நெடுந்தீவு மகா வித்தியாலயம்.

பெயர் :- சி.தினேசினி
தரம் :- 09 - பாடசாலை:- யா/ நவாலி மகா வித்தியாலய்ம்.

பெயர் :- க.கோமஸ்ராஜ்
தரம் :- 11 - பாடசாலை:- யா/ நெடுந்தீவு சீக்கிரியாம்பள்ளம்

பெயர் :- அ.றொமிலா
தரம் :- 11 - பாடசாலை:- யா/ நெடுந்தீவு மகா வித்தியாலயம்.

பெயர் :- கு.மிதிலா
தரம் :- A/L - பாடசாலை:- யா/ அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம்

பெயர் :-ஜீ.டினோதா
தரம் :- 9 - பாடசாலை:- யா/ கொக்குவில். இந்துக்கல்லூரி.

பெயர் :- A.திலக்ஷ்னா மேரி
தரம் :- 10 - பாட்சாலை:- யா/ நெடுந்தீவு றோ.க.த. மகளிர் கல்லூரி..

## புதிர்ப்போட்டி 43 இற்கான விடை எழுதி பரிசு பெறுவோர்



பெயர் :- அ.டஜிஸ்ரா
தரம் :- 11 - பாடசாலை:- யா/ நயினாதீவு கணேஷ வித்தியாலயம்.

## புதிர்ப்போட்டி 43 இற்கான சரியான விடைகள்

**1**
1) 5, 14
2) 2, 13
3) 12
4) 6, 9

**2**
1) இந்தியா
2) சீனா
3) இந்தோனேசியா
4) நேபாளம்
5) பிலிப்பைன்ஸ்
6) வத்திக்கான்

## விண்ணப்பதாரரின் விபரம்

மாணவர் முழுப் பெயர் :- ..............................
பாடசாலையின் பெயர் ..............................
தரம் :- :- ..............................
தொலைபேசி இல. :- ..............................
முகவரி :- ..............................
..............................

# யாழ். நகரின் அபிவிருத்தி நகர முதல்வர் அலுவலகத்தில் ஆலோசனை



யாழ்.மாநகர சபையின் அபிவிருத்தி, மேம்பாடு தொடர்பிலான கலந்துரையாடல் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெற்றது.

யாழ்.மாநகர முதல்வரின் அலுவலகத்தில் மேற்படி விடயம் தொடர்பிலான கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இதன்போது மாநகர சபை எல்லைக்குட்பட்ட வர்த்தக நிலையங்கள் மற்றும் ஏனைய பகுதிகளின் சுகாதாரத்தை பேணுவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது.

அத்துடன், சுகாதார தொழிலாளர்களின் வேலைத் திட்டங்களின் போது கடைப்பிடிக்கப்பட வேண்டிய நடைமுறைகள் மற்றும் தொழிலாளர்களின் நலன்சார் விடயங்கள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பிலும் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது. இதனிடையே மாநகரசபை ஆளுகைக்குட்பட்ட பகுதிகளில் முன்னெடுக்கப்பட வேண்டிய அபிவிருத்தி செயற்திட்டங்கள் தொடர்பாகவும் அமைச்சர் துறைசார்ந்தோரிடம் கேட்டறிந்து கொண்டார்.

இதன்போது மாநகர ஆணையாளர் பிரணவநாதன், ஈ.பி.டி.பி.யின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தவராசா, ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா ஆகியோருடன் ஆளும் கட்சி உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

# இலக்கியங்களை கற்கும் திறனை மாணவர்கள் வளர்க்க வேண்டும்

## - நீதியரசர் விஸ்வநாதன்

(யாழ். நிருபர்)



பெரியவர்கள், வளர்ந்தவர்கள் தமது பிள்ளைகளுக்கும்இளைஞர்களுக்கும் இலக்கியச்சுவையை ஊட்ட முன்வரவேண்டும். கம்பனது காவியத்தைப் படிக்க வைப்பதன் மூலமும், காவியச் சுவையை ஏற்படுத்துவதன்மூலமும் இன்றைய இளைய தலைமுறையினரைக் குற்றச்செயல்களில் இருந்து தடுத்து நிறுத்தமுடியும் என யாழ். மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் ஜெ.விஸ்வநாதன் குறிப்பிட்டார்.

நல்லூர் ஸ்ரீ துர்க்கா மணி மண்டபத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை ஆரம்பமான கம்பன் விழாவின் முதல்நாள் நிகழ்வில் தலைமையுரையாற்றும் போதே நீதியரசர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில்:

"இந்த சரீரம் நமக்குக் கிடைத்தது கடவுளை வணங்கி முத்தி இன்பம் பெறுவதற்காகவே" என்று அறுமுகநாவலர் கூறியுள்ளார். நாம் கடவுளை அடைவதற்கு ஆன்மீக நெறியினைச் சிறந்த முறையில் கடைப்பிடித்து ஒழுகவேண்டும். கம்பரும் திருவள்ளுவரும் தமிழுக்குச் சிறந்த இலக்கியங்களைத் தந்துள்ளனர். கம்பராமாயணமும் திருக்குறளும் அறநீதிக் கருத்துக்கள் பலவற்றை வலியுறுத்தி ஆன்மீகத்திற்கு எம்மை வழிப்படுத்த உதவும் இலக்கியச் சுவை நிறைந்த நூல்களாக விளங்குகின்றன.

இன்று நாட்டில் வன்முறையும், குற்றச் செயல்களும் அதிகரித்துள்ளன. இவற்றில் இருந்து இளைய தலைமுறையினரை விடுவிக்க வேண்டுமானால் அவர்களுக்கு இலக்கியத்தில் நாட்டத்தை ஏற்படுத்த வேண்டும். இலக்கிய நயத்தை, காவியச் சுவையை அஞ்சலோட்டம் போன்று அடுத்த சந்திக்குக் கையளிக்க அனைவரும் முன்வர வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார். (10)

# கிணற்றில் வீழ்ந்து பெண் மரணம்

பெண் ஒருவர் தவறுதலாக கிணற்றுக்குள் வீழ்ந்து மரணமாண சம்பவம் ஒன்று அச்செழு பூலயடிப் பகுதியில் நேற்று முன்தினம் பிற்பகல் 4 மணியளவில் இடம்பெற்றுள்ளது. இச் சம்பவத்தில் 42 வயதான செல்லத்துரை நிர்மலா என்பவரே மரணமானதாக அச்சுவேலி பொலிஸார் தெரிவிக்கின்றனர். குறித்த பெண் குடிநீர் எடுப்பதற்கு கிணற்றடிக்கு சென்றதாகவும் சென்றவரை பலமணிநேரம் காணாது திகைத்த உறவினர் கிணற்றடிக்கு சென்று பார்த்த போது சடலம் நீரில்மிதப்பதனை கண்டுள்ளனர். இது தொடர்பாக அச்சுவேலி பொலிஸாருக்கு தகவல் கொடுக்கப்பட்டதை அடுத்து பொலிஸார் கிராமத்தவர்களின் உதவியுடன சடலத்தினை மீட்டெடுத்து பிரேத பரிசோதனைக்ககா யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்துள்ளனர். மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# தம்பாலை டச்சு வீதி புனரமைப்பு எப்போது?

(அச்சுவேலி)

தம்பாலைச் சந்திக்கு அருகில் காணப்படும் வைரவர் ஆலயத்திற்குப் பின்புறமாகச் செல்லும் டச்சு வீதியானது நீண்ட காலமாக புனரமைப்பு எதுவுமின்றிக் காணப்படுகின்றது. இதனால் இந்த வீதியூடாகப் பயணம் செய்வோர் பல இடையூறுகளை எதிர்நோக்கவேண்டியுள்ளதாக தெரிவிக்கப் படுகிறது.

மண் வீதியாக காணப்படும் இந்த வீதியானது குண்டும் குழியுமான நிலையில் ஆங்காங்கே கற்களுடன் காணப்படுகின்றது. அத்துடன் இந்த வீதியருகே பல குடியிருப்புகள் காணப்படுவதுடன் புதிய குடியிருப்புகளையும் மக்கள் அமைத்து வருவதால் இந்த வீதியைப் பயன் படுத்துவோரின எண்ணிக்கை அதிகரிக்கும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் மழை காலங்களில் சேறும் சகதியுமாகக் காட்சி அளிப்பதுடன் பாதசாரிகளும் இந்த வீதியூடாகப் பயணிப்பதில் சிரமத்தை எதிர் கொள்கின்றனர்.

எனவே உரிய தரப்பினர் இந்த வீதியைப் புனரமைத்து பயணிகளின் போக்கு வரத்திற்கு வழிவகை செய்யுமாறு சமூக ஆர்வலர்களும் கிராம மக்களும் கோரிக்கை விடுக்கின்றனர். (85)



அவுஸ்ரேலிய அபயகரம் நிறுவனம் நடாத்திய விழாவில் கலாநிதி ஆறு.திருமுருகன் உரை நிகழ்த்துவதையும், கலை நிகழ்ச்சி ஒன்றையும் காணலாம். (137)




# மக்கள் அரசியலா?... கட்சி அரசியலா?...

அச்சுறுத்தலின் பின்னணியிலும், சுயலாப அரசியலின் பின்னணியிலும் அந்தரத்தில் ஆடிய மக்கள் அரசியல் இனிவரும் காலத்திலாவது அரங்கேறுமா?.... என்றால் தமிழ்த்தேசியம் என்னும் பெயரில் தாண்டவமாடும் தன்னல அரசியலால் அது தடம்மாறிப்போகிறது. மக்களின் வாக்குகளால் மகிமைப்படுத்தப்பட்ட அரசியல் வாதிகள் மக்களரசியலை எப்போது அரங்கேற்றுவார்கள் என்பது அடிமனதில் ஒலிக்கின்ற மக்கள் குரலாக இருக்கிறது.

தமிழ் அரசியல் தலைவர்களிடையே அன்று தொட்டு இன்றுவரை இருந்த அங்கீகார யுத்தங்களாலும், கொள்கை அரசியலும் கோடிட்ட பார்வைகளாலும் இழப்புக்கள் தான் மிஞ்சியதே தவிர மக்கள் மயப்படுத்தப்பட்ட அரசியல் பார்வை அரங்கேறவில்லை. தந்தை செல்வா, ஜி.ஜி.பொன்னம்பலம் உள்ளிட்ட இன்றைய தமிழரசுக்கட்சித் தலைவர்கள் வரை கட்சி அரசியலிற்கு அப்பால் மக்களரசியலை சிந்தித்தார்களா என்றால் இல்லை என்கின்ற முடிவே தெளிவாக உருவாகும்.

ஆங்காங்கே பொசிகின்ற அரசியல் இலாபத்தை மக்களிற்குப் பெற்றுக்கொடுப்பதற்கு இவர்கள் எப்போது கட்சி அரசியலைத் தியாகம் செய்தார்கள்?.... எப்போது மக்களரசியல் ப்ற்றிச் சிந்தித்தார்கள்?

தற்போது மீண்டும் புதுப்பொலிவு பெறுகின்றது இவர்களின் கட்சி அரசியல் - பிணக்குகள். மக்களிற்கு அரசியல் அங்கீகாரத்தை, அரசியலுரிமைகளைப் பெற்றுக்கொள்வதற்காக மக்களால் உருவாக்கப்பட்டதே கட்சிகள். இக்கட்சிகள் மக்கள் மயப்படுத்தப்பட்டதாகவே கட்சி அரசியலை உருவாக்க வேண்டும். அதை விடுத்து தத்தம் கட்சி அரசியலைக் கட்டிக்காக்கும் முயற்சியிலே காலத்தைக் கழிப்பது ஏற்புடையது அல்ல.

தற்போது தமிழ்த்தேசிய கூட்டமைப்பைப் பதிவு செய்யவேண்டும் என்பதை வலியுறுத்தி வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் சுரேஷ்பிரேமச்சந்திரனின் சகாவுமான சிவசக்தி ஆனந்தனும் ஒரு கோரிக்கை விடுத்துள்ளார். இந்த கூட்டமைப்பைத் தனிக்கட்சியாகப் பதிவு செய்வது தொடர்பாக பல முரண்பட்ட கருத்துக்கள் பரிமாறப்பட்டு வருகின்றன.

கூட்டமைப்பில் உள்ள ஏனைய கட்சிகள் ஆயுதப்போராட்டத்தின் மூலம் உருவானவை அவற்றுடன் எவ்வாறு இணைந்து செயற்படமுடியும் என்று தமிழரசுக் கட்சி கருதுவதாகவும், இதன் பின்னணியில் தமது உடன்பாடுகள், கொள்கை முன்னெடுப்புக்கள், தனித்துவ அரசியல் பார்வைகள் விலை போய்விடும் என்று சொல்லித் தடுமாறும் தமிழரசுக் கட்சியினரின் 'கட்சி அரசியல்' தற்போது 'மக்களரசியலை'த் துண்டாடுகிறது.

மக்கள் பார்வைக்கு தமிழ்த்தேசியம் பேசிய பல கட்சித்தலைவர்கள் கட்சி அரசியலை முன்னெடுக்க - சுயலாபத்திற்காக அரசிடம் விலைபோன வரலாறுகளெல்லாம் திரை மறைவில் இருப்பதை மக்கள் உணரவேண்டும். அதேவேளை வெளிப்படையாக அரசின் சார்பில் இருந்து மக்கள் அரசியலை முன்னெடுக்கும் அரசியல் தலைவர்களையும் மக்கள் இனம்காண வேண்டும்.

மக்களரசியலை முன்னெடுக்கும் போது அரசின் ஆதரவை, கூட்டை நிராகரிக்கும் அரசியல்தலைவர்கள் ஏன் கட்சி அரசியலிற்காக அரசிடம் இரகசியமாக மண்டி இடுகின்றார்கள்? அப்படியானால் நடைமுறைச்சாத்தியமான விடயங்கள் அரசின் துருவங்களில் இருந்தால் மட்டுமே கிடைக்கும் என்பதை இவர்கள் சொல்லாமல் சொல்கிறார்கள். அப்படியானால் மக்களரசியலில் முன்வைக்கப்படும் கோரிக்கைகள் எல்லாம் அரசிற்கு எதிரான போராட்டங்களாக மாற்றுவதற்கூடாக கிடைக்காதென்பது தெரிந்தே முன்வைக்கின்றார்களா? அல்லது மக்களரசியலை மக்களிற்கே தெரியாது நகர்த்துகின்றார்களா?...

எதுவுமே புரியவில்லை. சிவசக்தி ஆனந்தன் இது தொடர்பாக கூறும்போது, கூட்டமைப்பைத் துண்டாடவேண்டும் என்னும் அரசின் சதிவலையில் சம்பந்தன் ஐயா உடன்பட்டுச் செயற்படுகின்றார் என குற்றம் சாட்டி உள்ளார்.

இப்படிப்பட்ட அரசியல் தலைவர்களை நம்பி மக்கள் போராட்டங்களை முன்னெடுக்கும்போது கட்சி அரசியலுக்காக மக்களைக்கூட விற்க ஏன் இவர்கள் துணியமாட்டார்கள்? இவர்களின் ஆட்சியில் மக்களரசியல் எப்படி அரங்கேறும்?...எப்போது அரங்கேறும்?...

- வெண்கட்டியன்

# தீவக பிரதேச சபைகளுக்கு விரைவில் புதிய வாகனங்கள்



(யாழ்ப்பாணம்)

தீவகத்தின் வேலணை, ஊர்காவற்றுறை, நெடுந்தீவு ஆகிய பிரதேச சபைகளுக்கு புதிதாக வாகனங்களைப் பெற்றுத்தருவதற்கு பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார். யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அமைச்சரின் அலுவலகத்தில் தீவகத்தின் குறிப்பிட்ட மூன்று பிரதேச சபைகளின் அபிவிருத்தி செயற்றிட்டங்கள் தொடர்பில் நேற்றுமுன்தினம் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதன்போது குறித்த மூன்று பிரதேச சபைகளினால் முன்னெடுக்கப்பட்டுவரும் மற்றும் முன்னெடுக்கப்படவுள்ள செயற் திட்டங்கள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது. குறிப்பாக வீதிப் புனரமைப்பு, மின்சாரம், குடிநீர் விநியோகம், போக்கு வரத்து மற்றும் உட்கட்டுமானம் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்ட அதேவேளை, வடக்கின் வசந்தம், நகர எழுச்சி (புறநெகும), கிராம எழுச்சி (கமநெகும), திட்டங்களின் அடிப்படையில் முன்னெடுக்கப்படும், முன்னெடுக்கப்படவுள்ள வேலைத் திட்டங்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

இதில் கருத்துத் தெரிவித்த அமைச்சர் அவர்கள், மக்களுக்கான உடனடி மற்றும் நீண்டகால தேவைகளை அடிப்படையாகக் கொண்டு 'திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டுமென்பதுடன், குறித்த பிரதேச சபைகளுக்கென துறைசார்ந்த அமைச்சின் ஊடாக புதிய வாகனங்களைப் பெற்றுத் தருவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென்பதுடன், அதனடிப்படையில் முதற்கட்டமாக ஊர்காவற்றுறை பிரதேச சபைக்கு புதிய வாகனம் பெற்றுத் தரப்படுமென்றும் தெரிவித்தார்.

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் ஆளுகைக்குட்பட்ட வேலணை, ஊர்காவற்றுறை மற்றும் நெடுந்தீவு ஆகிய பிரதேச சபைகளின் அபிவிருத்தி மேம்பாட்டிற்காக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களது வேண்டுகோளுக்கு அமைவாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சு தலா 100 மில்லியன் ரூபா வீதம் 300 மில்லியன் ரூபாவை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதன்போது ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்திரி அலன்றின் (உதயன்), ஈ.பி.டி.பி.யின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தவராசா, வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ஜெகூ, பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் வக்சலன், ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் (கமல்) ஆகியோர் உடனிருந்தனர்.

# தேசமாணிய விருது



கரவெட்டி பிரதேச செயலகத்தின் முகாமைத்துவ உதவியாளர் சாமஸ்ரீ தேசமணியப் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப் பட்டுள்ளார்.

அகில இலங்கை சமாதான நீதவானாகவும், லயன்ஸ் கழக உறுப்பினராகவும், அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கத்தின் யாழ்.மாவட்ட இளைச் செயலாளராகவும் இருந்து வருகின்றார்.

யாழ்.வரணி மகாவித்தியாலயம், கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரியின் பழைய மாணவரான இவர் சிறந்த தொழிற்சங்கவாதியாகவும், எழுத்தாளாராகவும், பேச்சாளராகவும் விளங்கின்றார்.

இவர் காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் (சமாதான நீதவான்), நாகம்மா (சமாதான நீதவான்), தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வருமாவார்.

# அலங்கார உற்சவம்

அருள்மிகு ஞானவைரவர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் ஆலயபிரதம குரு சிவஸ்ரீ நா.குகணேசக் குருக்கள் தலைமையில் இன்று சனிக்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

அனுசநட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய சுபவேளையில் ஆரம்பமாகி தொடர்ந்து 14 நாட்கள் காலை 10 மணிக்கு அபிஷேக ஆராதனைகளும், 11.30 மணிக்கு பூசையும் இடம்பெறும். தொடர்ந்து 12 மணிக்கு அன்னதானமும் இடம்பெறும். மாலை 7 மணிக்கு பூசை ஆரம்பமாகி 7.30 மணிக்கு வசந்தமண்டப பூசையைத் தொடர்ந்து 8.30 மணிக்கு சுவாமி வெளிவீதியூடாக திருவலம் வரும் காட்சியும் இடம்பெறத் திருவருள் பாலித்துள்ளது.

பின்னர் 15ஆம் நாள் 08.06.2013 சனிக்கிழமை அன்று மதியம் சங்காபிஷேகத்தைத் தொடர்ந்து மாலை திருவூஞ்சல் நிகழ்வுகளைத் தொடர்ந்து உற்சவமானது நிறைவு பெறும்.

# அரசடி விநாயகர் ஆலயத்தில் ஒன்றரைப்பவுண் யந்திரத்தகடு திருட்டு

(குருநகர்)

யாழ்.தட்டாதெரு, அரசடி விநாயகர் தேவஸ்த்தானத்தில் கடந்த புதன்கிழமை இரவு திருட்டுச் சம்பவம் இடம் பெற்றுள்ளதாக. யாழ். பொலிஸ் நிலையத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது. ஆலயத்தின் மூலவிக்கிரகத்தின் கீழே வைக்கப்பட்டிருந்த 24 கரட் தங்கத்தால் செய்யப்பட்ட யந்திரத் தகடு மட்டுமே திருடப்பட்டிருப் பதாகத் தெரியவருகிறது.

பெறுமதி வாய்ந்த வெண்கலச் சிலைகளை விட்டுச் சென்றுள்ள திருடர்கள் சிலையை இருப் பில் இருந்து தட்டித் தூக்கி வைத்து விட்டு ஒன்றரைப் பவுண் நிறையுடைய தங்க யந்திரத்தகட்டை மட்டுமே எடுத்துச் சென்றுள்ளனர்.

நேற்றுமுன்தினம் காலை இருவாகனங்களில் வருகைதந்த பொலிஸார் விசாரணைகளை நடாத்தியதுடன் கைரேகை அடையாளங்கள் மற்றும் ஆலயச் சூழல்களையும் பதிவு செய்து கொண்டு சென்றனர். ஆலய நித்திய பூசையைச் செய்ய அனுமதித்த பொலிஸ் அதிகாரி விசாரணைகளை மேற்கொள்வதாகவும் தெரிவிக்கப்பட்டது.

கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பாக மேற்படி ஆலயத்தில் பல இலட்சம் பெறுமதியான பிள்ளையார் விக்கிரகம் திருடப்பட்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது. (68)

# தென்மராட்சி பிரதேசத்தில் மாறுபட்ட விதத்தில் பணம் அறவீடு!

(வரணி)

தென்மராட்சிப்பிரதேசத்தில் போட்டோப்பிரதி எடுக்கும் நிலையங்களில் இடத்திற்கு இடம் மாறுபட்ட விதத்தில் பணம் அறவிடப்படுகிறது.

சில இடங்களில் ஒரு பக்க பிரதிக்கு பணமாக 4ரூபா முதல் 5 வரை அறவிடப்பட்டு வரும் வேளை சிலர் தான் தோன்றித் தனமாக பத்து ரூபா ஒருபக்க பிரதிக்கு அறவிட்டுவருகின்றனர்.

இதேவேளை துவிச்சக்கர வண்டிகளுக்கான பாதுகாப்பு நிலையங்களில் இந்த நடைமுறை பின்பற்றப்படுகிறது. தென்மராட்சிப் பகுதியில் சில சந்தைகளில் பாதுகாப்புக்கு நாலு ரூபாவும். துவிச்சக்கரவண்டிகளுக்கு அறவிடும் அதே வேளை வடமராட்சியில் இரண்டு ரூபா சில சந்தைகளில் அறவிடப்படுகிறது. வெவ்வேறு பிரதே சபையாயினும் பொதுமக்கள் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். (150)

# 100 அழகக தொழில் முயற்சியாளர்களுக்கு கிளிநொச்சியில் உபகரணங்கள் வழங்கல்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட அழகக தொழில் முயற்சியாளர் கூட்டுறவுச் சங்கத்தின் ஏற்பாட்டில் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி முகவர் நிறுவனத்தினரால் 100 பயனாளிகளுக்கு தொழில் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.



நேற்றுமுன்தினம் கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத்தில் கிளிநொச்சி மாவட்ட அழகக தொழில் முயற்சியாளர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் சின்னராசா சசிகரன் தலைமையில் இடம் பெற்ற நிகழ்வில் கரைச்சிப் பிரதேச பிரதான சுகாதார சேவைகள் பரிசோதகர் சிவகுமார், நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் அவர்களின் மக்கள் தொடர்பு அதிகாரி தவநாதன் ஆகியோர் கலந்து கொண்டு உதவிகளை வழங்கி வைத்தனர்.'

இதன்போது தலா 35000 ரூபா வாழ்வாதார உதவி தொழில் உபகரணங்கள் 100 தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டன ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி முகவர் நிறுவனம் இதற்கான நிதி உதவியினை வழங்கியிருந்தது.


இதன்போது கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் அவர்களின் மக்கள் தொடர்பு அதிகாரி தவநாதன் அவர்கள் அழகக தொழில் முயற்சிகள் புதுப்பொலிவுடன் செயற்படவேண்டும் என்பதில் தொடர்ந்தும் கவனம் செலுத்தி வந்திருக்கின்றோம். எனவே வழங்கப்பட்ட தொழில் உபகரணங்கள் மூலம் தொழில் முயற்சிகள் ஒரு முன்னேற்றகரமான மாற்றத்தை நோக்கிச் செல்லும் என்ற நம்பிக்கை உள்ளதாகவும் இதற்காக சம்மந்தப்பட்ட எல்லோருக்கும் நன்றி தெரிவிப்பதாகவும் குறிப்பிட்டார்.

# யாழ். சோமசுந்தரம் வீதி புனரமைப்பு பணிஎப்போது?

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஏ9 வீதியின் முகப்புப்பகுதியில் கச்சேரிக்கிடையில் அமைந்துள்ள சோமசுந்தரம் வீதி மிகவும் மோசமான நிலையில் காணப்படுகின்றது. கல்லுப்போட்டு தார் ஊற்றப்பட்டு இருந்த இந்த வீதி தற்போது பாரிய குண்டும் குழியுமாகக் காணப்படுகின்றது.

இதனால் இவ்வீதியூடாக பயணம் செய்வோர் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர். யாழ்.நகரப்பகுதியில் பல்வேறு வீதிகளும் காப்பெட் வீதிகளாக மாறிவரும் நிலையில் இவ்வீதியையும் புனரமைக்குமாறு பயணிகள் கோருகின்றனர்.





சமூகசேவை அமைச்சினால் யாழ்.மாவட்டத்திலுள்ள மாற்றுத்திறனாளிகளின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவதற்கான உதவிக்கொடுப்பனவுகள் நேற்றுமுன்தினம் கோப்பாய் பிரதேசத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக சமூகசேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சின் செயலாளர் திருமதி இமல்டா சுகுமார் கலந்துகொண்டார்.


5) 500 g தேயிலையின் விலை 90.00 எனின் 1 kg 500g தேயிலையின் விலை யாது?

6) 642 இளநீர்க்காய்களை மூன்று சம குவியல்களாக வகைப்படுத்தினால் ஒரு குவியலில் அடங்கும் இளநீர்க்காய்கள் எத்தனை?

7) 4 m 50 cm நீளமான ஒரு ரிபன் நாடா மூன்று சம துண்டுகளாக வெட்டப்பட்டது. வெட்டப்பட்ட ஒரு ரிபன் துண்டின் நீளம் யாது?

8) 7 l 500 ml தேங்காய் எண்ணெய் சம அளவுடைய நான்கு போத்தல்களில் ஊற்றப்பட்டது. ஒரு போத்தலில் உள்ள தேங்காய் எண்ணெய்யின் அளவு யாது?

9) மாம்பழம் ஒன்றின் விலை ரூபாய் 8.75 ஆகும். 10 மாம்பழங்களின் விலை யாது?


10) 


1) இத்திண்ம உருவில் காணப்படும் உச்சிகளின் எண்ணிக்கை யாது?

2) விளிம்புகளின் எண்ணிக்கை யாது?

11) முன்னாலும் பின்னாலும் வரும் இலக்கங்களை எழுதுக. ---------- 9000 ----------

12)  இவ்வுருவில் காணப்படும் சமச்சீர் அச்சுக்களின் எண்ணிக்கை யாது?


13) 18.40  நியம கடிகாரத்தில் உள்ள நேரத்தை சாதாரண கடிகார முகத்தில் குறித்துக் காட்டுக.

14)  இவ்வுருவில் நிறந்தீட்டப்படாத பகுதி முழு உருவின் என்ன பின்னம்?

15) பத்தொன்பதை உரோமன் இலக்கத்தில் எழுதிக்காட்டுக.

## விடைகள்

(01) 1. முயல் 2. வெள்ளை 3. பஞ்சு போன்ற உடல் 4. கூடிஆடி 5. விருப்பம் 6. கறுப்பு 7. அம்மா (02) 1. 1) மரங்களில் மொட்டுக்கள் காணப்பட்டன. 2) மரங்களில் பூக்கள் காணப்பட்டன. 2) 1) குமார் பாடசாலைக்குச் சென்றான் 2) நிசார் பாடசாலைக்குச் சென்றான் (03) 1. மரம + கிளை 2. கடல் + அலை (04) 1. தென்னந்தோட்டம் 2. செய்தியொன்று (05) 1. பூ மலர்ந்தது / பூக்கள் மலர்ந்தன 2. காடு அழிந்தது 3. குழந்தை அழுதது (06) 1. East 2. Black 3. Eight (07) 1. தயவு செய்து ஒவ்வொரு நாளும் பாடசாலைக்கு வரவும் (08) 1. மாலை நேரம் வரவும் / மாலையில் வா 2. சோறு சாப்பிடு (09) 1. 4 2. 4 3. 2 4. 3 5. 4 6. 3 7. 3 8. 1 9. 4 10. 2 11. 1 12. 3 (10) 5. 1) கண்டி 2) நுவரெலியா 3) மாத்தளை (11) 1) சோம்தையல் 2) புழுத்தையல் 3) கோழிக்கால்தையல்

(12) 1) வியாழன் 2) 16 3) 112 4)  5) ரூபா 270 6) 214 7) 150cm 8) 1875ml / 1l 875ml 9) 87.50 சதம் 10) 1.05 2.08 11) 8999, 9001 12) 02 13)  14) $\frac{3}{5}$ 15) xix



# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2013

பகுதி - I
1 மணி 15 நிமிட

# கல்வி முரசு

ஆசிரியர் :- சண் சுதர்சன்

01) பின்வரும் பாடலை வாசித்து வினாக்களுக்கு விடை தருக.

துள்ளித் துள்ளி ஓடுது பார்
வெள்ளை முயல் அம்மா - அதை
மெல்ல ஓடிப்பிடித்திடவே
மிகவும் ஆசை அம்மா

பஞ்சு போன்ற உடலைத்தடவிப்
பார்க்க ஆசை அம்மா - நான்
கொஞ்சிப்பேசிக் கூடி ஆடிக்
குதிக்க வேண்டும் அம்மா

1) பாடலில் எப்பிராணி பற்றிக் குறிப்பிடப்படுகின்றது? ----------
2) முதலாம் பந்தியில் இடம்பெற்றுள்ள பெயர் அடைமொழியைக் குறிப்பிடுக. ----------
3) இரண்டாம் பந்தியில் இடம்பெற்றுள்ள உவமைத் தொடரைக் குறிப்பிடுக. ----------
4) பாட்டில் இடம்பெற்றுள்ள இணைமொழி ஒன்றைக் குறிப்பிடுக. ----------
5) ஆசை என்ற சொல்லின் ஒத்த சொல்லை தருக. ----------
6) வெள்ளை எனும் சொல்லுக்கான எதிர்ச்சொல்லைத் தருக. ----------
7) உயர்திணை, படர்க்கை, பெண்பால் பெயர்ச்சொல் ஒன்றைக் குறிப்பிடுக. ----------

02) பின்வரும் வாக்கியங்களைத் தனித்தனி வாக்கியங்களாக பிரித்தெழுதுக

1) மரங்களில் மொட்டுக்களும் பூக்களும் காணப்பட்டன.

2) குமாரும் நிசாரும் பாடசாலைக்குச் சென்றார்கள்.

03) பின்வரும் சொற்களை பிரித்தெழுதுக.

1) மரக்கிளை ---------- 2) கடலலை ----------

04) பின்வரும் சொற்களை சேர்த்தெழுதுக.

1) தென்னை + தோட்டம் ---------- 2) செய்தி + ஒன்று ----------

05) பின்வரும் வாக்கியங்களை பிழை நீக்கி எழுதுக.

1) பூக்கள் மலர்ந்தது ----------
2) காடு அழிந்தன ----------
3) குழந்தை அழுதான் ----------

**06) பின்வரும் சொற்களுக்கான ஆங்கில சொற்களை தருக.**

1) கிழக்கு ---------------- 2) கறுப்பு ---------------- 3) எட்டு ----------------

**07) பின்வரும் ஆங்கிலத் தொடருக்கான தமிழ் கருத்தினைத் தருக.**

1) Please come to school every day ----------------

**08) பின்வரும் கருத்தினை தமிழில் தருக**

1) ஹவச என்ன ---------------- 2) பத் கன்ன ----------------

**09) சரியான விடையின் கீழ் கோடிடுக.**

1) முட்டையிட்டு இனம் பெருக்காத பிராணி
1) நத்தை 2) ஓணான் 3) நுளம்பு 4) மூஞ்சூறு

2) இலங்கைக்கு மிக அண்மையில் உள்ள நாடு
1) நேபாளம் 2) பூட்டான் 3) மலேசியா 4) இந்தியா

3) இலங்கையில் உப்பு உற்பத்திக்கு பிரசித்தி பெற்ற இடங்கள்
1) களுத்துறை - கந்தளாய் 2) புத்தளம் - அம்பாந்தோட்டை
3) இரத்தினபுரி - அம்பலாங்கொடை 4) அம்பாறை - மட்டக்களப்பு

4) கிழக்குப் பயிர்ச்செய்கைக்குப் பெரும்பாலும் ஊறுவிளைவிக்கும் பிராணிகள்
1) யானை - குரங்கு 2) கரப்பான் - தவளை
3) எலி - பன்றி 4) பெருச்சாலி - வெட்டுக்கிளி

5) வளர்வதற்கு அதிகளவு நீர் தேவைப்படும் தாவரம்
1) நாகதாளி 2) கற்றாளை 3) எள்ளு 4) நெல்

6) கடையில் இருந்து வாங்கியதும் உடன் உண்ணக்கூடிய உணவு வகை?
1) பாசிப்பயறு 2) கருவாடு 3) யோகட் 4) சோயாமீற்

7) இலங்கையில் முதன் முதலாக அமைக்கப்பட்ட குளம்
1) திசாவாவி 2) மின்னேரிக்குளம் 3) பசவக்குளம் 4) வவுனிக்குளம்

8) குறைபாட்டு நோயில் இருந்து பாதுகாக்கக்கூடிய உணவு
1) கீரை - பழங்கள் 2) தானியங்கள் - கீரை
3) கீரை - மாவகை 4) மாமிசவகை - தானியவகை

9) ஐந்தாம் தர மாணவன் ஒருவன் ஆக்கவேலைப்பாட்டின்போது இலங்கை புறவுருவப்படத்தை வரைந்து அதன் விளிம்பு ஓரங்களில் நீலநிற வார்ணிஸ் தாளினால் ஒட்டினான். அவ்வாறு நீலநிறத்தினால் ஒட்டிக்காண்பித்த பகுதி எதுவாகும்.
1) மலைத்தொடர்கள் 2) சிறுதீவுகள் 3) ஆறுகள் 4) கடல்


10) முகம் பார்க்கும் கண்ணாடியின் பின்புறத்தில் பூசப்பட்டிருக்கும் உலோகப்பதார்த்தம்.
1) நிறப்பூச்சு 2) இரசம்
3) பெயிண்ட் 4) வெள்ளீயம்



11) 
இக்குறியீடு உணர்த்துவது
1) மீள்சுழற்சி 2) சுற்றுவட்டம்
3) முன்னால் சுற்று வளைவு 4) முன்னால் முற்சந்தி



12) வெந்த புண்களுக்கு ஔடதமாக பூசக்கூடிய தாவரச்சாறு எது?
1) இறப்பர்பால் 2) கரும்புச்சாறு
3) சோற்றுக்கற்றாளைச்சாறு 4) துளசி இலைச்சாறு

10) பின்வரும் இலங்கையின் புறவுருவப்படத்தை பயன்படுத்தி வினாக்களுக்கு விடை தருக.




1) யாழ்ப்பாண மாவட்டப்பகுதிக்கு A எனும் குறியீட்டையிடுக.
2) அநுராதபுர மாவட்டத்தை நிழற்றிக்காட்டுக.
3) மகாவலிகங்கை கடலுடன் சேரும் இடத்தை C என அடையாளப்படுத்துக.
4) இலங்கையில் தேயிலை விளையக்கூடிய மாவட்டத்தை B எனும் எழுத்தினால் குறித்துக்காட்டுக.
5) மத்தியமாகாணத்தில் அமைந்துள்ள மாவட்டங்களை குறிப்பிடுக.
1. ---------------- 2. ---------------- 3. ----------------
6) கொழும்பு மாவட்டத்தை நிழற்றிக்காட்டுக.

11) பின்வரும் தையல் வகைகளுக்கு பெயர் இடுக.

1) 
2) 
3) 

12) கணித வினாக்களுக்கு விடை தருக
பத்திரிகை கடையொன்றில் ஒரு வாரத்துக்குள் விற்பனை செய்யப்பட்ட சிறுவர் பத்திரிகைகளின் தகவல்கள் உள்ளடக்கிய வரைபு தரப்பட்டுள்ளது.




1) கூடுதலாக பத்திரிகை விற்கப்பட்ட நாள் எது?
2) வாரத்தில் குறைவாக விற்கப்பட்ட நாளுக்குரிய பத்திரிகைகளின் தொகை யாது?
3) வாரத்தின் ஐந்து நாட்களிலும் விற்கப்பட்ட பத்திரிகைகளின் எண்ணிக்கை யாது?
4) திங்கள் விற்கப்பட்ட பத்திரிகைகளின் எண்ணிக்கையில் 4 குறைவாக வெள்ளியன்று விற்கப்பட்டது எனின் அதனை வரைபில் வகைக் குறித்துக்காட்டுக.

# காங்கிரஸ் கட்சி ஒழுங்கீனத்தை பொறுத்துக் கொள்ள முடியாது



என் அம்மா போன்று நான் கிடையாது, கட்சியில் ஒழுங்கீனத்தை என்னால் பொறுத்துக் கொள்ள முடியாது என காங்கிரஸ் துணைத்தலைவர் ராகுல் காந்தி தெரிவித்துள்ளார். டில்லி மாநில காங்கிரஸ் தலைவர்களுடன் ராகுல் காந்தி நேற்று முன்தினம் ஆலோசனை நடாத்தினார்.

இந்த ஆலோசனையின் போது எம்.பி.க்கள், எம்.எல்.ஏ.க்கள், மாவட்ட ஒன்றிய செயலர்கள், கவுன்சிலர்கள் என அனைவரையும் தனித்தனியே அழைத்து ராகுல் பேசினார்.

காங்கிரஸ் கட்சியினர் கோஷ்டிப் பூசலைத் தவிர்த்து, ஒற்றுமையாக செயற்படவேண்டும். கட்சியை வலுப்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். டில்லியில் முதல்வர் ஷீலா தீட்சித் அரசின் சாதனைகளையும், ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசின் சாதனைகளையும், மக்களிடம் எடுத்துக் கூற வேண்டும் என ராகுல் கேட்டுக் கொண்டார். காங்கிரஸ் தலைவர் சோனியா மென்மையானவர், நான் அப்படி அல்ல. கட்சியில் ஒழுங்கீனமாக நடந்து கொள்பவர்கள் மற்றும் கட்சிக்கு அவப்பெயர் ஏற்படுத்துவோர் மீது கடும் நடவடிக்கை எடுப்பேன் என எச்சரித்ததாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

# ரஷ்யாவின் முக்கியமான நட்பு நாடு இந்தியா

எங்களின் முக்கியமான நட்பு நாடு இந்தியா என ரஷ்ய தூதுவர் தெரிவித்துள்ளார். இந்தியாவில் 16 அணுமின் நிலையங்களை அமைக்கத் தயாராக இருப்பதாக இந்தியாவுக்கான ரஷ்ய தூதர் அலெக்சாந்தர் எம் கிட்ஸகின் தெரிவித்துள்ளார். இந்தியாவுக்கான தூதரகப் பணியில் 25 ஆண்டுகாலம் பணியாற்றியதை முன்னிட்டு அலெக்சாந்தர் எம் கிட்ஸகின் நேற்றுமுன்தினம் ஒரு விழாவை நடாத்தினார்.


அப்போது செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்தியாவை நெருங்கிய, முக்கியமான நட்பு நாடாக ரஷ்யா கருதுகிறது. கூடங்குளம் அணுமின் நிலைய வழக்கில் உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை நான் வரவேற்கிறேன். மக்களின் நலனுக்காகவும், நாடு நிலையான வளர்ச்சி அடையவும் இந்த அணு மின் நிலையம் அரசால் அமைக்கப் பட்டுள்ளது.

இந்தியாவில் 16 புதிய அணு மின் நிலையங்கள் அமைப்பதற்கு உதவத் தயாராக இருக்கிறோம். நாங்கள் இந்தியாவுக்கு பல உதவிகளைச் செய்துள்ளோம்.

இந்தியாவின் மீது கடும் பொருளாதாரத் தடை விதிக்கப் பட்டிருந்த காலத்தில் நாங்கள் அணு எரிபொருளை இரண்டு முறை வழங்கியுள்ளோம். அணு நீர் மூழ்கிக் கப்பலை இந்தியாவுக்கு அளித்துள்ளோம் என்று பேசினார்.




# விமானக் கண்ணாடியில் விரிசல்; 179 பயணிகள் உயிர்தப்பினர்



நடுவானில் பறந்து கொண்டிருந்த போது திடீரென விமானக கண்ணாடியில் விரிசல் ஏற்பட்டது. பயணிகளுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்திய இண்டிகோ ஏர்லைன்சுக்கு சொந்தமான விமானமொன்று, 179 பயணிகளுடன் நேற்றுமுன்தினம் மதியம் 12.57 மணிக்கு, கொல்கத்தாவில் இருந்து திப்ருகருக்குப் புறப்பட்டது.


விமானம் கிட்டத்தட்ட 30,000 அடி உயரத்தைத் தொட்ட போது, முன்புறக் கண்ணாடியில் விரிசல் இருந்ததை விமான ஓட்டிகள் கவனித்தனர். விரிசலோடு பயணத்தைத் தொடர்ந்தால் விபத்து ஆபத்து ஏற்படும் என்பதை உணர்ந்த விமானிகள், கண்ணாடி உடைவதைத் தவிர்ப்பதற்காகவும், உயரத்தினால் ஏற்படும் அழுத்தத்தைக் குறைப்பதற்காகவும் உடனடியாக கொல்கத்தா திரும்பத் தீர்மானித்தனர்.

விமானத்தின் திடீர் ஆட்டம், பயணிகளிடம் அச்சத்தை உண்டாக்கியது. இதனால் தொழில்நுட்பக் குறைபாடு காரணமாகவே விமானம் கொல்கத்தா திருப்பப் பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டது. 1.59 நிமிடத்திற்கு பிறகு, விமானம் பத்திரமாக கொல்கத்தாவில் தரை இறங்கியது. பின்னர் பயணிகள் மாற்று விமானம் மூலம் மாலை 3.32 மணி அளவில் திருப்பி அனுப்பப்பட்டனர்

# நரேந்திரமோடிக்கு அத்வானி எதிர்ப்பு

நாடாளுமன்றத் தேர்தலில் குஜராத் முதல்மந்திரி நரேந்திர மோடியை முன்னிலைப் படுத்தி பிரசாரம் செய்ய வேண்டும் என்றும் அவரை பிரதமர் வேட்பாளராக அறிவிக்க வேண்டும் என்றும் பாரதீய ஜனதாவில் ஒரு பிரிவினர் வற்புறுத்தி வருகிறார்கள்.

கட்சி மேலிடம் அவருக்கு நாடாளுமன்றக் குழுவில் உறுப்



பினராக நியமித்தாலும் தேர்தலில் முன்னிலைப்படுத்துவது பற்றி எந்த முடிவும் எடுக்கவில்லை. நரேந்திரமோடிக்கு கட்சியின் உயர்மட்ட தலைவர்களிடம் இருந்தும் மறைமுக எதிர்ப்புக் கிளம்பியுள்ளது. இந்த ஆண்டு இறுதியில் 5 மாநிலங்களுக்கு சட்டசபை தேர்தல் நடைபெறுகிறது.

தேர்தல் பணிகள் மற்றும் பிரசார பொறுப்புகள் நரேந்திர மோடியிடம் ஒப்படைக்கப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது. அவருக்கு மூத்த தலைவர் எல்.கே.அத்வானி மறைமுகமாக எதிர்ப்புத் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக கட்சித் தலைவர் ராஜ்நாத்சிங்குக்கு அத்வானி ஒரு கடிதம் எழுதியுள்ளார். அதில் வரும் 5 மாநில சட்ட சபைத் தேர்தல் பொறுப்பாளராக நிதின்கட்காரியை நியமிக்க வேண்டும் என்று சிபாரிசு செய்துள்ளார்.

5 மாநில தேர்தலில் கட்சியின் பிரசாரத்தை வழிநடத்திச் செல்ல நிதின் கட்காரிதான் தகுதியானவர் என்றும் குறிப்பிட்டுள்ளார். இதன் மூலம் அவர் நரேந்திர மோடிக்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளது தெரியவந்துள்ளது. ஆனால் ஆர்.எஸ்.எஸ்.அமைப்பு நிர்வாகிகள் நரேந்திரமோடியிடம் 5 மாநில தேர்தல் பொறுப்பை வழங்க வேண்டும் என்று விரும்புகின்றனர்.

நிதின்கட்காரி தலைவராக இருந்த போது ஊழல் புகார் சுமத்தப்பட்டதால் பதவி விலகினார். என்றாலும் தற்போது அத்வானி சிபாரிசுசெய்திருப்பதை கட்சித் தலைவர் ராஜ் நாத்சிங் ஏற்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளார்.

# தேர்வில் சாதனை படைத்த மாணவிக்கு ஒருநாள் கௌரவமேயர் பதவி

மத்திய பிரதேச மாநிலத்தில் பிளஸ் 2 தேர்வில் சாதனை படைத்த மாணவிக்கு கௌரவ மேயர் பதவி அளிக்கப்படுகிறது.

'முதல்வன்' சினிமா படத்தில் நடிகர் அர்ஜுன் ஒருநாள் மட்டும் முதல்-மந்திரியாக இருந்து ஆட்சி செய்வார். அதுபோல் பிளஸ்-2 மாணவிக்கு ஒருநாள் மேயர் பதவி கிடைத்துள்ளது. ஒரு நாள் முதல்வர் சினிமாவில் மட்டும்தான். ஆனால் மாணவி மேயர் ஆவது நிஜம்.

மேயர் பதவிவகிக்கப் போகும் அந்த மாணவி பெயர் சுனந்தா கயர்வர். மத்திய பிரதேச மாநிலம் உக்ஜைன் மாவட்டம் நக்தா என்ற நகரைச் சேர்ந்தவர். 17 வயதான சுனந்தா இங்குள்ள பாடசாலையில் பிளஸ் 2 படித்து வந்தார். அவர் பிளஸ் 2 தேர்வில் 91.8 சதவீத மதிப்பெண்கள் எடுத்து நக்தா நகரில்



முதல் மாணவியாக தேர்ச்சி பெற்றுள்ளார்.

இதையடுத்து மாணவியை கௌரவிக்கும், மாணவ, மாணவிகளை கல்வியின் மேல் ஆர்வம் கொள்ளச் செய்யும் வகையிலும அவருக்கு ஒரு நாள் மேயர் பதவி வழங்க முடிவு செய்யப் பட்டுள்ளதாக நகரின் மேயர் ஷோபா யாதவ் அறிவித்துள்ளார். வருகிற 28ஆம் திகதி (செவ்வாய்க்கிழமை) மாணவி சுனந்தா மேயர் பொறுப்பு ஏற்கிறார்.

அன்று காலை முதல் மாலை வரை மேயர் இருக்கையில் அமர்ந்து மேயர் பணிகளை கவனிப்பார். இதற்கான சட்ட நடைமுறைகளையும் மேயர் ஷோபா யாதவ் செய்து அரசிடம் முறைப்படி அனுமதி பெற்றுள்ளார்.

25ஆம் திகதி மேயர் பதவியில் அமரும் மாணவி சுனந்தா அன்றைய தினம் நகரில் பொது மக்கள் பயன்பாட்டுக்காக ரூ.40 இலட்சம் செலவில் சாலை அமைக்கும் திட்டத்தில் கையெழுத்திடுகிறார். தந்தை தொழிற்சாலையில் பணிபுரிகிறார். தாய் அங்கன்வாடி ஊழியர். சுனந்தாவின் உடன் பிறந்தோர் மொத்தம் 4 பேர்.

தான் பொறியியலாளராகி குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டும் என்பதே நோக்கம் என்று சுனந்தா தெரிவித்தார்.

# இந்திய மத்திய அரசைக் கண்டித்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மறியற்போராட்டம்

மத்திய அரசின் தவறான பொருளாதார கொள்கை, நில உச்சவரம்பு சட்டத்தைத் திருத்தி நிலமற்ற விவசாயிகளுக்கு நிலங்கள் வழங்க வேண்டும், பாலியல் வன் கொடுமைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். சில்லறை வணிகத்தில் அன்னிய நேரடி முதலீட்டை அனுமதிக்கக் கூடாது என்ற கோரிக்கைகளை வலியுறுத்தி மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு சார்பில் நாடு தழுவிய மறியற் போராட்டம் நடந்தது.

சென்னையில் குறளகம், கிண்டி இரயில் நிலையம், உட்பட 9 இடங்களில் மறியள் போராட்டம் நடை பெறும் என்று அறிவித்திருந்தனர். ஆனால் போராட்டத்துக்கு அனுமதி வழங்கப்பட வில்லை. தடையை மீறி போராட்டம் நடாத்த தொண்டர்கள் திரண்டனர். குறளகம் எதிரில் மாநில செயலாளர் ஜி.ராமகிருஷ்ணன் தலைமையில் கட்சியினர் திரண்டு ஆர்ப்பாட்டம் நடாத்தினார்கள். பின்னர் அங்கிருந்து பூக்கடை எதிரில் உள்ள தொலைபேசி அலுவலகத்தை முற்றுகையிட வந்தனர். ஆனால் பொலிஸார் தடுப்பு வேலிகள் அமைத்து அவர்களைத் தடுத்தனர். இதனால் போராட்டக் காரர்களுக்கும், பொலிஸாருக்கும் இடையே வாக்கு வாதம் ஏற்பட்டது. தடுப்பு வேலிகளைத் தாண்டிச் செல்ல முயன்றதால் பொலிஸாருடன் முரண்பாடு ஏற்பட்டது. இதையடுத்து போராட்டத்தில் ஈடுபட்ட ஜி.ராமகிருஷ்ணன் உட்பட 300 பேரைப் பொலிஸார் கைது செய்தனர். அம்பத்தூர் உழவர் சந்தை அருகே மாவட்ட செயற்குழு உறுப்பினர் சுந்தர்ராஜ் தலைமையில் மறியலில் ஈடுபட்ட 54 பேரை பொலிஸார் கைது செய்தனர்.

ஆவடி புதிய இராணுவ சாலையில் மறியலில் ஈடுபட்ட முன்னாள் எம்.எல்.ஏ. மகேந்திரன், திருநின்றவூரில் மறியல் செய்த செயற்குழு உறுப்பினர் பன்னீர்செல்வம் உட்பட 60 பேர் கைது செய்யப்பட்டனர்.

வாழ்க வளமுடன்

பெயர் : கி.நிதுசியா

முகவரி : நாவாந்துறை

அகவை 7 இல்

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்



வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ........................................

முகவரி : ........................................

பிறந்த ஆண்டு : ........................................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும்


........................................

பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

# நைஜீரிய யுரேனிய சுரங்கம் மீது தற்கொலைப்படை தாக்குதல்

## 21 பேர் உயிரிழப்பு



இராணுவ பாசறை மற்றும் பிரான்ஸ் அரசால் நடாத்தப்படும் யுரேனியம் சுரங்கத்தின் மீது நைஜீரியாவில் இயங்கி வரும் இஸ்லாமிய தீவிரவாதிகளின் தற்கொலை படை நேற்று முன்தினம் நடத்திய தாக்குதலில் 21 பேர் கொல்லப்பட்டனர்.

மாலியில் இஸ்லாமிய தீவிரவாதிகள் மீது தாக்குதல் நடத்திவரும் பிரேஞ்சு படைகளுக்கு பதிலடி கொடுக்கும் விதமாக இந்தத் தாக்குதல் நடாத்தப்பட்டதாக முஜ்வா தீவிரவாத இயக்கம் தெரிவித்துள்ளது.

நைஜீரியாவின் அகாடேஸ் பகுதியில் உள்ள இராணுவ முகாம் மற்றும் அர்லிட் பகுதியில் உள்ள அரேவா யுரேனியம் சுரங்கம் ஆகிய இடங்களில் முஜ்வா இஸ்லாமிய தீவிரவாத இயக்கத்தைச் சேர்ந்த தற்கொலை படையினர் நடத்திய தாக்குதலில் 21 இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டதாகவும், 16 வீரர்கள் படுகாயமடைந்ததாகவும் நைஜீரியா பாதுகாப்பு துறை மந்திரி மஹமடோ கரிட்ஜோ தெரிவித்தார்.

3 இஸ்லாமிய தீவிரவாதிகளும் இச்சம்பவத்தில் கொல்லபபட்டதாக அவர் கூறினார்.


3 இராணுவ வீரர்களை ஒரு தீவிரவாதி பிணையக் கைதியாக பிடித்து வைத்துள்ளான். வீரர்களை மீட்பதற்கான நடவடிக்கையில் இராணுவம் ஈடுபட்டுள்ளது எனவும் அவர் தெவித்தார்.

## நாடாளுமன்ற உறுப்பினருக்குச் சிறை




பிரான்சின் ஆளுங்கட்சியான இடதுசாரி சோசலிசக் கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்றப் பெண் உறுப்பினரான சில்வியா ஆண்டுரூஸ் (Sylvie Andrieux), அரசுப் பணத்தை போலி நிறுவனங்களுக்கு வழங்கிய குற்றத்திற்காக ஒரு இலட்சம் யூரோ அபராதமும், ஓராண்டு சிறைத்தண்டனையும் பெற்றுள்ளார். நிதியமைச்சர் ஜெரோம் சகுசாக்(Jerome Cahuzac) கறுப்புப்பண வழங்கிய மோச்டியில் சிக்கி பதவி இழந்த நிலையில், தற்பொழுது சில்வியா ஆண்டுரூசும் சிறைத தண்டனை பெற்றது பிரான்ஸ் ஜனாதிபதி ஹோலாண்டிற்கு அடி மேல் அடியாக உள்ளது.


சில்வியா, தனக்கு வாக்களித்து வெற்றி பெற வைத்த நல்ல உள்ளங்களுக்கு நன்றிக்கடன் செலுத்தும் வகையில் போலியாகத் தயாரித்தளித்த நிறுவனக் கோரிக்கைகளுக்கு அரசு நிதியை அள்ளி வழங்கியுள்ளார். ஆனால் தன் மீதான குற்றச்சாட்டை அவர் மறுத்துள்ளார். இதனையடுத்து ஜனாதிபதி ஹோலாண்டு, பிரான்சின் இருக்கும் 1200 அரசியல்வாதிகளின் சொத்து பற்றிய விபரங்களை அளிக்கும்படி உத்தரவிட்டுள்ளார். மேலும் மோசடியில் ஈடுபட்டவர்கள் தங்கள் பொதுப் பதவிகளைப் பெறுவதற்கும் தடை விதிக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.



ருவாண்டா நாட்டிற்குச் சென்ற ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கி மூனிற்கு, கிகாலி நகரில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

## மக்களுடன் பேருந்தில் பயணித்த இங்கிலாந்து மகாராணி







இங்கிலாந்து ராணி இரண்டாம் எலிசபெத் மக்களோடு மக்களாக பேருந்தில் பயணம் செய்தார்.

இங்கிலாந்தின் கேம்பிரிட்ஜ் நகரில் சுமார் 212 மில்லியன் பவுண்ட் செலவில் கட்டப்பட்டுள்ள மருத்துவ ஆய்வு மையத்தின் திறப்பு விழாவிற்கு, ராணி இரண்டாம் எலிசபெத் சிறப்பு ரயில் மூலம் வந்திருந்தார்.

விழா நடக்கும் இடத்திற்கு அவரை அழைத்து செல்ல கார் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.ஆனால் அவர் பொதுமக்கள் பயணம் செய்யும் பேருந்தில் செல்ல விருப்பம் தெரிவித்தார்.இதையடுத்து, விழா நடக்கும் இடத்திற்கு ராணி மக்களோடு மக்களாக பேருந்தில் பயணம் செய்தார். இதை மக்களும் மகிழ்ச்சியுடன் பார்த்து இரசித்தனர்.

உலகச் செய்திகள்

## பாகிஸ்தானுக்கு சவுதி அரசு 15 பில்லியன் டொலர் உதவி



பாகிஸ்தானுக்கு சவுதி அரசு கடந்த காலங்களில் பல உதவிகளை செய்து வந்தது. குறிப்பாக நவாஸ் ஹெரீப் ஆட்சியின் போது, தொடர்ந்து உதவிகள் வழங்கப்பட்டு வந்தன.கடந்த 1998ஆம் ஆண்டு அணு ஆயுத செயற்பாடுகளில் ஈடுபட்டதற்காக பாகிஸ்தான் மீது கடும் பொருளாதாரத் தடை விதிக்கப்பட்டது. ஆனால் அத்தடையை மீறி சவுதி அரசு கடந்த 1998ம் ஆண்டு முதல் 2002ஆம் ஆண்டு வரை 3.5 பில்லியன் மதிப்பிலான எண்ணெய வழங்கி உதவி செய்தது. இதில் ஒரு குறிப்பிட்ட பகுதியை தள்ளுபடி செய்தது. மீதி தொகையை அவர்களின் வசதிப்படி திரும்பச் செலுத்தும் சலுகையையும் வழங்கியது. அதன் பின்னர் கடந்த 1999ஆம் ஆண்டு நவாஸ் ஷெரீப்பின் ஆட்சி கவிழ்க்கப்பட்டது.

அப்போது அவர் வெளிநாட்டில் தங்குவதற்கு சவுதி உதவி செய்தது. அதற்குப் பின்னர் அமைந்த ஜனாதிபதி ஆசிப் அலி சர்தாரி தலைமையிலான அரசு பல முறை உதவி கேட்டும் சவுதி அரசு வழங்கவில்லை. இந்நிலையில், பாகிஸ்தானில் மே 11ஆம் திகதி நடைபெற்ற தேர்தலில் நவாஸ் ஷெரீப்பின் கட்சி அதிக இடங்களில் வெற்றி பெற்றது. விரைவில் அவர் பாகிஸ்தானின் பிரதமராக பதவியேற்க உள்ளார்.

நவாஸ் ஷெரீப் சவுதி மன்னருக்கு நெருக்கமானவர் என்பதால் சவுதி அரசு பாகிஸ்தானுக்கான உதவியை 15 பில்லியன் டொலராக உயர்த்தும் என்று எதிர்பார்க்கப்படுவதாக பாகிஸ்தான் பத்திரிக்கை செய்தி வெளியிட்டுள்ளது. இதன் மூலம் ஒரு நாளுக்கு 15 ஆயிரம் தொன் பர்னஸ் ஆயில் மற்றும் ஒரு இலட்சம் பேரல் கச்சா எண்ணெய் கிடைக்கும் என்று பாகிஸ்தான் எதிர்பார்க்கிறது. இதற்கான பணத்தை மூன்று ஆண்டுகளில் வசதிப்படி திருப்பித்தரும் சலுகையையும் சவுதி வழங்கும் என்று தெரிகிறது.


## ஆளில்லா விமானத் தாக்குதலில் நான்கு அமெரிக்கர்கள் பலி

அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா, நேற்று முன்தினம் செனட் உறுப்பினர்களிடம் பயங்கரவாத எதிர்ப்பு குறித்து அரசு எடுத்து வரும் நடவடிக்கைகள் குறித்து உரையாற்றினார். அப்போது முதன்முதலாக இராணுவ நடவடிக்கையில் நான்கு அமெரிக்கர்கள் கொல்லப்பட்டதை ஒப்புக் கொண்டுள்ளார். எதிரிகளைத் தாக்கும் வண்ணம், முறைப்படுத்தப்பட்ட ஆளில்லாத இராணுவ விமானங்களைப் பயன்படுத்தி கடந்த 2009ஆம் ஆண்டு முதல் நான்கு அமெரிக்கர்கள் பாகிஸ்தானிலும், ஏமனிலும் கொல்லப்பட்டுள்ளனர்.

ஆனால், இது குறித்து அரசு சட்டதரனி எரிக் ஹோல்டர் எதுவும் வெளிப்படையாகத் தெரிவிக்கவில்லை. அல் அவ்லாகி என்ற தீவிர இஸ்லாமிய கணக்காளர் ஒருவர் கடந்த 2011ஆம் ஆண்டு, ஏமனில் இத்தகைய தாக்குதலில் கொல்லப்பட்டார். அதே வருடம் சமீர் கான் என்ற மற்றொரு அமெரிக்கரும் இதே வகையான தாக்குதலில் கொல்லப்பட்டுள்ளார்.டென்வரில் வாழ்ந்து வந்த அவ்லாகியின் 16 வயது மகனும் இதேபோன்று கொல்லப்பட்டதாக அரசு சட்டத்தரணி எரிக் ஹோல்டர், செனட்டின் நீதித துறைக் குழுவின் தலைவர் பாட்ரிக் லீஹிக்கு கடிதம் மூலம் தெரிவித்துள்ளார்.

இவர்களுள் அவலாகி தவிர, மற்ற மூவரும் எதிர்பாராதவிதமாக இந்தத் தாக்குதலுக்கு உள்ளானவர்கள் என்றும் 'அது குறித்து அமெரிக்க அரசு அறிந்திருந்தது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு கொல்லப்பட்ட மற்றொரு நபர் குறித்த தகவலும் சமீபத்தில் வெளிவந்துள்ளது. கடந்த 2009ஆம், ஆண்டில் குவாண்டிகோவில் உள்ள கப்பல் படைத்தளத்தை தாக்க முயன்று, பின்னர் பாகிஸ்தானின் பழங்குடியைச் சேர்ந்த ஜிகாதி தீவிரவாதிகளுடன் சேர்ந்த ஜுடே கெனான் முகமது என்பவரே இத்தகைய ஆளில்லாத இராணுவ விமானத்தால் கொல்லப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.




இரண்டாவது முறையாக ஜனாதிபதி பதவி ஏற்றவுடன், பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகள் குறித்து சட்டசபை உறுப்பினர்களுக்குத் தெரிய வேண்டும் என்று ஒபாமா கருதியதால் தான் அனைத்து விபரங்களையும் தெரிவித்துள்ளதாகவும் எரிக் ஹோல்டர் குறிப்பிட்டுள்ளார்.



பாகிஸ்தானின் குவெட்டா நகரில், பொலிஸாரை குறிவைத்து நடத்தப்பட்ட கார்வெடிகுண்டு தாக்குதலில், 12 பேர் பலியாயினர். தாக்குதலுக்கு பயன்படுத்தப்பட்ட வாகனத்தை பரிசோதிக்கும் பொலிஸார்.

# எங்கள் மீள்குடியேற்றக் கனவு நனவாகுவது எப்போது?

## செட்டிகுளத்தில் ஏக்கத்துடன் மக்கள்



(வவுனியா)

வவுனியா, செட்டிகுளம் பிரதேச செயலகப்பிரிவில் கங்கங்குளம் கிராம சேவகர் பிரிவில் உள்ள ஒற்றாக்குளம் கிராமத்தை சேர்ந்த மக்கள் தம்மை மீள் குடியேற்றுவதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவில்லை என குற்றம் சாட்டியுள்ளனர்.

1990 ஆம் ஆண்டு காலத்தில் இருந்து இடம்பெயர்ந்த உறவினர்களின் வீடுகளில் வசித்து வரும் இக்கிராம மக்கள் இது வரை தாம் மீள்குடியேற்றப்பட வில்லை என கவலை வெளியிட்டுள்ளனர்.

அவர்கள் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

1915 ஆம் ஆண்டு காலப்பகுதியில் எமது பெற்றோர் தொழில் நிமிர்த்தம் இப்பகுதியில் குடியேறியிருந்தனர். அதன் பின்னர் அவர்கள் தமது காணிகளுக்கு ஜெயபூமி உறுதியை பெற்று தமது வாழ்விடங்களை வளமாக்கியிருந்ததுடன் விவசாயத்தினையும் மேற்கொண்டு வந்தனர். அப்போது இங்கு 54 குடும்பங்களைச் சேர்ந்த 200 இற்கும் அதிகமானவர்கள் வாழ்நதிருந்தார்கள்.

அதன் பின்னர் இனக்கலவரம் ஆரம்பமாகியபோது 1983 ஆம் ஆண்டு இக் கிராமத்தில் இருந்து வெளியேறிய நாம் 1985 ஆம் ஆண்டு மீண்டும் குடியேறியிருந்தோம். அதன் பின்னர் 1990 ஆம் ஆண்டு யுத்தம் தீவிரமடைந்தபோது எமது உறவினர்கள் படுகொலை செய்யப்பட்டமையினால் நாம் மன்னார் சென்று இந்தியாவிற்குச் சென்று மீண்டும 1995 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இங்கு வந்த போது எமது கிராமத்தில் நாம் மீள்குடியேற முடியாத நிலை காணப்பட்டமையினால் செட்டிகுளத்தில் உள்ள எமது உறவினர், நண்பர்களின் வீடுகளில் வசித்து வருகின்றோம் எனத் தெரிவித்தனர்.

இதேவேளை எமது கிராமத்தில் 2000 ஆம் ஆண்டு இராணுவ முகாம் அமைக்கப்பட்டமையினால் தொடர்ச்சியாக நாம் எமது கிராமத்திற்குச் செல்ல முடியாதவர்களாக்கப்பட்டு உறவினர், நண்பர்களது வீடுகளிலும் நீண்ட காலம் வசிக்க முடியாதவர்களாக அல்லல்பட்டு தற்போது வாடகை வீடுகளிலும் தனியார்களின் காணிகளில் கொட்டில் அமைத்தும் வாழும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம்.

இந்நிலையில் எமது கிராமத்தில் இருந்து 2011 ஆம் ஆண்டு இராணுவத்தினர் வெளியேறி எம்மைக் குடியேற்ற முடியும் எனத் தெரிவித்திருந்த போதிலும் அப்பகுதியில் இராணுவ காவலரண்கள், இராணுவ மண் அரண்கள் அகற்றப்படாமல் உள்ளது. அத்துடன் மிதிவெடிகள் காணப்படலாம் என்ற அச்சமான நிலை எமக்குள்ளது.


இவ்வாறான சூழலில் எமது கிராமத்தை நாமாகவே துப்புரவு செய்து மீள்குடியேறுமாறு பணிக்கின்றனர். உயிராபத்து ஏற்படக்கூடிய இவ்வாறான அபாயகரத்திற்கு மத்தியிலும் போதுமான வருமானமின்றி வாழ்க்கை நடத்தும் எம்மிடம் துப்புரவு செய்து மீள்குடியேறுமாறு கூறுவது மனச்சாட்சிக்கு அப்பாற்பட்டதாகவே நாம் எண்ணுகின்றோம்.

இதற்குமப்பால் 44 குடும்பங்கள் நாம் தற்போது வசிக்கும் இடத்தில் உள்ள பதிவுகளை நிறுத்தி மீள்குடியேறுவதற்காக பதிவு செய்துள்ளமையினால் எவ்வித உதவித் திட்டங்களையும் பெறமுடியாதவர்களாக உள்ளதுடன் எமது கிராமத்திற்கான குடும்ப அட்டையை கூட கிராம சேவகரிடம் இருந்து பெற முடியாதவர்களாக ஆளாக்கப்பட்டுள்ளோம்.

இவ்வாறான நிலைமைகள் குறித்து நாம் செட்டிகுளம் பிரதேச செயலரிடம் முறையிட்டுள்ள போதிலும் எவ்வித பலனும் இன்றி அல்லல்படுபவர்களாக மாற்றப்பட்டுள்ளோம்.

எனவே யுத்தம் முடிவுற்று 4 வருடம் கடந்துள்ள நிலையில் பல கிராமங்களிலும் மக்கள் மீள்குடியேற்றப்பட்டுள்ள நிலையில் எமது கிராமம் மட்டும் மீள் குடியேற்றம் செய்யப்படாது உள்ளது தொடர்பில் செட்டிகுளம் பிரதேச செயலரும் வவுனியா அரசாங்க அதிபரும் கவனத்தில் கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்தனர்.

# யாழ். செயலகத்திலும் வெசாக் பந்தல் அரச அதிபர் தலைமையில் நிகழ்வு



(யாழ்ப்பாணம்)

யாழ். செயலகத்தில் நேற்று முன்தினம் வெசாக் தின நிகழ்வுகள் முதன்முறையாக சிறப்பாக நடைபெற்றுள்ளது.

யாழ். செயலகத்தின் முன் பகுதி வெசாக் தோரணங்கள், வெசாக் கூடுகளினால் அலங்கரிக்கப்பட்டு அங்கு விசேடமாக அமைக்கப்பட்ட வெசாக் பந்தலில் இந்த நிகழ்வுகள் நடைபெற்றன.

காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகிய இந்த நிகழ்வில் யாழ். நாகவிகாரையின் பிரதம குரு ஸ்ரீவிமலதேரர் யாழ். செயலக ஊழியர்களுக்காக இந்த நிகழ்வில் கலந்துகொண்டு வெசாக் தின வழிபாடுகளில் ஈடுபட்டார்.

யாழ். அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் யாழ். மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் மற்றும் யாழ். செயலக ஊழியர்கள் கலந்துகொண்டனர். இந்நிகழ்வை யாழ். செயலக ஊழியர் நலன் புரிச் சங்கம் ஒழுங்குசெய்திருந்தது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (பா)

## 13 ஆவது...

அரசு இந்த நாடகத்தை உடனடியாக நிறுத்தி, இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

13 பிளஸ்(13) என்ற நாடகத்தை அரசு தற்போது நடத்தி வருகிறது. இந்த நாடகத்துக்குத் திரைக்கதை வசனம் எழுதி இயக்குபவர் அமைச்சர் விமல் வீரவன்ச. அமைச்சர் சம்பிக்க ரணவக்கவும், உதய கம்மன்பிலவும் இந்த நாடகத்தின் பிரதான பாத்திரமேற்று நடிக்கின்றனர்.

13 ஆவது திருத்தச்சட்டத்தை ஒரு படமாக மட்டுமே அரசு காட்டுகிறது. நாட்டின் இனப்பிரச்சினைக்குத் தீர்வாக அரசு அதைக் கருதவில்லை.

எதிர்வரும் நவம்பர் மாதம் இலங்கையில் இடம்பெறவுள்ள பொதுநலவாய அரச தலைவர்களின் உச்சிமாநாட்டுக்கு முன்னர் வடக்குத் தேர்தலை அரசு நடத்தியாக வேண்டும். ஆனால், அரசுக்குள்ளும், வெளியிலும் இனவாதிகளால் மேற்கொள்ளப்படும் எதிர்ப்புகளால் அரசால் அந்தத் தேர்தலை நடத்த முடியாது. வடக்குத் தேர்தலை அரசு நடத்தாமல் விட்டாலும் அரசுக்கு சிக்கல் ஏற்படும்.

வடக்குத் தேர்தல் நிச்சயமாக நடத்தப்படும் என்று சர்வதேசத்துக்கு அரசு உறுதியளித்துள்ளதால் அதன் பிடிக்குள் அரசு சிக்கியுள்ளது. அதேவேளை, வடக்குத் தேர்தலை நடத்தினால் இனவாதிகளின் கடும் எதிர்ப்புகள் அரசுக்கு எதிராகக் கிளம்பும். இதனாலும் அரசு அச்சமடைந்துள்ளது.

13 ஆவது திருத்தச்சட்டம் மற்றும் வடக்குத் தேர்தல் விவகாரத்தில் சர்வதேசத்திடமும், இந்தியாவிடமும், ஐ.தே.க.விடமும், ஜே.வி.பி.யிடமும் அரசு ஒவ்வொரு கதையைக் கூறுகின்றது.

மூன்றிலிரண்டு பெரும்பான்மைப் பலம் இருக்கின்ற அரசு 13 ஆவது திருத்தச்சட்டம் மற்றும் வடக்குத் தேர்தல் சர்ச்சைகளுக்குத் தெளிவான - உறுதியான அறிவிப்பை விடுத்து முற்றுப்புள்ளி வைக்கவேண்டும். அத்துடன், இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வையும் காணவேண்டுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## பிக்கு...

மிருக பலி பூஜைகளைத் தடுக்க வேண்டும் என்று கடந்த காலங்களில் முன்னேஸ்வரம் இந்துக் கோயிலுக்கு முன்னால் பௌத்த பிக்குகள் போராட்டம் நடத்தியிருந்தனர்.

அதேபோல ஆடு, மாடுகள் இறைச்சிக்காக வெட்டப்படுவதைத் தடுக்க வேண்டும் என்றும் சில பௌத்த அமைப்புகள் குரல கொடுத்துவந்துள்ளன.

பௌத்தர்களுக்கு முக்கியமான வெசாக் முழுமதி நாளான நேற்று பௌத்த பிக்கு தீக்குளித்துக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## யூன் முதல்...

போதிலும் வட மாகாணத்தில் இதுவரை நடைமுறைப்படுத்தப் படாத நிலைமை காணப்படுகின்றது.

தற்போது ஏனைய மாகாணங்கள் போன்று வட மாகாணத்திலும் எதிர்வரும் முதலாம் திகதியில் இருந்து வாகனங்களுக்கான புகை பரீட்சித்தல் செயற்பாட்டை முன்னெடுக்கும்படி இலங்கை மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் எஸ்.எச்.ஹரிஸ்சந்திரா அறிவித்துள்ளார்.

வடமாகாணத்தில் உள்ள பிரதேச செயலகங்களின் போக்குவரத்துப் பிரிவுகளுக்கு வருடாந்த வரி அனுமதிப்பத்திரத்தை வழங்கும்போது புகை பரீட்சித்தல் சான்றிதழைப் பெற்று சரி பார்த்த பின்னரே நடப்பாண்டுக்கான வரி அனுமதிப்பத்திரங்களை முதலாம் திகதியில் இருந்து வழங்கும் படியும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## வடக்கின்...

தரப்பினர் என பலதரப்பட்டவர்களையும் சந்தித்திருக்கின்றார். அதன் பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரையும் இவர் சந்தித்திருக்கின்றார்.

இந்தச் சந்திப்பில் வடபகுதியின் முக்கிய நிலைமைகள் தேவைகள் குறித்து தாங்கள் எடுத்துக் கூறியதாக நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

இதேவேளை, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ வடமாகாண சபைக்கான தேர்தல் நடத்துவதை எதிர்த்திருக்கின்றார்.

அந்தத் தேர்தலில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு வெற்றிபெற்றால் காணி, பொலிஸ் அதிகாரங்களுடன் கூடிய தனிநாட்டு நிகழ்ச்சி நிரலைக் கொண்ட, அரசுக்கு விரோதமான நிர்வாகம் அங்கு உருவாகும் என்றும், அது தேசிய பாதுகாப்புக்குப் பெரும் அச்சுறுத்தலாக அமையும் என்றும் அரசாங்கத்தை அவர் எச்சரித்திருக்கின்றார்.

இது குறித்து தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு பற்றி கருத்து வெளியிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன், அதிகாரங்களற்ற மாகாண சபைக்கான தேர்தல் நடத்தப்படுமானால், அதில் போட்டியிடுவது குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பரிசீலனை செய்ய வேண்டியிருக்கும் என்று தெரிவித்தார்.

எனினும் அதிகாரங்களுடன் கூடிய வடமாகாண சபையைத் தக்க வைப்பதற்கான முயற்சிகளை ஏனைய எதிர்க்கட்சிகளுடன் இணைந்து தாங்கள் மேற்கொண்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

## தேசிய ஒருமைப்...

ஆவது திருத்தம் குறித்து கவனமாக பரிசீலிக்க வேண்டும்.

இல்லையேல் வடக்கு மாகாணசபை நிர்வாகம் ஈழத் திட்டத்தை தொடரக் கூடும். எனினும் வடக்கு மாகாணசபைக்குத் தேர்தலை நடத்த வேண்டிய தேவை உள்ளது.

ஆனால் விடுதலைப் புலிகளை அழிப்பதற்கு நாம் கடுமையான விலைகளைக் கொடுத்துள்ள நிலையில், மாகாண தேர்தல் நடத்துவது இன்னொரு போர்ச்சூழலை ஏற்படுத்துவதற்கான எமது முட்டாள்தனமான செயலாக அமையும்.

எனது விருப்பத்தை அரசாங்கத்தின் மீது திணிக்க முடியாது.

ஆனால், 13 ஆவது திருத்தத்தின் குறைபாடுகள் தொடர்பாக அவர்களுக்கு எடுத்துக் கூறுவேன். அது இன்னொரு மோதலுக்கான அடிப்படையாக இருக்கும். அரசாங்கம் உடனடியாக 13 ஆவது திருத்தம் குறித்து பரந்தளவிலான விவாதங்களை நடத்த வேண்டும்.

இந்த விவகாரம் தொடர்பாக பகிரங்க விவாதம் நடத்தப்பட வேண்டும். வடக்கு மாகாணத்துக்கு காணி, பொலிஸ் அதிகாரங்களை வழங்குவது பாதுகாப்புக்கு பிரதான சவாலாக அமையக் கூடும்.

அரசாங்கம் மேற்கொள்ளக் கூடிய பிரிவினைவாத எதிர்ப்பு விசாரணைகளில், தேர்தலின் பின் வடக்கில் உருவாகக்கூடிய முரண்பட்ட மாகாண நிர்வாகம் ஒன்று தலையிடக்கூடும்.

விடுதலைப் புலிகள் இந்திய - இலங்கை உடன்பாட்டை ஏற்றுக் கொண்டிருந்தார்களேயானால் மிகச் சுலபமாக ஈழத்தை அடைந்திருக்க முடியும்.

தனியான நிர்வாகத்தை கோருவதற்கு வசதியான 13 ஆவது திருத்தத்தை அவர்கள் அப்போது சரிவரப் புரிந்து கொள்ளத் தவறிவிட்டனர்.

இராணுவ ஆற்றல் மீதான மிகையான நம்பிக்கையும், திமிரும் தான் அவர்களை 1987 ஒக்ரோபரில் இந்தியப்படைகளுக்கு எதிராகப் போரைப் பிரகடனம் செய்யத் தூண்டியது என்றும் கோத்தாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

# தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியை முடக்குவதற்கே கஜேந்திரன் மீது குறி

## கூறுகிறார் கஜேந்திரகுமார்

(கொழும்பு)

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியை முடக்கும் வகையிலேயே கட்சியின் பொதுச் செயலாளர் கஜேந்திரனை அரசின் வேண்டுகோளுக்கிணங்க பயங்கரவாதத் தடுப்புப்பிரிவினர் தொடர்ந்து விசாரணைக்கு உட்படுத்தியுள்ளனர். எனினும், எமது கட்சியை அரசால் ஒருபோதும் முடக்கமுடியாது.

இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் தெரிவித்தவை வருமாறு,

கடந்த 18 ஆம் திகதி மன்னாரில் நடைபெற்ற முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வில் கலந்துகொண்ட எமது கட்சியின் பொதுச் செயலாளர் செல்வராஜா கஜேந்திரன் உட்பட உறுப்பினர்கள் பலரைக் கைதுசெய்த மன்னார் பொலிஸார், அவர்களைப் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரிடம் ஒப்படைத்தனர். அவர்கள் தீவிர விசாரணையின் பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

இந்நிலையில், எமது கட்சியின் பொதுச் செயலாளரை கடந்த புதன்கிழமை பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் தமது யாழ். அலுவலகத்திற்கு அழைத்து கட்சியின் நடவடிக்கைகள் மற்றும் கணக்கு விவரங்கள் தொடர்பாகத் துருவித்துருவி விசாரணை நடத்தியுள்ளனர்.

இதன் பின்னர் மறுநாள் வியாழக்கிழமையும் எமது கட்சியின் பொதுச் செயலாளர் கஜேந்திரனை தமது யாழ். அலுவலகத்திற்கு மீண்டும் அழைத்த பயங்கரவாதத் தடுப்புப்பிரிவினர் அவரை விசாரணைக்கு உட்படுத்தியுள்ளனர்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியை முடக்குவதற்காகவே கட்சியின் பொதுச் செயலாளர் கஜேந்திரனை அரசின் வேண்டுகோளுக்கிணங்க பயங்கரவாதத் தடுப்புப்பிரிவினர் தொடர்ந்து விசாரணைக்குட்படுத்தி வருகின்றனர். எனினும், எமது கட்சியை அரசால் ஒருபோதும் முடக்கமுடியாது.

நாம் தொடர்ந்து அரசின் அராஜகங்களுக்கு எதிராக மக்கள் பக்கம் நின்று குரல் கொடுப்போம். வடக்கு, கிழக்கில் இராணுவ ஆக்கிரமிப்புகள் நிறுத்தப்படவேண்டும் என்பதில் எமது கட்சி உறுதியாக உள்ளது.

அதேவேளை, தமிழர் தாயகத்தில் இடைக்கால நிர்வாகம் உருவாகவேண்டும் எனவும், அதுவே தமிழர் எதிர்பார்க்கும் தீர்வுக்கான வெற்றிப்படியாக அமையும் எனவும் எமது கட்சி தொடர்ந்து சர்வதேச நாடுகளிடம் வலியுறுத்தி வருகின்றது.

இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

# சுதந்திரத்தைப் பெற்றுக்கொள்ள பாரியளவில் விலை கொடுப்பு

## சவேந்திர சில்வா தெரிவிப்பு

பெரியளவிலான விலையைக் கொடுத்தே இலங்கையில் சுதந்திரத்தைப் பெற்றுக்கொண்டோம் என ஐக்கிய நாடுகள் அமைப்பிற்கான இலங்கையின் பிரதி வதிவிடப் பிரதிநிதி மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார். யுத்தம் நிறைவுக்கு கொண்டு வரப்பட்டு நான்கு ஆண்டு வெற்றி விழா நியூயோர்க்கில் நடைபெற்றது. அந்த நிகழ்வில் கலந்துகொண்ட போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

பயங்கரவாதிகளிடமிருந்து நாட்டைப் பாதுகாப்பதற்கு பாரியளவிலான விலை கொடுத்துள்ளோம். அதற்காக உயிர்த்தியாகம் செய்தவர்களை மறந்துவிடக் கூடாது. அத்துடன் யுத்தத்தின் போது உயிர் மற்றும் உடல் உறுபபுக்களை இழந்து நாட்டைப் பாதுகாப்பதற்கு போராடிய அனைவருக்கும் நன்றி பாராட்ட வேண்டியது அவசியமானது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# தனியார் மருந்தகங்கள் மீது அதிரடி சோதனைக்கு திட்டம்

காலங்கடந்த மருந்து விற்பனையை ஒழிக்கும் நோக்குடன் தனியார் மருந்தகங்களிலும், தனியார் மருந்துக் களஞ்சியசாலைகளிலும் திடீர்சோதனைகளை நடாத்துவதற்கு முடிவுசெய்துள்ளதாகத் தேசிய மருந்துப் பொருள் மற்றும் அழகு சாதனப் பொருட்கள் அதிகார சபை பணிப்பாளர் டாக்டர் ஹேமந்த பெனரக தெரிவித்துள்ளார்.

சில தனியார் மருந்தகங்களில் காலங்கடந்த மருந்துப் பொருட்களைக் களஞ்சியப்படுத்தி அவற்றை சூட்சுமமான முறையில் விற்பனை செய்வதாகத் தகவல்கள் கிடைத்துள்ளன.

இதன் அடிப்படையிலேயே இத் திடீர் சோதனைகளை நடாத்துவதற்குத் தீர்மானித்ததாகவும் அவர் கூறினார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில், காலங் கடந்த மருந்துகளை விற்பனை செய்யவோ, களஞ்சியப்படுத்தி வைக்கவோ முடியாது. அது சட்ட விரோதமான செயல். அதேநேரம காலங்கடந்த மருந்துகள் மனித உடலுக்கு நஞ்சாகவும் மாறலாம்.

இருந்தும் சில தனியார் மருந்தகங்களில் காலங்கடந்த மருந்துப் பொருட்களைக் களஞ்சியப்படுத்தி அவற்றைச் சூட்சுமமான முறையில் விற்பனை செய்வதாக தகவல்கள் கிடைத்துள்ளன. ஆனால் காலங்கடந்த மருந்துப் பொருட்களை களஞ்சியப்படுத்தி வைத்திருப்பது சூட்சுமமான முறையில் விற்பனை செய்வதும் சட்டவிரோதமான செயற்பாடுகளாகும். இச்செயலில் ஈடுபடுவோருக்கு எதிராகக் கடும் சட்டநடவடிக்கை எடுக்கப்படும்.

இதன் காரணத்தினால் இது விடயமாக திடீர் சோதனைகளை ஆரம்பிக்கவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

# முன்னாள் பிரதம நீதியரசர் குறித்து சட்டமா அதிபர் மேன்முறையீடு

## விஜிதஹேரத் எம்.பி. எதிர்மனு

முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க தொடர்பில் நாடாளுமன்ற தெரிவுக்குழு வழங்கிய தீர்ப்பை இரத்து செய்யக்கோரும் மேன்முறையீட்டு நீதிமன்ற உத்தரவிற்கு எதிராக சட்டமா அதிபர் உயர் நீதிமன்றில் தாக்கல் செய்துள்ள மனுவிற்கு எதிர்ப்பு முன்வைக்கப்பட்டுள்ளது. ஜே.வி.பி.நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் இந்த எதிர்ப்புமனுவை தாக்கல் செய்துள்ளார்.

சட்டமா அதிபர் தாக்கல் செய்துள்ள மேன்முறையீட்டு சட்டதிட்டங்களுக்கு உட்பட்டதல்ல என விஜித ஹேரத் தனது மனுவில் தெரிவித்துள்ளார்.

இந்த மேன்முறையீட்டை விசாரிக்க உயர் நீதிமன்றம் அனுமதி அளித்தமைக்கு அவர் எதிர்ப்பு தெரிவித்துள்ளார்.

சட்டமா அதிபரின் மனுவை எதிர்வரும் 29 ஆம் திகதி விசாரிக்க தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையில் அன்றையதினம் மனுவிசாரணைக்கு எடுத்து க்கொள்ளப்படக் கூடாது என விஜித ஹேரத் தனது எதிர்ப்பு மனுவில் கோரியுள்ளார்.

# பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்ட பஸ் உரிமையாளர்களிடம் விளக்கம்

## தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தீர்மானம்

கடந்த 20 ஆம் திகதி பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்ட பஸ் உரிமையாளர்களிடம் விளக்கம் கோருவதற்குத் தேசிய போக்குவரத்து ஆணைக் குழு தீர்மானித்துள்ளது.

எதிர்வரும் 29 ஆம் திகதி காலை 9.30 மணியிலிருந்து பிற்பகல் 3.00 மணிவரை பஸ் உரிமையாளர்களிடம் விளக்கங்களைக் கேட்டறியவுள்ளதாக ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அன்றைய தினம் சேவையில் இருந்து விலகியிருந்த மாகாணங்களுக்கு இடையிலான அனைத்து பஸ் உரிமையாளர்களும் தமது நியாயங்களை சமர்ப்பிக்க வேண்டுமென ஆணைக் குழுவின் தலைவர் ரொஷான் குணவர்தன கூறியுள்ளார்.

இதன்போது ஏற்றுக்கொள்ளக் கூடிய நியாயமான காரணங்களை முன்வைக்காத பஸ் உரிமையாளர்களின் பயணிகள் சேவைக்கான அனுமதிப்பத்திரங்களை இரத்துச் செய்யவுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சிறந்த பயணிகள் போக்குவரத்து சேவையை மக்களுக்கு வழங்குவதாகக் கூறி அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக்கொண்ட பின்னர் குறுகிய இலாபம் கருதி செயற்பட்டு மக்களை சிரமத்திற்கு உள்ளாக்குவோருக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கவுள்ளதாக தேசிய போக்குவரத்து ஆணைக் குழுவின் தலைவர் தெரிவித்தார். இது தொடர்பில் எழுத்து மூலமும் தொலைபேசி மூலமும் பல்வேறு முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக அவர் கூறினார்.

# வவுனியா குருமன்காடு பகுதியில் இரு வர்த்தக நிலையத்தில் திருட்டு

வவுனியாவில் அண்மைக் காலமாக தொடர்ந்து இடம் பெற்றுவரும் திருட்டுச் சம்பவங்களின் வரிசையில் நேற்றுக் காலை குருமன்காடு பகுதியில் இரு கடைகளில் திருட்டு இடம்பெற்றுள்ளது.

குருமன்காட்டுச் சந்தியில் அமைந்துள்ள கைத்தொலைபேசி விற்பனை நிலையம் மற்றும் வீடியோ கடை என்பவற்றிலேயே இத்திருட்டு இடம்பெற்றுள்ளது. இச்சம்பவத்தில் சுமார் 25,000 ரூபாய் வரையிலான பணமும் 25 இற்கும் அதிகமான பெறுமதிமிக்க கைத்தொலைபேசிகளும் திருட்டுப்போயுள்ளதாக கடைகளின் உரிமையாளர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை கடந்த சில நாட்களாக சாளம்பைக்குளம், கூமாங்குளம் ஆகிய பகுதிகளில் இரவு வேளைகளில் ஆயுதங்களுடன் சென்று பல இலட்சம் ரூபாய் பெறுமதியான பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்ட சம்பவங்கள் தொடர்பிலும் வவுனியா பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பில் விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வரும் நிலையில் மீண்டும் குருமன்காடுப் பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றமையானது மக்கள் மத்தியில் அச்சமான நிலையை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில் திருட்டுச் சம்பவம் இடம்பெற்ற குருமன்காடு பகுதியில் செய்தி சேகரிக்க சென்ற ஊடகவியலாளர் ஒருவர் தன்னை அடையாளப்படுத்தி செய்தி சேகரித்தபோது அவரின் புகைப்படக்கருவி வவுனியா குற்றத் தடுப்பு பிரிவைச் சேர்ந்த பொலிஸ் அதிகாரியினால் பறிமுதல் செய்யப்பட்டதுடன், அதனை வவுனியா பொலிஸ் நிலையத்தில் வந்து பெற்றுச் செல்லுமாறும் பணிக்கப்பட்டது.

இதனையடுத்து குறித்த ஊடகவியலாளர் தனது ஊடகவியலாளர் அடையாள அட்டையை காட்டி மீண்டும் தன்னை அடையாளப்படுத்திய போதிலும் நீண்ட நேரத்தின் பின்னர் அவரின் புகைப்படக் கருவி கையளிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(160)

# இறுதிப்போட்டியில் மும்பை வெளியேறியது ராஜஸ்தான்

(கொல்கத்தா)

ராஜஸ்தான் றோயல்ஸ் அணியுடனான பிளேஓப் சுற்று இறுதிப் போட்டியில் 4 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்ற மும்பை இன்டியன்ஸ் சென்னை சுப்ப கிங்ஸுடனான இறுதிப் போட்டியில் விளையாடவுள்ளது.

முன்னதாக நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ராஜஸ்தான் றோயல்ஸ் அணியின் ராவிட், ரகானே ஆரம்ப இணை சிறப்பாக விளையாடிய போதிலும் பின்னர் வந்த வட்சன் 8, சம்சன் 0, என ஆட்டமிழக்க அணியின் ஓட்ட எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டது. எனினும் பின்னர் வந்த பின்னி 27, அதி ரடியாக ஆடிய யக்நிக் 31, ஹொட் 19, ராவிட் 43, ரகானே 21 ஓட்டங்களும்பெற அணி 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டு க்களை இழந்து 165 ஓட்டங்களைப் பெற்றது. பந்து வீச்சில் ஹர்பஜன் 3, போலார்ட் 2, மலிங்க ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

பதிலுக்கு 166 என்ற வெற்றி இலக்குடன் களமிறங்கிய மும்பை அணிக்கு ஸ்மித் ரே இணை அதிரடியில் வெளுத்து வாங்கியது. இவ் இணை 9.1 ஓவரில் 70 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் ரே (35) ஆட்டமிழந்தார். பின்னர் வந்த கார்த்திக் 22, ரோகித் சர்மா 2, ஆரம்ப வீரரர் ஸ்மித் 62, போல்லா ர்ட் 11, என ஆட்டமிழக்க வெற்றி ராஜஸ்தான் றோயல்ஸ் பக்கம் சாய்நதது.

எனினும் அம்பதிராயுடுவின் (17) 2 சிக்ஸர்களும், ஹர்பஜன் (6), தவானின் (4) இறுதிநேர பவுண்டரிகளும் கைகொடுக்க மும்பை இண்டியன்ஸ் 169 ஓட்டங்களை எடுத்து 4 விக்கெட்டால் வெற்றிபெற்றது. பந்துவீச்சில் கூப்பர் 2, போல்க்கனர், வட்சன், திரிவதி மற்றும் பின்னி ஆகியோர்தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர். ஆட்டநாயகனாக ஹர்பஜன் சிங் தெரிவானார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 மே 25 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.